KI 29.12.91 ரூ. 3.00

கல்கி

பொன்விழா ஆண்டு

இந்த இதழுடன்
காலண்டர் பரிசுகள்!



பி.ஜே.பி.:

எழுச்சிகளும் பின்னடைவுகளும்...



Gx.429.91 Tm

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கிறது.


கல்கி
12.1.92
பொங்கல்
சிறப்பிதழில்
டான் கலிலியோ
பரபரப்பான மர்மத் தொடர் ஆரம்பம்
எழுதுபவர் : குமுதம் மர்ம நாவல்
போட்டியில் ரூ. 7500/- முதல் பரிசு
பெற்ற
பத்மா ரவிசங்கர்
மற்றும் பல புதுமையான
அம்சங்கள்
அதிக பக்கங்கள்; அதே விலை



ஸ்ரீநகருக்குப் புறப்பட்ட ரதம்...

ஏகதா யாத்திரை எதற்காக?

மூக்கடலும் சங்கமிக்கும் கன்யாகுமரி. ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பா. ஜ. க. வின் கொடி, தோரணங்கள், ஸ்பீக்கர்களில் 'வந்தே மாதரம்', 'ஜெய் ஸ்ரீராம்!'

தனது 15,000 கி.மீ. ஏகதா யாத்திரையைத் துவக்குவதற்கு முன்னர், காலை ஐந்து மணிக்கெல்லாம் சரிகை வேட்டி, சரிகை அங்கவஸ்திரம், நெற்றியில் குங்குமப் பொட்டு மற்றும் குடும்ப சகிதம் பகவதி அம்மனின் அருளை வேண்டி அவளது சந்நிதியில் நின்றார் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் முரளி மனோஹர் ஜோஷி.

பிறகு விவேகானந்தர் பாறையில் உள்ள தியான மண்டபத்தின் உள்ளே உறுதிமொழி எடுத்துக் கொண்டார் : ''எங்களைத் தியாகம் செய்தாவது நாட்டு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்போம் என்று இந்தத் தருணத்தில் சூளுரைக்கிறோம்.''

இந்த உறுதிமொழிக்குப் பிறகு, விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்திருந்த யாகத்திலும் கலந்து கொண்டார்.

யாத்திரை துவக்க விழா மேடை, கடற்கரையை ஒட்டிப் போடப்பட்டிருந்தது. மேல்கூரை இல்லாமல் போடப்பட்ட மேடை. அதில் ஆதிசங்கரர், சுப்பிரமணிய பாரதி, படேல் போன்ற ஞானிகள், பெரியோர்கள் படங்கள்.

மேடையில் நான்கு சிறு கலசங்களில் நாட்டின் புண்ணிய நதிகளிலிருந்து எடுத்து வரப்பட்ட புனித நீர் மற்றும், மகான்கள், ஞானிகள் அவதரித்த புண்ணிய பூமியிலிருந்து எடுத்து வரப்பட்ட மண் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு ரதங்கள் மேடைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வெள்ளை வண்ண ரதம், காஷ்மீர் படகு வீடு மாடலில் அமைக்கப்பட்டிருந்தது. எல்லாம் குஜராத் மாநில கட்சிச் செயலாளர் நரேந்திர மோடியின் ஏற்பாடு. சிவப்பு வண்ணத் தொப்பி அணிந்து கொண்டு ஜெய்ஸ்ரீராம் கோஷம் போடும் தொண்டர்கள். ரதத் துக்குச் சாரதி ஒரு சீக்கிய இளைஞர்!

சுமார் ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டம், ஜு◦ர வேகத்தில் 'வந்தே மாதரம், ஜெய் ஸ்ரீராம் ஓம் காளி, ஜெய் காளி' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தது.

மேடையில் தலைவர்களுக்கு இடையில் பச்சை சபாரியில் சோ. அடிக்கும்

☛ குடும்பத்துடன் ஜோஷி



வெயிலைத் தாங்க முடியாமல், அடிக்கடி மேடையின் பின்புறத்தில் போய் நின்று கொண்டார்.

''ராமர் ஹிந்துக்களுக்கு மட்டும் சொந்தமானவரல்ல; அவர் இந்தியக் கலாசாரத்தைப் பிரதிபலிப்பவர். இந்திய தேசியத்தைப் பிரதிபலிப்பவர். இந்த ரதயாத்திரையால் கலவரம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அத்வானி சென்றபோது ஏற்பட்டதா?'' என்று கேட்டார் துணைத் தலைவர் சிக்கந்தர் பக்த்.

''1990ல் நான் சென்ற யாத்திரை போலி மதச்சார்பின்மையை எதிர்த்தது; இப்போது ஜோஷி அவர்கள் செல்லும் யாத்திரை, பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்து. பாரத அன்னையின் காலைத் தொட்டு ஆசி வாங்கிக் கிளம்புவது போல கன்யாகுமரியில் இருந்து ஜோஷி கிளம்புகிறார். தேசம் இன்னொருமுறை பிரிவினைக்குள்ளாவதை நாங்கள் அனுமதிக்கவே முடியாது'' என்று முழங்கினார் அத்வானி.

ஸ்ரீநகரில் உள்ள லால் சௌக்கில் ஏற்ற வேண்டிய தேசியக் கொடியைப் பகத்சிங், ராஜகுரு சகோதரர்களும், 1965-ல் உயிர்நீத்த 'பரம் வீர்சக்ர' விருது பெற்ற அப்துல் ஹமீதின் மகன்களும் ஜோஷியிடம் வழங்கினார்கள். பின்னர் ஜோஷியின் உரைக்குப் பிறகு அத்வானி ரதத்துக்கு முன்னால் தேங்காய் உடைக்க, ரதம் ஸ்ரீநகரை நோக்கிக் கிளம்பியது. எல்லாம் திட்டமிட்டபடி நடந்தால், வரும் ஜனவரி 26-ம் தேதி அங்கு தேசியக் கொடியேற்றப்படும்.

☛ ஏற்ற வேண்டிய தேசியக் கொடியைப் பெறும் ஜோஷி



ஜோஷியின் ரதத்துக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான கார்கள், வேன்கள், லாரிகள். மெள்ள மெள்ளத் தன் யாத்திரையைத் தொடர்ந்தது ரதம். ஊருக்கு ஊர் திரளான மக்கள் கூடி ஜோஷி மீது மலர் வீசினார்கள். சுசீந்திரம் அருகே உள்ள பாலத்தில், போக்குவரத்து நெரிசலில் நின்று கொண்டிருந்த உள்ளூர்க்காரரான கேசவன் என்பவரிடம், ''யாத்திரையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டோம்.

''தேசபக்தி, தெய்வபக்தி இரண்டும் குறைந்துவிட்ட இந்த நாளில் இதுபோன்ற யாத்திரைகள் மிகவும் அவசியம்'' என்றார் அவர்.

கிறிஸ்துவ மக்கள் அதிகம் உள்ள பகுதிகளில், மக்கள் தெருவுக்குக் கூட வராமல் வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு பார்த்தார்கள். பத்மனாபபுரத்தில் கடை வைத்திருக்கும் முஸ்லீம் தோழரிடம் யாத்திரை பற்றிக் கேட்டோம். புன்னகையைப் பதிலாக்கினார். அந்தச் சமயம் பார்த்து ஊர்வல வேன் ஒன்றிலிருந்து முஸ்லீம் சமூகத்தைச் சிறுமைப்படுத்தும் கோஷம் பலமாகக் கேட்டது. நாம் மேலும் அவரிடம் கேள்வி எதுவும் கேட்காமல் இடத்தைக் காலி செய்தோம்!

மார்த்தாண்டம் அருகே பாரத அன்னையைப் போன்று மேக்-அப் போட்டு, ஒரு பெண்ணை உயரத்

ஆச்சரியப் பரிசு!

இந்த இதழின் மையப் பக்கத்தில் புத்தாண்டுப் பரிசாக நான்கு காலண்டர்கள் இணைத்திருக்கிறோம்.

ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டு மற்ற மூன்றையும் கல்கி வாங்கிப் படிக்காத உங்கள் நண்பர்களுக்குப் புத்தாண்டு அன்பளிப்பாய் வழங்கலாம். அப்படியே கல்கியின் சிறப்பு பற்றி நாலு வார்த்தை கூறி, அவர்களையும் கல்கி வாங்கச் செய்யலாமே. மறக்காமல் பொங்கல் சிறப்பிதழ் குறித்தும் சொல்லி வையுங்கள்! என்ன, சரிதானா?

- ஆசிரியர்

இல் நிறுத்தியிருந்தார்கள். தத்ரூபம். தமிழக எல்லையான களியக்காவிளையில், நல்ல கூட்டம். ''நான் இந்த யாத்திரையை மேற்கொள்ளலாமா?'' என்றார் ஜோஷி. ''கொள்ளலாம்'' -என்றது கூட்டம். ஜோஷியின் சிறு சிறு உரைகளை எழுச்சியுடன் மொழி பெயர்த்தவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி.

தமிழ்நாட்டை விட கேரளாவில் அலங்காரமான வரவேற்பு வளைவுகள். யாத்திரையில் வந்தவர்களும் சரி, ஆங்காங்கே வந்த கூட்டங்களிலும் சரி; பளிச்செனப் பட்டது இளைஞர்களின் முகங்கள்தான். நெற்றியில் சந்தனம், குங்குமம் வைத்து 'ஜெய்ஸ்ரீராம்' சொல்லும் இளைஞர்கள்!

முரளி மனோஹர் ஜோஷியை ஒய்வற்ற அவரது நிகழ்ச்சி நிரலினிடையே சில நிமிஷங்கள் நமக்காக ஒதுக்கச் சொல்லி, இந்த ''ஏகதா யாத்திரை எதற்காக?'' என்று கேட்டோம்.

''நாட்டின் பல பகுதிகளிலும் பயங்கரவாதமும், பிரிவினைவாதமும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன. போகிற போக்கைப் பார்த்தால் காஷ்மீர் நம் கையை விட்டுப் போய் விடும் போலிருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்கவே, எனது யாத்திரை. யாரையும் எதிர்த்து நடத்தப்படுவதல்ல இது. சுதந்திரம் பெற்றதிலிருந்து 75,000 கோடி ரூபாயை காஷ்மீரில் நாம் கொட்டியிருக்கிறோம். இதனால் விளைந்த பயன் என்ன? அரசியல்வாதிகளின் வினையாட்டினால் அந்த மக்கள் நம்மிடம் இருந்து விலகிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் லட்சக்கணக்கான இந்து குடும்பங்கள் காஷ்மீரிலிருந்து விரட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் அகதிகளாக டெல்லியிலும், வேறு பல இடங்களிலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு செய்தது என்ன? ஸ்ரீநகரில் லால்சௌக் என்ற இடத்தில் காஷ்மீர் தீவிரவாத அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள், ''எவனொருவன் தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்தானோ அவன் வந்து இந்தியக் கொடியை ஏற்றிப் பத்து லட்சம் வெகுமதி வாங்கிக் கொண்டு போகலாம்'' என்று எழுதியிருக்கிறார்கள். என்ன தைரியம் அவர்களுக்கு? என்னுடைய யாத்திரை இவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்'' என்றார் ஜோஷி.

''யாத்திரை செல்லும் வழியில் 'டென்ஷன்' உண்டாகும் என்ற குற்றச்சாட்டு பற்றி?''

''டென்ஷன் மற்ற கட்சித் தலைவர்களுக்குத் தானே தவிர, யாத்திரை போகும் வழியில் கிடையாது. தேச ஒற்றுமைக்காகப் போகும் யாத்திரை பற்றி, அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டுத் தடை செய்வது பற்றிப் பேசுகிறார்கள். அங்கேயாவது, பயங்கரவாதத்தையும், பிரிவினை வாதத்தையும் தடுப்பது பற்றிப் பேசியிருக்கலாம்.''

''நீங்கள் கைது செய்யப்பட்டாலோ அல்லது அரசு ஏதேனும் உறுதிமொழி கொடுத்தாலோ யாத்திரை நின்று விடுமா?''

''எந்தக் காரணத்தைக் கொண்டும் யாத்திரை நிற்காது.''

''ஸோமநாத் அயோத்தி யாத்திரையை மேற்கொண்ட அத்வானியை விட அதிகப் புகழ் பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நீங்கள் யாத்திரை துவங்கியிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டு பற்றி?''

''நல்ல கற்பனை!''

பி. ஜே. பி. தொடர்பான கட்டுரைகளை சேகரித்துத் தொகுத்தவர் : ப்ரியன்

படங்கள் : ராஜன்

அட்டை வண்ணப்படம் : டி. ராமமூர்த்தி



GX/20/202 TAM R


பா. ஜ. க.

சிறந்த கொள்கைகளும் வோட்டு வாங்கும் தந்திரங்களும்

"**ம**சூதியை இடிப்போம்; கோயிலைக் கட்டுவோம்" என்றெல்லாம் சூளுரை உரைத்து, ரத யாத்திரை சென்று இந்திய மக்களின் மத உணர்வைத் தூண்டி விட்டு வாக்குகளை அறுவடை செய்தாகி விட்டது. ஆனால் உத்தரப் பிரதேசத்தில் ஆளும் கட்சியாக வந்த பிறகும் ஒன்றும் நடக்கக் காணோம். பா. ஜ. க. தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும், "வேகத்தில் ஏதேனும் செய்து விட்டால் தங்களது அரசே தாங்காது" என்று. அதனால்தானோ என்னவோ பிரச்னைக்கு 'ஸ்பீட் பிரேக்கர்' போடுகிறார்கள். ஆனால் ஹிந்து தீவிரவாத அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத் ஒத்துக் கொள்ளுமா? அது அழுத்தம் கொடுக்கவே, பாப்ரி மசூதியைச் சுற்றி உள்ள 2.77 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது, உ. பி. அரசு. இந்த சலசலப்பின் விளைவாக, நவம்பரில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ப. வலாக வெற்றிக் கொடி நாட்டலாம் என்று பா. ஜ. க. கருதியது. ஆனால் கடுமையான ஏமாற்றம். இருப்பதைத் தக்கவைத்துக் கொள்வதே பெரும்பாடு ஆகி விட்டது.

1952 தேர்தலில், பதிவான வாக்குகளில் 3.1 சதவீதம் வாங்கிய ஜனசங்கம் (பா.ஜ. க. வின் பூர்வீகப் பெயர்) ஒவ்வொரு தேர்தலிலும் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டு கடைசியாக 1971 தேர்தலில், 7.4 சதவீதம் வாங்கியது. பின்னர் 1977 மற்றும் 1980ம் ஆண்டு தேர்தல்களில் ஒன்றுபட்ட ஜனதா கட்சியின் அங்கமாக இருந்து, 1980க்குப் பிறகு பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பித்தனர். 1984-ம் ஆண்டு நடந்த தேர்தலில், இந்திராகாந்தி அனுதாப அலை இருந்தாலும், 71-ல் வாங்கிய அதே 7.4 சதவீதம் வாக்கு வாங்கியது பா. ஜ. க. தன்னுடைய வோட்டு வங்கியைக் கட்டுக் குலையாமல் ஜனசங்கம் வைத்திருந்தது என்பது இதிலிருந்து தெரியவரும். 1989, மற்றும் 1991-ல் நடந்த தேர்தல்கள் பா.ஜ.க. வுக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தேடிக் கொடுத்தன. ஜனதா - தளமும், பா. ஜ. க. வும் பல தொகுதிகளில் வோட்டுக்கள் சிதையாவண்ணம் உடன்பாடு செய்து கொண்டன. 1986-ல் பாப்ரி மஸ்ஜித் கதவுகள் திறக்கப்பட்டதால் விளைந்த ஹிந்து உணர்வுகளைத் தட்டி எழுப்பி, வோட்டுக்களாக மாற்றியது பா. ஜ. க. 1991 தேர்தல் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஸோமநாத்திலிருந்து அயோத்திக்கு தாமரைச் சின்னம் போட்ட ரதத்துடன் அத்வானி ஊர்வலம் சென்றபோதே அனைவருக்கும் புரிந்து விட்டது. பின்னர் வந்த தேர்தலில் எதிர்பார்த்தபடி வெற்றிகளை அள்ளிக் குவித்தது. 1984-ல் இரண்டு இடங்களைப் பெற்றிருந்தது, 1989-ல் 86 ஆக உயர்ந்து, இன்று, பாராளுமன்றத்தில் பா. ஜ. க. வின் பலம் 119.

மக்களின் மத, பக்தி உணர்வுகளைத் தூண்டித்தான் பா. ஜ. க. வோட்டு வங்கியில் செல்வாக்கை அதிகரிக்க வேண்டுமா? அந்த கட்சிக்குக் கொள்கைகள் இல்லையா? அவைகளைச் சொல்லி வோட்டுக் கேட்கக் கூடாதா? ஹிந்து ராஜ்யத்தை



ஸ்தாபிப்போம் என்று சொல்லித்தான் மக்களிடையே பிரபலமாக வேண்டுமா?

பா. ஜ. க. வை ஆரம்பித்தபோதே அதன் ஐந்து ஆதாரக் கோட்பாடுகளாக, தேசியம் - தேசிய ஒருமைப்பாடு, ஜன நாயகம், சீரான மதச்சார்பின்மை, காந்திய சோஷலிஸம், அரசியலில் தூய்மை ஆகியவை வகுக்கப்பட்டன. பல நல்ல கொள்கைக் குறிப்புகள், இதன் செயல் திட்டத்தில் உள்ளன. இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் வேலை கொடுப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று கட்சி சொல்கிறது. இட ஒதுக்கீடு விஷயத்தில் விடுபட்டுப் போன பிற்படுத்தப்பட்ட மக்களையும் சேர்த்துக் கொண்டு, பொருளாதார அளவுகோலை வைக்க வேண்டும் என்கிறது கட்சி. அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம், மைனாரிட்டி கமிஷனுக்குப் பதிலாக அனைவருக்கும் பொதுவாக மனித உரிமை கமிஷன், காஷ்மீருக்குத் தனி அந்தஸ்தைக் கொடுக்கும் அரசியல் சட்டம் 370ஐ நீக்குவது என்று, பல நோக்கங்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக கட்சி வலியுறுத்துவது காந்திய சோஷலிஸம். ''பொருளாதாரத்தின் மையமாக மனிதன் இருக்க வேண்டும். இயந்திரம் அல்ல'' என்ற தீனதயாள் உபாத்யாயாவின் கருத்துத்தான் கட்சியின் கருத்தும்.

அதற்காக நவீனப்படுத்தலுக்கு பா. ஜ. க. எதிரி அல்ல. நாட்டின் பாதுகாப்பு, அணு ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி போன்றவற்றில் நாம் நவீனப்படுத்துதலைத் தயங்காமல் புகுத்த வேண்டும் என்பது கட்சியின் கருத்து.

இவை தவிர, பெண்களுக்கு, தொழிலாளர்களுக்கு, மற்றும் விவசாயிகளுக்கும் பல நல்ல திட்டங்கள் உண்டு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சிறந்த கொள்கைகளை வைத்துக் கொண்டிருந்தும் அவற்றை விளக்கிச் சொல்லி பாமர மக்களிடம் வோட்டு வாங்க முடியவில்லை. அதற்காகத்தான் மத உணர்வுகளைத் தூண்டுகிறது. இதுதான் இந்தியாவின் துரதிர்ஷ்டம். இங்கே நல்லன விலை போகாது. தந்திரம் செய்தாக வேண்டியிருக்கிறது.

''அயோத்தி பிரச்னையைக் கண்டிப்பாகத் தீர்ப்போம்'' என்று பா. ஜ. க. சொன்னாலும் அந்தக் குரலில் உறுதி இல்லை. ''மசூதியும் கோயிலும் பக்கம், பக்கம் இருக்கலாமே!'' என்று ஜே. பி. மாத்தூரிடம் சொன்ன போது, ''ஓ, இருக்கலாமே!'' என்றார்.


''சரி. உடனே பக்கத்தில் கோயிலைக் கட்ட வேண்டியதுதானே'' என்ற போது, ''மசூதி இருக்கும் இடத்தில் கோயிலைக் கட்டலாம் என்றிருக்கிறோம்'' என்கிறார்.

''அப்படியானால் மசூதியை இடிக்க வேண்டிவருமே, அங்கேதானே பிரச்னை'' என்று நாம் சொன்னால், ''அதுதான் முடிவான தீர்வாக இருக்கும்'' என்கிறார்.

ஆனால் பா.ஜ.க. இப்போது ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டது. ''அதாவது ஆட்சியைப் பிடிக்கத்தான் அயோத்தியைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, இழக்க அல்ல. ராமர் அலையை அடுத்த தேர்தல் வரை தக்கவைத்துக் கொண்டிருப்பது முடியாத காரியம் என்பதும் அதற்குப் புரிந்து விட்டது. அவசரப்பட்டு எதையாவது செய்யப் போய், மத்திய அரசின் நடவடிக்கைக்கு ஆளாகக் கூடாது என்பதிலும் பா.ஜ.க. தெளிவாக இருக்கிறது!

ஆகவேதான் இந்தச் சூழலில் வேறு ஆயுதத்தைக் கையில் எடுப்போம்; அதை வைத்து மத்தியில் ஆட்சியைப் பிடிப்போம் என்று முடிவு செய்துதான், ஏகதா யாத்திரையை ஆரம்பித்து இருக்கிறது.

''ராமன் இந்திய மக்களுக்குப் பொதுவானவன், அவன், கலாசாரத்தின் சின்னம்'' என்றெல்லாம் சொல்லிக் காவிக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் களத்தில் வெற்றி கொண்டது போல, பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்து நடக்கும் ஒருமைப்பாட்டு யாத்திரை என்று சொல்லி, சகல மக்களின் ஆதரவையும் பெற்று விடலாம் என்று கருதுகிறது கட்சி! அதைவிட இது எவ்வளவோ மேல்!



பா.ஜ.க. முதல்வர்கள்— ஓர் அறிமுகம்

பா.ஜ.க. முதல்வர்களிலேயே இன்றைக்கு மிகவும் சங்கடமான நிலையில் இருப்பவர் உ.பி. முதல்வர் கல்யாண்சிங் தான். பதவியேற்றவுடன், ''நான் பாபர் மசூதியை இடிக்க மாட்டேன்; ஆனால் ராமர் கோயிலைக் கட்டியே தீருவேன்'' என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு இன்று அந்த கட்சியிலும், இயக்கத்திலும் உள்ள தீவிரமானவர்களின் இடுக்கிப் பிடியில் மாட்டிக் கொண்டு விழிக்கிறார், இந்த முதல்வர். இந்து மத தீவிரவாதிகளின் வேகமான செயல்பாட்டினால் தமது அரசுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறார்.

அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் கல்யாண் சிங், 1977 ல் ஒன்றுபட்ட ஜனதா கட்சி மந்திரி சபையில் சுகாதார அமைச்சராக இருந்து நல்ல பெயர் தட்டிக் கொண்டு போனவர். அப்போது மாநிலத்தின் ஒரு பகுதியில், மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் பலர் மடிந்த போது, இவர் மிக விரைவாகச் செயல்பட்டு, வெளி நாட்டிலிருந்து தடுப்பு மருந்துகளைத் தருவித்து, நோயைக் கட்டுப் படுத்தினார். அது போலவே டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்பதற்காக நகரங்களில் பணியாற்றிய பல டாக்டர்களை கிராமப் பகுதிகளுக்கு டிரான்ஸ்பர் செய்தார். இதனால் பாதிக்கப்பட்ட பல டாக்டர்கள் பெரிய இடங்களில் சிபாரிசு பிடித்து வந்த போதும் கல்யாண் சிங் மசியவில்லை. இதன் காரணமாக அப்போது மத்தியில் சுகாதார அமைச்சராக இருந்த ராஜ் நராராயணனுக்கும் இவருக்கும் மோதல் கூட நேர்ந்தது!

1962 ல் ஜனசங்கத்தில் (பா.ஜ.க.வின் முந்தைய பெயர்) இணைந்தவர் இவர். மிகவும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். எமர்ஜென்ஸியில் இருபது மாதங்கள் 'உள்ளே' இருந்தவர்.




சாந்த குமார்

கல்யாண்சிங்



ராஜஸ்தான் மாநில பா.ஜ.க. முதல்வர் பைரான் சிங் ஷெகாவட் அரசியல் நெளிவு, சுளிவுகள் அறிந்தவர். 1977 - ல் ஜனதா கட்சி முதல்வராக இருந்தவர். அப்போது இவர் அறிமுகப்படுத்திய 'அந்த்யோதயா' திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. எளிய மக்களும் ஷெகாவட்டை அணுக முடியும். தம் வீட்டுக் கதவுகள், எப்போதும் மக்களுக்காகத் திறந்தே வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இவரது ஆணை. ஆனால் இவரது ஆட்சியில், பா.ஜ.க. தொண்டர்கள் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்வதை இவரால் தடுக்க முடியவில்லை. அதே போல கட்சியில் உள்ள கோஷ்டிச் சண்டைகளையும் கட்டுப்படுத்த இயலாத நிலையில் இருக்கிறார். ''எல்லா மத மக்களும் என்னை விரும்புகிறார்கள். முஸ்லீம்கள் அதிகம் வாழும் தொகுதியில், எனக்கெதிராக ஒரு முஸ்லீமே நின்றால் கூட போட்டியில் நான் ஜெயிப்பேன்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் ஷெகாவட்.


ஷெகாவட்





பட்வா

மத்தியப் பிரதேச முதல்வர் சுந்தர்லால் பட்வா கொஞ்சம் ஷோக்கு பேர்வழி. யாரும் இவரை எளிதில் நெருங்க முடியாது. உட் கட்சிச் சண்டைகளால் இவரது அரசு அவ்வப்போது ஸ்தம்பித்து நிற்கும். சகல தரப்புகளையும் சந்தோஷப்படுத்தும் நோக்கில் மந்திரி பதவிகள் கொடுத்தாலும் சண்டைகள் ஓய்வதாக இல்லை. இவரது



வாஜ்பாய்

ஜே.பி. மாத்தூர்



பி.ஜே.பி.யைத் தாங்கும் பிரம்மச்சாரி படை

ஆர். எஸ். எஸ். இயக்கத்துக்கும் பி. ஜே. பி.க்கும் உள்ள தொடர்பு அனைவரும் அறிந்ததே! பி. ஜே. பி. யில் இன்று பொறுப்பில் இருப்பவர்கள் பெரும் பாலோர் ஆர். எஸ். எஸ். இயக்கத் திலிருந்து கட்சிப் பணி ஆற்ற அனுப்பப் பட்டிருப்பவர்கள்தான். இதைத் தவிர ஆர். எஸ். எஸ்.ஸின் நம்பிக்கையைப் பெற்று பொறுப்பில் இருப்பவர்கள் சிலர் இருக் கிறார்கள். பொதுவாக ஆர். எஸ். எஸ். ஸில் பிரசாரக் ஆக இருந்து வந்து கட்சிப் பணி ஆற்றுபவர்கள் பிரம்மச்சாரிகளாக இருப் பது குறிப்பிடத்தக்கது. கணக்கெடுத்துப் பார்த்தால் ஒரு பிரம்மச்சாரி படை கட்சியை வழிநடத்திக் கொண்டிருப்பது புரியவரும்.

கட்சியின் துணைத் தலைவர் சுந்தர் சிங் பண்டாரி, செயலாளர்கள் கிஷன்லால் சர்மா, ஜே. பி. மாத்தூர் மற்றும் இரண்டு முறை தலைவராக இருந்த வாஜ்பாயி உட்பட அனைவரும் பிரம்மச்சாரிகள்தாம். இந்த லிஸ்டில் சேர்ந்திருப்பவர் கோபிந்த் ஆசார்யா. இவர் முன்னோர்கள் திண்டி வனத்தைச் சேர்ந்தவர்களாம். ஆனால் குடும்பம் வடக்கே போய்ச் செட்டிலாகி விட்டது. இன்று பி. ஜே. பி.யின் 'சிந்தனைச் சிற்பி' என்று வர்ணிக்கப் படுபவர். 'ஆசார்' என்று கட்சிக்காரர் களால் அன்புடன் அழைக்கப்படும் கோபிந்த் ஆசார்யா, ஜே. பி.யின் 'முழுப் புரட்சி' இயக்கத்தில் தம்மை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டு, எமர்ஜென்ஸியில் சிறையில் இருந்தவர். பா. ஜ. க. வின் மாணவர் அமைப்பான ஏ. பி. வி. பி. யின் தலைவராக இருந்தவர். இன்று கட்சியின் வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளை உருவாக்குவதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

ஆர். எஸ். எஸ். இயக்கத்தோடு தொடர்பு இருந்தாலும் குடும்பஸ்தர்களாக இருந்து கட்சியை வளர்ப்பவர்களில், அத் வானி, முரளி மனோஹர் ஜோஷி, சிக்கந்தர் பக்த் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர, பொருளாதார விஷயங் களில் ஆலோசனை சொல்ல ஜெய்துபாஷி யும், கட்சி அறிவிப்புகள், கொள்கைக் குறிப்புக்கள் தயாரிப்பதற்கு கே. ஆர். மல்கானியும் உதவுகிறார்கள். 'பி. ஜே. பி. டுடே' என்று வர இருக்கும் ஒரு பத்திரி கைக்கும் மல்கானி பொறுப்பேற்க இருக் கிறார்.

ஆட்சியில் விழாக்களுக்கும் வாண வேடிக் கைகளுக்கும் பஞ்சமே இல்லை. மாநில அரசின் விமானத்தைச் சகட்டு மேனிக்குப் பயன்படுத்துபவர். ''பட்வா ரயில் போக்கு வரத்து என்ற ஒன்று இருப்பதையே மறந்து விட்டவர்'' என்று எதிர்க் கட்சியினர் கிண்ட லாகச் சொல்லிக் காட்டுகிறார்கள். ஆட்சி யில் பெரிய அளவில் ஊழல்கள் எதுவும் இல்லாவிட்டாலும், இவரது சகோதரர் சம்பத்லால் பட்வா செய்யும் அதிகார துஷ் பிரயோகங்கள் நிறையவே விமர்சனத்துக்கு உள்ளாகின்றன.

ஹிமாசலப் பிரதேசத்தின் முதல்வர் சாந்த குமார், ஒரு சிறந்த இந்திக் கவிஞர். நல்ல மேடைப் பேச்சாளர். இந்தி தெரியாத வர்கள் கூட, இவரது பேச்சை ரசிக்கலாம். அந்த அளவுக்குக் கவிதை நடையும், ஏற்ற இறக்கமும் இருக்கும்.

ஹி.பி. மாநிலத்தில் ஜனசங்கத்தையும், பின்னர் பா.ஜ.கட்சியையும் ஒற்றை ஆளாக நின்று வளர்த்தவர். ஆர்.எஸ்.எஸ் இயக் கத்தில் 'பிரசாரக்'காக இருந்தவர். ''ஹி.பி. யின் பொருளாதார அடிப்படையே ஆப்பிள், வியாபாரம் தான்'' என்று சொல்லிக் கொண்டே உற்பத்தியாளர்களுக் குக் கொடுக்கப்பட்டு வந்த மான்யத்தை (Support Price) க் குறைத்ததனால் விவ சாயிகளின் வயிற்றெரிச்சலுக்கு ஆளானவர். ''வீட்டுக்கு ஒரு குழாய் கனெக்ஷன் கொடுப்போம்'' (குடிதண்ணீர்தான்) என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, இன்று ''நிதி நிலை சரியில்லையே'' என்று கையைப் பிசைந்து கொண்டு நிற்பவரும் இவர்தான்.

''முக்கியமான நேரங்களில் மாநிலத் தில் இல்லாமல் வெளிநாட்டில் இருந்து கொண்டு 'ரிமோட்' முறையில் ஆட்சியை இயக்குவார்'' என்று எதிர்க் கட்சிக்காரர்கள் குறை கூறுகிறார்கள். ஆப்பிள் உற்பத்தி யாளர்களின் போராட்டத்தின் போதும், மண்டல் எதிர்ப்புக் கிளர்ச்சியின் போதும், வெளி நாட்டில் இருக்கும்படி நேர்ந்து விட்டதால்தான் சாந்த குமாருக்கு இப்படிப் பட்டதோர் அவப்பெயர்.

THE GINSENG HEALTH




உங்களால் முடியும்

பகிர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட
மகிழ்ச்சி, ஒன்று கூடி இன்பமாகக் கழிந்த
நாட்கள் இவையெல்லாம் நினைவிருக்
கிறதா? ஆம், அந்நாட்களில் உள்ளம்
நாடியதற்கேற்ப உடல் ஒத்துழைத்தது.

அந்நாட்களைத் திரும்பப் பெற வேண்டுமா?
உபயோகியுங்கள் **வினோஃபிட்** ஜின்ஸெங்*

வினோஃபிட்-ல் கொரியாவின் ஜின்ஸெங்
மற்றும் இன்றியமையாத மூலிகைச் சாறுகள்
சேர்ந்துள்ளதால் உடலின் இரத்த ஓட்டம், ஜீரண
சக்தி மற்றும் இன்றியமையாத உறுப்புகளின்
செயலாற்றம் மேம்படுத்தப்படுகிறது. மேலும்
சோர்வு குறைந்து உடலில் சக்தி அதிகரிக்கிறது.

இதைத்தவிர, **வினோஃபிட்** சருமத்தை
எழிலடையச் செய்து, நோய்களை எதிர்க்கும்
திறனை உடலிற்கு அளித்து மூளையின்
செயலாற்றலை அதிகரிக்கிறது.



* **வினோஃபிட்** ஜின்ஸெங் கேப்ஸ்யூல் மற்றும் டானிக் சகல மருந்து
கடைகளில் கிடைக்கும்.

(பெரிய அச்செழுத்துக்களில் எழுதவும்

பெயர் : ....

முகவரி ....

....

நகரம் : .... பின் : ...

வினோஃபிட்
ஜின்ஸெங்
வோக்ஹார்ட் வழங்கும் தரமான தயாரிப்பு

வாழ்வில் துடிப்புணர்வுடன் வாழ.

TRITON/91/WL/

ஆர்.எஸ்.எஸ். இயக்கம் மகாத்மா காந்தி கொலையின் பின் விளைவாக 1949 ல் தடை செய்யப்பட்டது. தடை நீங்கிய போது, இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து பேசி ''எதிர்காலத்திலும் இயக்கத்துக்கு அடிக்கடி தடை விதிக்கும் நிலை வரலாம் ஆகையால், ஆர்.எஸ்.எஸ். இலட்சியங்களை மக்களிடையே பிரதிபலிக்க ஒரு வெகுஜன அரசியல் கட்சியை ஆரம்பிக்க வேண்டும்'' என்று முடிவெடுத்தார்கள். அந்த அடிப்படையில்தான் 1951 ல் பாரதிய ஜனசங்க கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. 1977 - 80 கால கட்டத்தில் பழைய காங்கிரஸ், லோக்தளம் ஆகிய கட்சிகளோடு இணைந்து ஜனதா என்ற ஒரே கட்சியில் ஐக்கியமானது ஜனசங்கம். 1980 ல் தேர்தல் தோல்விக்குப் பிறகு ஜனதாவில் இருந்த ஜனசங்கத்தினர் வெளியே வந்து பாரதிய ஜனதா கட்சியைத் துவங்கினர். இதுதான் சுருக்கமான வரலாறு.



தீனதயாள் உபாத்யாயா

பி.ஜே.பி.: முகர்ஜி முதல் ஜோஷி வரை!

ஜனசங்கத்திலும் சரி, பா.ஜ.க.விலும் சரி டாக்டர் ஸ்யாமப்பிரஸாத் முகர்ஜி, பிரேம் நாத், டோக்ரா, கோஷ், தீனதயாள் உபாத்யாயா, பால்ராஜ் மதோக், வாஜ்பாய், அத்வானி, போன்றவர்கள் தலைமைப் பொறுப்பில் பணியாற்றி இருந்தாலும் டாக்டர் ஸ்யாமப் பிரஸாத் முகர்ஜி, தீனதயாள் உபாத்யாயா இருவரும்தான் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள்.

டாக்டர் முகர்ஜி ஜனசங்கத்தின் முதல் தலைவர். அரசியல் சட்டம் 370 ன் படி காஷ்மீருக்கு ஏகப்பட்ட சலுகைகளை நேரு அரசு வழங்கிய போது, ''இது தவறு, இந்த நிலை நீடித்தால், கால வெள்ளத்தில் காஷ்மீர் நம் கையை விட்டுப் போய் விடும்'' என்று அன்றே சத்யாகிரகத்தில் இறங்கியவர். இவரைக் கைது செய்து ஸ்ரீநகர் ஜெயிலில் அடைத்தது ஷேக் அப்துல்லா அரசு. சிறையில் மர்மமான முறையில் இவர் மரணமடைந்தார். இதனால் நாட்டின் வட பகுதியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. இவரது மரணத்திற்குப் பின்னர் தான், காஷ்மீருக்குத் தனிக் கொடி, தனிப் பிரதமர் போன்றவற்றை ரத்து செய்தது மத்திய அரசு.

இவரைப் போலவே மர்மமான முறையில் 1968 ல் மரணமடைந்தவர் தீனதயாள் உபாத்யாயா. லக்னோவிலிருந்து பீஹார் மாநிலத்திற்குள் பிரயாணம் செய்கையில், 'மொகல்சராய்' என்ற இடத்தில், ரயிலில், கொலை செய்யப்பட்டு இறந்தார். கட்சியின் ஆதார கோட்பாடுகளுள் ஒன்றான காந்திய சோஷலிஸம் இவர் வகுத்தது தான்.

வாஜ்பாய் தலைவராக வந்த போது, கட்சி மேலும் வளர்ச்சியடைந்தது. வாஜ்பாய் சிறந்த மேடைப் பேச்சாளர். பேச்சில் மென்மையான நகைச்சுவை இழையோடிக் கொண்டிருக்கும். பத்திரிகையாளர்களிடம், சரளமாகப் பேசிவிட்டுப் பின்னர் மாட்டிக் கொண்டு விழிப்பவர். அப்படி ஒரு முறை பேசும் போது, ''இந்தியாவில் முஸ்லீம்களே இல்லை என்ற நிலை வருகிறது என வைத்துக் கொள்ளுங்கள். அப்போது கூட எங்கள் கட்சிக்காரன் கற்பனையாக முஸ்லீம்களை உண்டாக்கிப் போராடுவான்'' என்றார்.

வாஜ்பாயின் இந்த கமெண்டால் மற்ற தலைவர்கள் சங்கடப்பட்டுப் போனார்கள். ஜனசங்கத்திலும், பா.ஜ.க. வில் இருமுறையும், தலைவராக இருந்திருக்கிறார் இவர். ஆனால் தற்போது வேகமாகச் செயல்பட

அடுத்த இதழ் :

பல்வேறு கோணங்களிலும் ஈரோடு நகரை அலசும் ஈரோடு நகரச் சிறப்பிதழ்.

ஈரோடுவாசிகள் மட்டுமல்ல; எல்லா வாசகர்களும் படித்துப் பாதுகாக்க வேண்டிய சிறப்பிதழ்.

கொங்குத் தமிழில் டைரக்டர் பாக்யராஜ் எழுத்தோவியமும் இடம்பெறுகிறது!

உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி வையுங்கள்.


முடியாமல் அவதிப்படுகிறார். காரணம் உடல் நிலை தான்.

வோட்டு வங்கியில் கட்சியின் செல்வாக்கை வளர்த்தவர், 'அயோத்தி வீரர்' அத்வானி என்றால் மிகையாகாது. சரியான தேர்தல் சமயமாகப் பார்த்து ஸோமநாத்திலிருந்து அயோத்திக்கு யாத்திரை கிளம்பினாரே - அது ஒன்றே போதும், இவர் சாணக்கியத்தைச் சொல்ல. இவரது குடும்பம் 1949-ல் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தது. அடிப்படையில் ஒரு ஆர். எஸ். எஸ்.. மாவட்டத் தலைவர் பொறுப்பிலிருந்து, படிப்படியாக உயர்ந்தவர். கட்சியின் பத்திரிகையான 'ஆர்கனைசர்'ன் ஆசிரியராக இருந்தவர். கட்சியின் சட்ட திட்டப்படி ஒருவர் இருமுறைதான் தலைமைப் பொறுப்பில் இருக்க முடியும். இந்த நிலை இல்லாமலிருந்தால் அத்வானியே இன்னமும் தொடர்ந்திருப்பார்.

கடைசியாக இப்போது வந்துள்ள டாக்டர் முரளி மனோகர் ஜோஷி உ. பி. யில் அல்மோரா மலைப் பகுதியைச் சேர்ந்தவர். எப்போதும் சரிகைத் துண்டும், வேஷ்டியும், நெற்றியில் சிந்தூரமுமாகக் காட்சியளிப்பவர். பேராசிரியர். வி.பி. சிங் இவரது மாணவர்தான். இந்தியில் பல விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். கட்சியின் தலைவராகி, முழு நேர அரசியல்வாதி ஆகி விட்டாலும், பல்கலைக் கழகத்திலும் தொடர்ந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார். இது ஒரு பிரச்னையாக சமீபத்தில் வெடித்தது. தமது ஏகதா யாத்திரையின் மூலம் காஷ்மீரில் மட்டுமின்றி - செங்கோட்டையிலும் கொடியேற்றும் வாய்ப்பு தமது கட்சிக்குக் கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கையில் செயல்பட ஆரம்பித்திருக்கிறார்.


பொன் விழா ஆண்டு ; தங்க நகைப் பரிசுத் திட்டம் - 12

வீட்டைக் கட்டிப் பார்!



தை பிறக்கப் போகிறது. கல்யாண சீசன் களை கட்டி விடும். கூடவே, ''வீட்டைக் கட்டிப் பார்; கல்யாணத்தைப் பண்ணிப் பார்'' என்ற பழமொழி நினைவு வருகிறது. முதலில் வீடு கட்டிய அனுபவத்தை எடுத்துக் கொள்வோமே. உங்களுக்கு அல்லது உங்கள் நண்பருக்கு வீடு கட்டுகையில் அல்லது (ஃபிளாட்) வாங்குகையில் ஏற்பட்ட அனுபவத்தைச் சுவைபடத் தபால் கார்டில் அல்லது அதிகபட்சம் இன்லாண்டில் எழுதுங்கள். ஒரு சூப்பர் அனுபவத்துக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகை பரிசு. பிரசுரம் ஆகும் இதர துணுக்குகளுக்குச் சன்மானம். ''வீடு கட்டிய அனுபவம்'' என்று தலைப்புத் தந்து, ''கல்கி காரியாலயம், சென்னை - 32'' என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பக் கடைசி தேதி 6.1.92

ஒன்றுக்குள் ஒன்றாக; ஒன்றிருந்து ஒன்றாக!



ஆர். எஸ். எஸ். ஆகட்டும் பி. ஜே. பி. ஆகட்டும், விஸ்வ இந்து பரிஷத்தாகட்டும், அல்லது இந்து முன்னணியாகட்டும் எதுவாயிருந்தாலும், அவர்கள் போகும் பாதை ஒன்று தான். எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று. இதைப் புரிந்து கொண்டுதான் இந்த இயக்கங்களில் பொறுப்புகளில் இருக்கும் பலருக்கு ஸீட் கொடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கி இருக்கிறது பி. ஜே. பி. அதில் குறிப் பிடத்தக்கவர்கள்:

மஹந்த் அவைத்யநாத் : ராமஜன்ம பூமி யக்ஞ சமிதி என்ற அமைப்பின் தலைவர். கோரக்பூரில் உள்ள பிரசித்தி பெற்ற கோரக்நாத் ஆலயத்தின் பிரதான சாமியார் (Mahant).

எஸ். ஸி. தீக்ஷித் : விஸ்வ ஹிந்து பரிஷத்தின் துணைத் தலைவர். உ.பி. யில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பொறுப்பு வகித்தவர்.

விணய்கட்டியார் : பஜ்ரங் தளம் என்கிற தீவிர ஹிந்து இளைஞர் பட்டாள அமைப்பின் அமைப்பாளர். அயோத்தி இருக்கும் பைசாபாத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்.

சின்மயானந்தர் : இவரது சொற்பொழிவுகளால் கவரப்பட்டோர் ஏராளம். ஹரிஜன மக்களோடு நெருங்கிப் பழகி, சமூக சேவை செய்து, அவர்களது அன்பைப் பெற்றவர். ராமஜன்ம பூமி முக்தி நியாஸ் என்ற அமைப்பின் தலைவர்.

சச்சிதானந்த ஹரி சக்ஷி : மதுரா கிருஷ்ணர் கோயிலின் சாமியார். மதுரா தொகுதியில் இவர் வெற்றி பெற மாட்டார் என்று பல பத்திரிகைகள் கணித்தாலும், எல்லோரும் ஆச்சர்யப்படும்படியாக 55000 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்தவர்.

இவர்களைத் தவிர 'பிரேம்' எனப்படும் வைகுந்தநாத் ஷர்மா, விஸ்வநாத் தாஸ் சாஸ்திரி, கயா பிரசாத் கோரி போன்றோரும் பல இந்து இயக்கங்களில் இருந்து பி. ஜே. பி. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர எப்போதும் காவி உடையுடன் காட்சி தரும் இளைஞி உமா பாரதி, பிரசித்தி பெற்றவர். இப்படியாக காவிப் படையுடன் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது பி. ஜே. பி.


தமிழர்களுக்கு எதிரான வன்முறை
மத்திய அரசு என் கட்டளைப் படி நடக்க வேணும்... உச்ச நீதி மன்றம் நான் இழுத்த இழுப்புக்கு வர வேணும்...
ஆஹா... பாட்டு சூப்பர்!
பங்காரப்பா
நாகராஜ்
உல்பா தீவிரவாதிகள்
போர் நிறுத்த அறிவிப்பு
நரசிம்மராவ்
நிசமாத்தான் சொல்றானா... இல்லை டபாய்க்கிறானா...?
ஜெயலலிதா
Home work
3. காய்கறி பயிரிடு
4. தீவிரவாதிகளை ஒழிக்க...
6. பெண்களுக்கு வேலை கொடு...
7. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்று...
கலெக்டர்கள் மாநாடு
சமர்த்துப் பசங்களா... நாளைக்கு வரும் போது ஹோம் ஒர்க்கை ஒண்ணு விடாமே முடிச்சிட்டு வாங்கோ...

பங்காரப்பாவுக்குக் கல்தா கொடுங்கள்!

காவிரி நதி நீர்ப் பிரச்னையில் ஆரம்பத்திலிருந்தே தவறான அணுகுமுறையைக் கையாண்டு, மத்திய காங்கிரஸ் அரசுக்கும் கட்சிக்கும் தலைவலியையும் தர்மசங்கடத்தையும் அளித்து, பிரச்னையை மேலும் சிக்கலாக்கிய வகையில் பங்காரப்பா, முதல்வர் பதவியை வகிக்கும் தகுதியை இழக்கிறார். கர்நாடக காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மற்றும் எம்.பிக்களிடையே பங்காரப்பாவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை ஏற்று அவரைப் பதவி விலகச் செய்து, வேறு ஒரு காங்கிரஸ் முதல்வரைத் தேர்ந்தெடுக்க வழி வகுப்பதே மத்திய காங்கிரஸ் தலைமைக்கு இன்று உள்ள ஒரே வழி. இது ஒன்றுதான் காங்கிரஸின் செல்வாக்கைத் தமிழக மக்களிடம் மட்டுமின்றி கர்நாடக மக்களிடமும் காப்பாற்றித் தரும். இல்லையெனில் இருக்கின்ற கொஞ்ச நஞ்ச செல்வாக்கும் தேய்ந்து மறையும்.

தமிழகத்துக்கு நியாயமாக உரிய 400க்கு மேற்பட்ட டி. எம். சி. தண்ணீரை உச்சநீதி மன்றம் நியமித்த நடுவர் மன்றம் தந்துவிட வில்லை. அந்த வழக்கும் இன்னும் முடியவில்லை. ஓர் இடைக் கால ஏற்பாடாக சுமார் 200 டி.எம்.சி. நீர் தருமாறுதான் நடுவர் மன்றம் சொன்னது. இதை மக்களுக்கு எடுத்துக் கூறி, அந்த ஆணையை ஏற்று பங்காரப்பா செயல்பட்டிருந்தால் இரு மா நிலங்களுக்கும் இடையில் நல்லெண்ணம் வளர்ந்திருக்கும். மத்தியிலும் பிரதமருக்கு நிம்மதி ஏற்பட்டிருக்கும். ஆனால் அன்வித் தெளித்த அவசரக் கோலமாக ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்ததன் மூலம், கர்நாடக மக்களில் பலருக்கு ஏதோ அவர்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டு விட்டது போன்ற எண்ணத்தை - பிரமையை - உருவாக்கி விட்டார், பங்காரப்பா. மத்திய அரசு, வேறு வழியின்றி, இந்த அவசரச் சட்டம் விஷயத்தில் உச்சநீதிமன்றத்தின் கருத்து அறியப் போக, உச்சநீதி மன்றமும் 'அவசரச் சட்டம் செல்லாது' என்று தீர்ப்பு வழங்கி விட்டது.

இப்போதாவது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்குத் தலை வணங்கி பங்காரப்பா நடந்து கொண்டிருக்கலாம். மக்களிடம் சென்று, "முயன்று பார்த்தோம், முடியவில்லை; இது ஓர் இடைக்கால ஏற்பாடுதான்; உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை ஏற்று நடப்பதே விவேகம்; தமிழரும் நம் சகோதரரே; அவர்களுக்கு நீர் அளித்து, வேறுவிதத்தில் அவர்களிடமிருந்து ஆதாயம் பெற முயற்சி செய்வோம்; பரஸ்பரம் ஒத்துழைப்பதுதான் ஒருமைப்பாடு'' என்று கூறியிருந்தால் எவ்வளவோ கௌரவமாக இருந்திருக்கும். அதை விடுத்து, 'மத்திய அரசு இடைக்காலத் தீர்ப்பை கெஜட்டில் பதிவு செய்து சட்டமாக்கக் கூடாது' என்று டில்லிக்குப் போய் ஆர்ப்பாட்டம் பண்ணியதில், கர்நாடக மக்களுக்கு ஏதோ பயங்கரமான அக்கிரமம் நடந்து விட்டது போல் நாடகமாடி விட்டார். கன்னடியர் கலங்கிப் போனதில் வியப்பில்லை. இதனை கர்நாடகத்தில் உள்ள சில கன்னடத் தீவிரவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, எரிகிற நெருப்பில் பெட்ரோல் ஊற்ற, தமிழர்கள் கொல்லப்பட்டனர்; அடித்து நொறுக்கப்பட்டனர்; விரட்டி அடிக்கப்பட்டனர். கர்நாடகா - தமிழ்நாடு எல்லையில் ஆயிரக்கணக்கில் அகதிகள் குவியும் போது, பங்காரப்பாவோ, "ஏதொன்றும் நடக்கவில்லையே? எதற்கு மத்திய அரசு ராணுவம் அனுப்ப வேண்டும்?'' என்று கேட்கிறார். பெங்களூர் பற்றி எரியும் போது கலை நிகழ்ச்சி காணப் பறந்து செல்கிறார். கலவரத்தைத் தூண்டி விடுவதற்கும் கலவரம் நடக்கும் போது கண்ணை மூடிக்கொள்வதற்கும் இடையில் அதிக வித்தியாசம் இல்லை.

பங்காரப்பாவின் செயல்களால் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் தமிழர் குடும்பங்களுக்குத் தமிழக அரசு உடனடி நிவாரணம் அளிப்பதுடன், கர்நாடக அரசிடமிருந்து நஷ்டஈடும் பெற்றுத் தர வேண்டும். மத்திய அரசு இதற்குத் தன் ஒப்புதலை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

காங்கிரஸின் மத்திய தலைமை, பங்காரப்பா மீது இன்று நடவடிக்கை எடுக்கவில்லையெனில், பின்னால் வருத்தப்பட நேரிடும் - நிச்சயம்.



கல்கி



1991
டிசம்பர் 29
மலர் : 50
இதழ் : 22
பிரஜோத்பத்தி
மார்கழி 14

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா. - பாரதியார்.

அன்புள்ள அம்மு,



ஒரு பேராசிரியரைப் பார்க்க இஞ்ஜினியரிங் காலேஜுக்குச் சமீபத்தில் போயிருந்தார் உன் அத்தான். அங்கு திரும்பின பக்கமெல்லாம் நிறைய மாணவியர் கண்ணில் பட்டதைப் பார்த்து விட்டு, திரும்பி வந்ததும் என்னிடம் 'பிலிபிலு' வென்று பிடித்துக் கொண்டார்.

''ஏன்! பெண்கள் இஞ்ஜினியரிங் படிச்சா என்ன?'' என்று என்னால் வாதாட முடியவில்லை. என்னோடு பள்ளியில் படித்த எத்தனை பெண்கள் பிற்பாடு கல்லூரியில் சேர்ந்து அரசாங்கப் பணத்தையும், அப்பா, அம்மா பணத்தையும் வீணடிச்சதோடு, தகுதியுள்ள நபரின் வாய்ப்பையும் கெடுத்தார்கள்...!

பரிமளா இஞ்சினியரிங் படித்து விட்டு 'எங்க வீட்டுக்காரருக்கு நான் வேலை பார்க்கறதுல இஷ்டமில்லை' என்று வீட்டோடு இருக்கிறாள். எம். பி. ஏ. பாஸ் பண்ணின நளினி வீட்டையும் இரண்டு பிள்ளைகளையும் 'மானேஜ்' செய்வதோடு சரி! லதா பிஎச். டி.யைப் பாதியில் விட்டு விட்டுக் கல்யாணம் செய்து கொண்டாள். இன்னும் ஆறு மாதம் தொடர்ந்திருந்தால் அவள் ஆராய்ச்சிக்கு டாக்டர் பட்டம் கிடைத்திருக்கும்!

இதுவும் ஒருவகை brain-drain என்கிறார் அத்தான்.

'நாங்க படிச்சு முடிச்சுப் பத்து வருஷத்துக்கு மேலே ஆயிடுச்சே... இப்போ எல்லாம் மாறியிருக்கும்ங்க...' என்று அவரிடம் சொல்லிப் பார்த்தேன்.

'எங்கே மாறும்? இஞ்ஜினியரிங் படிக்கற பொண்ணுங்க என்ன காலமெல்லாம் கன்னியாவா இருந்துடப் போறாங்க! கல்யாணம் கட்டிக்கிட்டுப் படிப்பைத்தான் காத்துல விடுவாங்க!' என்று பொரிந்து தள்ளினார்.

''கல்யாணத்துலதான் அவங்க படிப்பு வீணாகுதுன்னா அவங்க கணவன்மார்கள்தானே அதுக்குக் காரணகர்த்தா...?'' - இப்படி நான் வாதாட, அத்தானுக்கு இன்னும் கருதி ஏறி விட்டது.

''அடியே அலமேலு மங்கா! உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் அப்பா அம்மாகிட்டேயும், புருஷன்கிட்டேயும் மாமனார் மாமியார்கிட்டேயும் மல்லுக்கு நிற்கிற பொண்ணுங்க இந்த விஷயத்துல மட்டும் பூம்பூம் மாடு மாதிரி ஏன் தலையாட்டணும்? பக்குவமா எடுத்துச் சொல்லிப் புரிய வைச்சு, தங்கள் படிப்பினால நாலு பேருக்குப் பிரயோஜனமாகிற மாதிரி பார்த்துக்கணும்... அப்படிச் செய்யப் போய், வீட்ல சம்மதிச்சுட்டா, கூடுதல் பொறுப்பைச் சுமக்கணுமே. அதுக்குச் சோம்பல் பட்டுக்கிட்டுத்தான் இவங்க தலையாட்டிப் பொம்மைகளா இருந்துடறாங்க...'' என்று பொரிந்து தள்ளி விட்டார்.

இவ்வளவு வாக்குவாதமும் முடிந்த இரண்டாம் நாள், அத்தானுக்குப் பதில் சொல்கிற மாதிரி அவருடைய நெல்லூர் நண்பர் ராமசாமிகிட்டேயிருந்து கடிதம் வந்தது. ராமசாமி ஒரு சார்டர்ட் அகவுண்டண்ட். அவர் மனைவி ஒரு டாக்டர். அவர் எழுதின கடிதத்தின் முதல் சில வரிகள் என்னன்னு சொன்னால் நம்புவியா அம்மு...

'இங்கே எனக்கு பிஸினஸ் கொஞ்சம் 'டல்'தான். இருந்தாலும் கமலா (அவர் மனைவி)வின் ப்ராக்டிஸ் நன்றாக நடக்கிறது என்பதால் இந்த ஊரிலிருந்து இப்போதைக்குக் கிளம்புவதாக இல்லை...'

ராமசாமியைப் போன்ற கணவன் கிடைத்தால் எந்தப் பெண்ணும் தன் தொழிலில் சக்கைப்போடு போடலாமே!

அன்புடன்,
அலமு



வாசகர் யோசனை : ஜி. எஸ். பி.



Do you know why mummy buys Gokulam for me?
Because it is my favourite magazine!
Your Children will love to read GOKULAM too!
BUY THEM A COPY TODAY!
96 pages for just Rs. 3/-
JANUARY '92 ISSUE ON SALE!
GOKULAM, GUINDY, MADRAS - 32

கவர்னருக்கு மேல் ஒரு கவர்னர் ஜெனரல்

ராமானுஜம் கேரளத்தவரா?

"இந்தியாவில் 2500 வருடங்களுக்கு முன்னேயே கணிதத்தில் இத்தனை தேர்ச்சி யிருந்ததென்பது எனக்கு வியப்பாக இருக் கிறது. கணித வரலாற்று நூல்கள் எதுவுமே இதுவரையில் இந்திய மேதைமை பற்றிக் குறிப்பிட்டதில்லை'' என்கிறார் Crest of the Peacock என்ற புத்தகத்தை விமர்சிக்கும் பிரையன் ராட்மன்.

கணிதம் பற்றிய நூலுக்கு இப்படி ஒரு பெயர் ஏன்? ''மயில்களுக்குக் கொண்டை போலவும் நாகங்களுக்கு மணி போலவும் எல்லா விஞ்ஞானங்களுக்கும் தலையான சிறப்புடையது கணிதம்'' என்று கி.மு. 500-ல் எழுதப்பட்ட ஓர் இந்திய நூல் கூறு கிறதாம்.

''மயில் கொண்டை''யின் ஆசிரியரான ஜார்ஜ் கெவர்கிஸ் ஜோஸப் தொன்மையி லிருந்தே, கேரளத்தில் கணிதப் பாரம்பரி யம் இருந்தது என்று சொல்லி விட்டுப் போகட்டும்; கணிதமேதை இராமானுஜத் தையும் கேரளத்தவராக்கி விடுகிறாரே!

175 கோடி முகமுடையாள்!

உலக மக்கள் தொகையில் இருபது சதம் சீனர். கி. பி. 2050 லிருந்து 2075க்குள் நாம் சீனாவைப் பின்னுக்குத் தள்ளுவோ மாம். உலக வங்கியின் சமீபத்திய கணிப்பு சொல்கிறது. கி. பி. 2150ல் பாரதியார் பாடலை ''175 கோடி முகமுடையாள்'' என்று பாட வேண்டிவரும்!

பறக்கும் பிரதமர்

சென்னைக் கோட்டையிலிருந்து பல்லாவரத்துக்கு ஹெலிகாப்டரில் போனால் எப்படியிருக்கும்? சமீபத்தில் நரசிம்மராவ் அப்படியொரு வேலைதான் செய்தார். தில்லியின் புறநகரான ரோகி ணிக்கு வான்வழியே சென்றார். அதோடு மட்டுமல்ல. ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி நூறடி தூரத்திலிருந்த மேடைக்குக் காரில் போனார். அவரைச் சொல்லிக் குற்ற மில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகள் இந்த அளவுக்கு இன்று தேவைப்படுகின்றன! பயங்கரவாதம் அந்த அளவுக்கு ஓங்கியிருக் கிறது!

பைசாவின் சக்தி

ஒரு ஃபைசா நாணயம் செய்து கோடீஸ் வரனாகி விட முடியுமா? சாயேன் சிங்கால் முடியும்! ஒரு சின்ன வித்தியாசம் : நாண யத்தின் ஒரு பக்கத்தில் ஹனுமார் உரு வத்தைப் பொறித்து விட்டார்.

''இது மிகச் சக்தி வாய்ந்தது. இந்த நாணயம் இருக்குமிடத்தில் தானிய மழை பொழியும்'' என்று சமத்காரமாகச் சொல்லி விற்றார். ராய்ப்பூர் அருகில் உள்ள சிகாவா நாகரி மலைவாசிகள் இதைக் கேட்டு



ஏமாந்து தம் வாழ்நாளின் சேமிப்பைக் கொட்டி வாங்கினர். சிலர் ஐம்பதினாயிரம் ரூபாய் வரை கூடக் கொடுத்தனர்!

நாணயம் சக்திவாய்ந்ததுதான் - சாயேன் சிங் லட்சாதிபதியாகி விட்டாரே! ஒரே ஒரு திருப்பம் : அவர் இப்போது ஜெயிலில்!

'ஜில்'லென்று பறக்கும் கில்!

பஞ்சாப் போலீஸின் டைரக்டர் ஜென ரல் பதவிக்கு இரண்டாம் முறையாக கே.பி. எஸ். கில் நியமிக்கப்பட்ட போது, அவரை 'கவர்னர் ஜெனரல்' என்று பத்திரிகைகள்



☛ சேஷாத்திரி, வரதன், ஜீ.வி., லக்ஷ்மி நாராயணன்.

குறிப்பிட்டமைக்குக் காரணமில்லாமல் இல்லை. மாநிலத்தின் கவர்னர் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இவர் அலட்சியப் படுத்திய சம்பவங்கள் இவரது முந்தைய பதவிக் காலத்தின் போது ஏராளம்.

அந்தக் குணம் மாறி விடுமா? டிசம்பர் ஏழாம் தேதி கவர்னரின் பயணத்துக்காக வென்றே இருக்கிற விமானத்தில் 'ஜில்' லென்று பறந்து விட்டார் கில். கவர்னர் சுரேந்திர நாத்துக்கோ இது தெரியாது. இன்னும் ஒரு மணி நேரத்தில் ஃபிரோஸ்பூர் போயாக வேண்டும். கடைசியாகக் காரில் பயணம் செய்து மிகத் தாமதமாகப் போய்ச் சேர்ந்தார்.

முன்பொருமுறை விருந்தின் போது மது தலைக்கேறி விட அருகிலிருந்த ரூபன் டியோல் பஜாஜ் என்ற பெண் ஐ. ஏ. எஸ். அதிகாரியின் பின்புறத்தைத் தட்டப் போக, அவர் அரசிடம் புகார் செய்ய, கன்வர் பால்சிங் கில் ஐ.பி.எஸ்ஸின் 'புகழ்' எல்லாப் பத்திரிகைகளிலும் கொடிகட்டிப் பறந்தது. Operation Black Thunderஐ வெற்றி கரமாக நடத்தியதற்காக இவருக்கு மத்திய அரசு கொடுக்கவிருந்த பத்மபூஷண் விருதை பத்மஸ்ரீயாகக் குறைத்ததற்கு இந்தச் சம்பவமே காரணம்.

'அந்தி மயங்கிய பின் விருந்துக்கெல் லாம் போக வேண்டாம்' என்று அரசு இவ ருக்கு அறிவுரைக் குறிப்பை அனுப்பியதும், வழக்கமான செருக்குடன் இவர் அதை மதிக்க மறந்ததும் இப்போது சரித்திரம்.

இதனாலெல்லாம் இவரை ஒரு வீணாய்ப் போன ஆசாமி என்று எவரும் முடிவெடுத்து விடக் கூடாது. ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டதாரியான கில் உருதுக் கவிதையில் மிகத் தேர்ச்சி பெற்றவர். போலீஸ் அதிகாரிகளைத் தன்னை வரே போல விட்டுக் கொடுக்காது அரவ ணைத்து உற்சாகமூட்டி, இந்த வன்முறை யாளர் பாசறையில் முன்னின்று போராடும் வீரம் மிகுந்த அதிகாரியான இவர் தேசிய கீதத்தைக் கேட்டாலே மெய்சிலிர்த்து விடுவாராம்.

தமிழ்ப் படம் போடத் திரையரங்கம் இல்லையே!

ஒரு பொதுத் துறை வங்கியில் டி.ஜி. எம்மாக இருக்கும் சேஷாத்திரி, வாசு தேவன் மற்றும் சில தமிழன்பர்கள் சேர்ந்து 'தில்லி தமிழ் பிலிம் சொஸைட்டி'யைத் தொடங்கினர். இதன் தலைவர் யார் தெரி யுமா, வியக்காதீர்கள், தயாரிப்பாளர் ஜீ. வெங்கடேசுவரன்தான்!

அண்மையில் 'தளபதி' படம் திரை யிடப்பட்டபோது ஜீ. வி. தமது உரையில் ''தில்லி நகரத்தில் தமிழ்ப் படம் போட நல்ல திரையரங்கம் இல்லையே!'' என்று குறிப்பிட்டார்.

அவ்வளவுதான், செய்தி மற்றும் ஒலி பரப்புத் துறையில் ஜாயிண்ட் செக்ரட்டரி யாக இருக்கும் எஸ். லக்ஷ்மி நாராயண னுக்கு வந்ததே வேகம். செய்தார் ஒரு அறிவிப்பு : ''எனது நிர்வாகத்தின் கீழ் இரண்டு அரங்குகள் உள்ளன. எப்போது வேண்டுமானாலும் சொஸைட்டியின் உப யோகத்துக்கு அனுமதி தரச் செய்கிறேன்'' என்று. வேறென்ன வேண்டும்.

- இமயவரம்பன்

கம்ப்யூட்டர் கிராமம்

21

"ஷண்" என்றான் மிகுந்த வியப்புடன். மனோஜுக்கு சந்தோஷம் பீறிட, அதே சமயம் கொஞ்சம் பயமும் ஏற்பட்டது. சுற்றிலும் பார்த்துக் கொண்டான். "எங்க வந்தே? இதுநாள் வரை எங்க இருந்தே?"

"சில நாள் பம்பாய் போய் வந்தப்புறம் பெரும்பாலும் இங்கதான் இருந்தேன்."

"இங்கதான்னா...."

"இதே இடத்தில, இதே வள்ளிக் குப்பம் கிராமத்தில."

"யு மஸ்ட் பி ஜோக்கிங்" என்றான்.

"இல்லை" என்று தன் தலையில் தலைப்பாகையைச் சுற்றிக் கொண்டு, "இப்போ புரிகிறதா?" என்றான் ஷண்பேகர்.

"உஜாகர் சிங்."

இதுநாள் வரை உலவிய இரண்டு சர்தார்ஜிகளில் ஒருத்தன் ஷண்பேகர்! எப்படி கவனிக்காமல் விட்டோம். அவன் பேசவே இல்லை, அதனால்தான்.

"ஆம் பம்பாயிலிருந்து வந்தது கர்த்தார் சிங் ஒருத்தன்தான். நான்தான் அண்மைக் காலத்து சிங். துப்பறிய இந்த வேஷம் ஒத்துழைத்தது."

"ஷண், புரியவே இல்லை. என்ன ஆச்சு அன்றைக்கு? போலீஸ் உன்னை அரஸ்ட் பண்ண போது நீ தப்பி ஓடினதிலிருந்து சொல்..."

"ஓடிப் போய் இரண்டு நாள் தலைமறைவாக இருந்தேன். பம்பாய் போனேன். திரும்ப வந்தேன். போலீஸ் சுற்றுப்புற கிராமங்கள் அனைத்திலும் வலை வீசித் தேடின போது, நான் இங்கேயே வள்ளிக்குப்பத்திற்கும் செடுப்பாக்கத்துக்கும் ஷட்டிலில் அடித்துக் கொண்டிருந்தேன் லாரியில்."

"எதற்காக?"

"செல்வியைக் கொன்றது யார் என்று கண்டுபிடிப்பதற்காக அந்த வேஷம் தேவைப்பட்டது."

"கொன்றது யார்?"

"ஷண்முகமும் பூசாரியும்தான் செய்திருக்கிறார்கள். அதை வாட்ச்மேன் பார்த்திருக்கிறான். அவனையும் கொன்றிருக்கிறார்கள்."

"அப்படியெனில் நடேச பண்டிதர் சொன்னதெல்லாம்...."

"நிஜம்தான். டீக்கடைக்காரப் பையன் இதைப் பார்த்ததற்குச் சாட்சியாக இருக்கிறான். ஆனால் போலீஸுக்குப் பயந்து கொண்டு வெளியே சொல்லாமல் இருந்திருக்கிறான்."

"எதற்காகக் கொன்றார்கள்?"

"இரண்டு பேரும் செல்வியை அன்றைக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள்."

"நீயும்தான்."

"நான் சம்மதத்துடன். அவர்கள் சம்மதமில்லாமல். அவள் திமிறும் போது பிசகாக அடிபட்டு விட்டது. அவர்கள் பயந்து போய் முனீஸ்வரன் தண்டனை என்று மரத்தில் தூக்கில் தொங்க விட்டு விட்டார்கள். அதைப் பார்த்த வாட்ச்மேனையும் தீர்த்துக் கட்டி, ஜீப்பில் போட்டு, நடேச பண்டிதரின் வீட்டுப் பின்கட்டில் புதராக இருக்கும் இடத்தில் புதைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை டீக்கடைக்காரன் பார்த்திருக்கிறான்."

"இதெல்லாம் பாஷை தெரியாமல் எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"எனக்கு ஒரு அஸிஸ்டண்ட் கருப்பாயி. ஒரு சின்னப் பையனை ஒத்தாசைக்கு வைத்துக் கொண்டேன்."

"இதையெல்லாம் எப்படி நிரூபிக்கப் போகிறாய்? நேரடி சாட்சி யாருமே இல்லையே?"

"கலெக்டருக்கும் டி.எஸ்.பி.க்கும் பெட்டிஷன் எழுதிப் போட்டிருக்கிறேன். புலன் விசாரிக்க ஸிபிஐ குழு வரப் போகிறது. அதுவரைக்கும் விஷயம் ரகசியமாகவே இருக்கட்டும்."

"இப்போது ஷண்முகம் வந்தால் உன்னைக் கைது செய்வாரே ஷண். மறுபடி தலைமறைவாகி சிங் வேஷம் போட்டு விடு."

"தேவையில்லை."

"என்ன, ஏன் தேவையில்லை?"

"ஷண்முகம், பூசாரி எல்லாரும் இப்போது என் நண்பர்கள். பூசாரிதானே பாட்டு எழுதிக் கொடுத்து... என்ன ப்ரமிளா?"

"என்ன சொல்கிறாய்?"

ஷண்பேகர் அதைக் கவனிக்காமல், "என்ன ஆச்சு மரம்?" என்றான்.

"வெட்டியாகி விட்டது."

சுஜாதா

''வேலையைத் தொடரலாம் என்கிறாய்!''

''ஆம்.''

''எப்படி இது நிகழ்ந்தது?''

''ஏன் கேட்கிறாய்! நீ இல்லாத போது இவள் பண்ண ரகளை... ஆவேசம் போல வந்து மண்டபத்தில் சாமி சிலை இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி, இப்போது முனீஸ்வரன் மரத்திலிருந்து மண்டபத்துக்கு இடம்பெயர்ந்து விட்டார்.''

''தட்ஸ் ஸூப்பர்.''

''எல்லாமே விந்தையாக. எது தெய்வம், எது பொய் என்று எல்லாமே குழப்பமாக இருக்கிறது. இந்தப் பெண் மிக விநோதமாக நடந்து கொள்ள, தமிழில் என்ன என்னவோ பாட்டெல்லாம் சொன்னாள். ஆச்சரியம்.''

''அப்படியா? என்ன ப்ரமிளா?''

''ஆம்'' என்று சிரித்தாள்.

''என்ன ஆச்சு உனக்கு?''

''எனக்கே தெரியாது ஷண்பேகர். என்னவோ கனவில் நடப்பது போலத்தான் உணர்ந்தேன். சரியாக ஞாபகமே இல்லை.''

''அப்படியா?''

''ஆனால் இவள் சொன்ன இடத்தில் சிலை புதைந்திருந்தது என்னவோ நிஜம் தான்.''

''டோட்டு திரும்பி வந்து விட்டது ஷண்.''

''அப்படியா? டோட்டுவா?''

''ஆமாம்!''

''எதையும் விளக்கமாகப் புரிந்து



கொள்ள முடியவில்லை. ரத்து செய்து விட்டேன். வேலை முடிந்து ஊருக்குப் புறப்பட்டால் போதும். ஷண், ஆர் யு ஷ்யூர்? இன்ஸ்பெக்டர் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்தானே?''

''உத்தரவாதம். குற்றமுள்ள நெஞ்சு.''

''எனக்குக் கவலையாக இருக்கிறது. சைட்டுக்கு யாரும் வர மாட்டார்கள். தலை மறைவாக இரேன்.''

''தேவையில்லை.''

ராத்திரி புறப்பட்டு ஜீப்பில் திரும்பினார்கள்.

''நம் நண்பரை முதலில் பார்க்கலாம்'' என்றான்.

முனீஸ்வரன் கோவில் களை கட்டி பஜனை, சந்தியாகால பூஜை நடந்து கொண்டிருக்க, பூசாரி ரத்தத் திட்டாகக் குங்குமம் அணிந்து, பக்தர்களுக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்க, ஓரத்தில் ஷண்முகம் ஜீப்பில் ரேடியோவில் பேசிக் கொண்டிருந்தார். ஷண்பேகர் அவரிடம் சென்று, ''ஹலோ இன்ஸ்பெக்டர் ஷண்முகம்'' என்றான்.

அவர் நிமிர்ந்து, ''அட நீங்களா, எப்ப வந்தீங்க? பம்பாய்ல யாவரும் சௌக்கியமா?''

''என் நண்பனுக்கு பயம். என்னை நீங்க அரஸ்ட் பண்ணிடுவீங்களோன்னு...''

மனோஜ் தலையாட்ட, ''இல்லைங்க, இவர் பேர்ல இல்லைன்னு ப்ரூஃப் ஆயிருச்சுங்க.''

''பின்ன அந்தப் பொம்பளையைக் கொன்னது யாருங்க?''

''வாட்ச்மன்தாங்க.''

''அப்படியா?''

''அன்னைக்கு இவரைப் பின் தொடர்ந்து வந்திருக்காங்க. வெளிய வரப்ப, வம்பு பண்ணப் போக, அந்தப் பொண்ணு திமிர, ஏதோ எக்குத் தப்பாப் பட்டிருக்கு. செத்துருச்சு. மரத்தில தொங்க விட்டுட்டான்.''

''அப்படீங்களா, அப்ப ஷண்பேகர் பேர்ல சந்தேகம் இல்லை?''

''முழுக்கவே சந்தேகம் கிடையாதுங்க. விசாரிக்கறதுக்காகக் கூட்டி வந்தா, இவர் தான் பயந்துக்கிட்டு ஓடியே போயிட்டாரு! போகவும் சந்தேகம் வலுத்துருச்சுங்க.''

''அதானே!''

''உங்க வேலையெல்லாம் நடக்குதில்லை?''

''நடக்குது.''

''அம்மா சௌக்கியங்களா?''

''ம்'' என்றாள் ப்ரமிளா.

''மறுபடியும் ஆவேசம் வந்துருச்சுங்களா?''

''இல்லை இதுவரை.''

''புண்ணியம் பண்ணவங்க. முனீஸ்வரன் அனுக்கிரகம் பெத்தவருங்க இந்தம்மா'' என்றார் பொதுவாக ஷண்முகம்.

ப்ரமிளாவை வணங்க, ப்ரமிளா பின் வாங்க அவர் சென்றார்.

ப்ரமிளா, ''எனக்கு எல்லாமே சிரிப்பு வருது'' என்றாள்.

டிஸி வீட்டில் ஷண்பேகருக்குப் பெரிசாக வரவேற்புக் கொடுக்கப்பட்டு, தீர்த்த வாரியும் சிக்கனுமாக இருந்தது. நித்யாதான் ப்ரமிளாவைத் தனியாக அழைத்துச் சென்று விட்டாள். மொட்டை மாடி. டேப்ரிக்கார்டரில் சங்கீதம் போட்டு விட்டு ஷண்பேகர் பாட்டிலை உயர்த்தி ''டு ஸூப்பர்ஸ்டிஷன்'' என்று மடக்கென்று குடித்தான்.

''சுபமான முடிவு. ஸாட்டிலைட்டு வைக்க அருள் புரிந்து விட்டார் முனீஸ்வரன். நவீன விஞ்ஞானத்துக்கு நகர்ந்து கொடுத்து விட்டார். இடம்பெயர்ந்து விட்டார். இவர் அல்லவோ கடவுள்... சீர்ஸ்.''

''ப்ரமிளா இல்லாவிட்டால் இந்த முனீஸ்வரனை - புது இடத்தைக் கண்டு பிடித்திருக்க முடியுமா?''

டோட்டு வாலை ஆட்டிக் கொண்டு வந்தது. ''டோட்டுவுக்குக் கூட நெற்றியில் குங்குமம். இதற்கு இன்னும் ஒரு வருஷத்தில் ஒரு புராணம் எழுதி விடுவார்கள். 'டோட்டு தேவன்! முனீஸ்வர தேவனின் வாகனம். முன் காலத்தில் ஒரு ரிஷி



''கல்யாண வீட்டில் நான் தட்டிக்கிட்டு வர முயற்சி பண்ணின செருப்பு ஒரு எலெக்ட்ரானிக்ஸ் எக்ஸ்பர்ட்டுடையது!''

''எப்படிக்கண்டுபிடிச்சே!''

''கால்ல மாட்டினதும் பீப்பீப்ன்னு சப்தம் போட்டு மானத்தை வாங்கிடிச்சே!''

- எஸ். முகம்மது யூசுப்

பத்தினியாக இருந்த டோட்டு, எப்போதும் முனீஸ்வரனையே நினைத்துக் கொண்டு ரிஷியை கவனிப்பதில் குறைவாக இருந்த தால் ஒருநாள் ரிஷி சாபம் கொடுத்து விட்டார். என்ன சாபம்? நீ அடுத்த ஜன்மத் தில் பம்பாய் நாயாகப் பிறக்கக் கடவது!

"அதற்கு அந்தப் பெண் சாப விமோசனம் எப்போது என்று கேட்க, 'வள்ளிக்குப்பம் கிராமத்தில் முனீஸ்வரன் நான் அவதரிக்கப் போகிறேன். அங்கே வந்து, என் கோவிலில் இரண்டு ஜன்மங்கள் கழித்தால் மறுபடி பத்தினியாவாய். இப்போது டோட்டுவைக் கொன்றால் உடனே ஆவியடித்து ரிஷி பத்தினி வடிவம் பெறும். என்ன டோட்டு?"

வாலை ஆட்டியது. "வாழ்க இந்தியா" என்றான்.

ப்ரமிளா மாடிக்கு வந்து அவர்களைச் சாப்பிட அழைத்தாள். அதன்பின் ஷண் பேகர் ப்ரமிளாவைப் புகழ ஆரம்பித்தான். "உன் மனைவியைப் போல புத்திசாலி யைப் பார்த்ததில்லை நான். எத்தனை சமர்த்து, எத்தனை ஒத்துழைப்பு!"

"என்ன சொல்கிறாய்" என்றான் மனோஜ் வியப்புடன்.

"அது என்ன பாட்டு சொல்லு" என் றான் ஷண்பேகர்.

ப்ரமிளா வெட்கத்துடன் "வேண்டாம்" என்றாள்.

"சொல்லித்தான் ஆக வேண்டும். என்ன சொல்லு..."

ப்ரமிளா மெல்ல, "ஹரிஹரா திரி புராந்தக ஜீவாதாரா எங்கள் அம்பிகை யொருபாகா, ஜீவாதாரமாய் என்னுள் என் ணெய் போலிருந்து நினைப்பவர்க்கருள் போகா" என்றாள்.

மனோஜ் புரியாமல் "என்ன ப்ரமிளா இதையேதான் அன்னைக்கும் சொன்ன?" என்றான்.

"பூசாரிதான் சொல்லிக் கொடுத்தான்" என்றாள்.

"ஷண் என்ன இதெல்லாம்? ப்ரமிளா என்ன சொல்லு?"

"மரத்தை வெட்ட வேறு வழியே இல்லை. ஒரே வெட்டில் மரமும் வெட்டப் பட்டது. மனோஜ், மரத்தை உண்மையா கவே வெட்டினது யார் தெரியுமா? நான் தான்."


மனோஜ், "இட் ஜஸ்ட் டஸண்ட் மேக் சென்ஸ்" என்றான்.

ப்ரமிளா, "ஸாரி மனோஜ். வெரி ஸாரி. என்னை மன்னிச்சேன்னு சொல்லியே ஆக ணும்" என்றாள்.

"எதுக்கு?"

"உன்னை ஏமாத்தினதுக்கு."

(அடுத்த இதழில் முடியும்)




" 'மெட்ராஸ் ஐ' குணமாகாம லிருக்க ஏதாவது மருந்து இருக்கா டாக்டர்?"

"ஏன்...?"

"நிறைய பேர்கிட்டக் கடன் வாங்கி யிருக்கேன்."


- அம்மனூர் சாம்பமூர்த்தி



☐ இங்கிலாந்தில் நடிகர்களைக் கௌர விக்க 1985-ல் நடிகர்களின் படத்துடன் தபால் தலை வெளியிட்டு அந்த ஆண்டை 'சினிமா' ஆண்டாகக் கொண்டாடினர்.

தபால் தலைகளில் கௌரவிக்கப்பட்ட நடிகர்கள் : பீட்டர் செல்லர்ஸ், ஹிட்ச்காக், சார்லி சாப்ளின், டேவிட் நிவென் ஆகி யோர்.

- ஆர். ஆர். பூபதி



"போன மாதம் மாடி போர்ஷன்ல திருட்டுப் போச்சு; இன்னைக்கு 'கிர வுண்ட் ஃப்ளோர்'ல திருட்டுப் போயி டிச்சு சார்..."

"அப்ப திருட்டு படிப்படியா குறையிதுன்னு சொல்லுங்க?"

- சீர்காழி. வி. ரேவதி

போட்டிக் கதை - 18

பஸ்ஸிலிருந்து அனைவருமே இறங்கி விட்டனர், முரளியைத் தவிர. ஐந்து நிமிஷமாய் அப்படியே உட்கார்ந்திருந்தவனை பஸ்ஸுக்கு வெளியே, ஒரு குரல் ''ஸார்! ஊருக்குப் புதுசா? பஸ்ஸை விட்டு இறங்குங்க... வேற ஊர் போகணுமா? நாகப்பட்டினத்துக்கு பஸ் ரெடியா இருக்கு...'' என்று அக்கறையாய் விசாரித்தது.

'ஊருக்குப் புதுசா?'

முரளிக்குச் சிரிப்பாய் வந்தது.

திருவாரூர் சொந்த மண் இல்லையென்றாலும் பக்கத்து கிராமத்திலிருந்து படிக்க வந்த இடம் அல்லவா? பன்னிரண்டு வருஷங்கள் பள்ளிப் படிப்பிற்காகச் சுற்றிய இடம் அல்லவா? கல்லூரிப் படிப்பு, பிறகு சமீபமாய்க் கிடைத்துள்ள வேலை என்று சென்னையில் நிரந்தரமாகி விட்டாலும் பிறந்து வளர்ந்த இடத்தின் மணமே தனி. பதினேழு வருஷங்கள் தன்னை இந்த அளவு ஈர்க்குமானால் அம்மாவிற்கு - நாற்பது வருஷங்களாய் ஊரோடு, மண்ணோடு ஒன்றிப் போனவளுக்கு - எந்த அளவு ஒட்டுதல் இருக்கும் என்பதை முரளியால் உணர முடிந்தது. அதனால்தான் அவன் அம்மாவிற்காக நேற்று அண்ணா, மன்னியிடம் வற்புறுத்திச் சொல்லிப் பார்த்தான். ஆனால் மன்னி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. அவள் 'படபட' என்று பொறிந்து தள்ளுவாளே தவிர மனதில் கல்மிஷம் இல்லாதவள். இல்லாவிட்டால் மைத்துனன் முரளியை கல்லூரிப் படிப்புப் படிக்க வைத்து, வேலைக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லிக் கிடைக்க வைத்து, அவனைப் பெற்ற பிள்ளையைப் போல் நடத்தி இருக்க மாட்டாள். அவள் செய்வது அம்மாவிற்குத் தெரிவதில்லை. 'கத்தறாளேடா, முரளி, நான் எப்படி அங்கே வந்து இருக்கிறது?' என்று பயப்பட்டாள். பயமும், பிடிவாதமும் அம்மாவின் பிறவிக் குணம். எரிந்து விழுவதும், பொறுப்பை ஏற்றுச் செய்வதும் மன்னியின் சுபாவம்.

''எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலே, முரளி...'' அண்ணா தனிமையில் தம்பியிடம் விசனப்பட்டார். இருவருக்கும் இடையே பதிமூணு வயது வித்தியாசம். ராமருக்கு லட்சுமணன். அண்ணா பத்மனாபனுக்கு முரளி. அவரைப் பார்க்கவே சங்கடமாயிருந்தது. முப்பத்தி எட்டு வயசுக்கு ரொம்பவும் வயசானவர் போலத் தெரிந்தார். இளகின மனசு.எளிதில் எவரையும் நம்பி விடும் இரக்க மனம். இதன் சமீபத்திய இழப்பு நாற்பதாயிரம் ரூபாய். கூடவே இருந்து பழகிக் குழி பறித்த நண்பன் ஒருவனின் துரோகம். ஜாயிண்ட் கையெழுத்துப் போட வைத்து, பத்மனாபனை மாட்டி விட்டுத் தலைமறைவாகி விட்டான். விஷயம் தெரிந்ததும் பத்மனாபன் இன்னும் வாடி வதங்கிப் போய் பரிதாபமாய்த் தவித்தார். முரளி வேலையில் சேர்ந்து ஆறு மாதம்தான் ஆகிறது. அவனால் அந்தப் பணத்தைப் புரட்ட இயலாது. ஒன்றா, இரண்டா நாற்பதாயிரம் ரூபாய்!

கடைசியில் மன்னிதான் தைரியமாய், திட்டவட்டமாய்ச் சொன்னாள்.

''கிராமத்து வீட்டை வித்து, சிநேகிதன் கடனை அடையுங்க. வேற வழி?''

''வீட்டை விற்பதா? அப்படியானால் அம்மா?'' பத்மனாபன் கவலையுடன் கேட்டார்.

''அம்மாவையுமா விற்கச் சொல்றேன்? வீட்டை வித்த பிறகும் உங்கம்மா அங்கே என்ன செய்யணும், எதுக்கு இருக்கணும்?



ஷைலஜா

நினைவுச் சுமைகள்



ரெண்டு பிள்ளையும் இங்கே இருக்க, இத்தனை நாளாய்ப் புருஷனும் இல்லாம, வயசான காலத்தில் தனியாய் இருந்ததே தப்பு. இதை நான் சொன்னா யார் கேட்டுக்கறீங்க? 'அம்மா இஷ்டம்படி ராதா.. அவ இருக்கிறவரை இருக்கட்டும்' அப்பமேன்னு என் வாயை அடக்கிட்டீங்க... இப்ப நீங்களே மாட்டிட்டு முழிக்கறீங்க.. மானம் போறதுக்கு முன்னாடி அந்த வீட்டை வித்துப் பணத்தை அடையுங்க. ஓடிப் போனவன் ஒருநாள் வந்து திருப்பினால் திருப்பதிக்கு நேர்ந்துப்போம்...''

அண்ணனும், தம்பியும் ஒருநாள் முழுவதும் யோசித்தார்கள். வீட்டை விற்பது என்பதே வேதனையான விஷயமாயிருந்தது. அதிலும் யார்பட்ட கடனுக்கோ தான் சூழ்நிலைக் கைதியாகி விட்டதில் பத்மனாபனுக்கு உடம்பே கூசியது. மூன்று தலைமுறையாகச் சொந்தமான வீடு. முற்றமும், தாழ்வாரமுமாய் அகன்ற வாசல் திண்ணையும், நீண்ட புழக்கடையும் கொண்ட பெரிய வீடு. நகரத்துப் பக்கமிருந்தால் லட்சங்களில் விலை போகும். குக் கிராமம் ஆதலால் நாற்பதுக்குப் பக்கத்தில்தான் போனது. ஆம்; வீட்டை விலை பேசியாகி விட்டது. கிராமத்தில் அப்பாவின் நண்பராயிருந்த ராஜகோபாலனின் பிள்ளை தாசரதி தான் சென்னையில் விஷயம் தெரிந்ததும் பத்மனாபனிடம் வந்து பணத்தையே கொடுத்து விட்டான்.

''தெரிஞ்ச ஊரு. தெரிஞ்ச வீடு. பழகின மனிதர்கள்.. இது போதுமேடா பத்மனாபா... என்றான் தாசரதி.

''இருந்தாலும் ஒரு வார்த்தை அம்மாவைக் கேட்டு விட்டு...'' 'பத்மனாபனுக்கு நாத் தழுதழுத்தது. கண் குளம் கட்டியது. கூறு கூறாய் உடம்பை யாரோ வாளால் அறுப்பது போலிருந்தது. அம்மா! நான் உன்னை மோசம் செய்துட்டேன். உன்னைக் கேட்காமலேயே. உன் அனுமதியின்றியே நீ குடி இருக்கிற வீட்டை விலை பேசிட்டேன்.'

''முரளி...''


''அண்ணா?''

''அம்மாவுக்கு அந்தக் கிராமத்து வீடு தாம்ப்பா உலகம். உலகத்தை விலை பேச எனக்கென்ன உரிமை இருக்கு?''

''அண்ணா... அழாதீங்க, ப்ளீஸ்...''

''நோ... உனக்குத் தெரியாது முரளி.. அம்மாவுக்கு அந்த வீடும் நம்மை மாதிரி ஒரு குழந்தை. 'வீட்டுச் சுவருக்கெல்லாம் காது உண்டு. வீட்டிற்குள் நல்லதைச் செய்யணும்; நல்லதைப் பேசணும்... நாலு பேருக்கு அன்னமிட்டு வயிறார அனுப்பணும்' என்பாள். ஒருநாள் புழக்கடைச் சுவர், பெரிய மழையில் விழுந்ததுக்கு நாள் பூரா சாப்பிடாம விசனப்பட்டா. 'மனுஷனுக்குக் கை மாதிரி வீட்டுக்குச் சுவர். பாவம் விழுந்துடுத்து' என்று புலம்பிக் கொண்டே இருந்தா... சரியாக்கிறவரை அம்மா முகத்தைப் பார்க்க முடியலே... 'பத்மனாபா... உங்கப்பா உயிரை விட்ட இதே கூடத்துல என் உயிரும் போயிடணும்... என் உடம்பு மேலே கொஞ்சம் இந்த வீட்டு மண்ணைக் குங்குமம் மாதிரி நெத்தியில இட்டு அப்புறம் கொள்ளி வை' என்றாள் ஒருநாள். முரளி! அம்மாவின் பிடிவாதம் எனக்குத் தெரியும். அவள் அந்த வீட்டை விட்டு வர மாட்டா. வீட்டை வித்த விஷயம் தெரிஞ்சதுமே பாதி உயிர் போயிடும் அவளுக்கு...''

''அண்ணா! நான் அம்மாகிட்டே எதுவும் சொல்லப் போறதில்லே... 'கொஞ்ச நாள் எங்களோட வந்து இரு'ன்னு கூட்டிண்டு வரேன். போறுமா?''



''அந்த பாகவதரை 'புக்' பண்ணினா நம்ப ரேட்டுக்குக் கட்டுப்படியாகாது போலிருக்கு...''

''அப்படி என்ன கேட்கறார்?''

'' 'தேங்கா மூடி'ன்னா கேட்கறார்!''

- அகஸ்தியான்பள்ளி ராம்ஜி

''முடியுமா? அம்மா வருவாளா? வீட்டை விட்டுட்டு அதுவும்?''

''பார்க்கலாம்...''

''நான் உன் மன்னியைக் கொஞ்சம் பொறுமையா இருக்கும்படி கேட்டுக் கறேன். ராதா சுபாவம் மாறணும்...''

''மன்னி பாவம். உங்களுக்காக, உங்க மானத்தைக் காப்பாத்தத்தானே இந்த யுத்தி சொன்னா? மன்னியை எதுவும் சொல்லா தீங்கோ...''

''சரி.. இப்ப நீ கிராமத்துக்குப் போறேங் கிறியா?''

''ஆமாம்.''

''போய்?''

''அம்மாவை அழைச்சிட்டு வந்துட றேன். அப்புறமா இங்கே வந்த ஒரு பத்து நாளில் வீட்டை வித்ததைச் சொல்லிட லாம்...''

''எனக்கென்னவோ அம்மா வரு வான்னு தோணலை... நான் பாவி. மகா பாவி. அந்த நாசக்காரனுக்குக் கையெ ழுத்துப் போட்டு, நான் ஏமாந்ததுக்கு எல் லாரையும் கஷ்டப்படுத்தறேன்.''

''அண்ணா... ப்ளீஸ்... திரும்பத் தளர்ந்து போகாதீங்கோ... மனசைத் தேத் திக்குங்கோ...''

''எனக்கு நம்பிக்கை இல்லே, முரளி. அம்மாவை நீ எப்படி, என்ன சொல்லி அழைச்சிண்டு வரப் போறியோ, தெய் வமே?''

''ஸார்...'' க்ளீனர் பாய் அழுக்குத் துணியோடு பஸ்ஸில் மறுபடியும் நுழைந் தவன், முரளி விழித்த நிலையில் தூங்குவது கண்டு வியப்புடன் கூப்பிட்டான்.

முரளி சட்டென எழுந்து கொண்டான். ஃப்ரீப்கேஸுடன் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினான்.

ஒரே நாள் தங்கிப் போவதென்று புறப் பட்டதால் பெட்டி கைக்கு இலேசாகத்தான் இருந்தது. கனமெல்லாம் மனதை அழுத்தி, நாலடி எடுத்து வைப்பதே பிரயத்தனமாய் இருந்தது.

அதற்குள், ''முரளி! முரளி!'' என்ற குரல் சிநேகிதமாய் விளித்தது. திரும்பினான். கண்ணன்! கூடப் படித்தவன். திருவாரூரி லேயே வேலையாகி விட்டதைச் சமீபத்திய கடிதத்தில் எழுதி இருந்தான். கிராமத்தில் வீடும் பக்கத்திலேயே.

''இப்பத்தான் மெட்ராஸ்லேந்து வரியா முரளி? வா... வா... பஸ் ரெடியா இருக்கு... பெங்களூரில் கஸின் கல்யா ணத்துக்குப் போயிட்டு இப்பத்தான்... ஜஸ்ட் பஸ்ஸை விட்டு இறங்கினேன். வா, பஸ் போயிடப் போறது...''

முரளி வலுக்கட்டாயமாய் பஸ்ஸில் திணிக்கப்பட்டான். திகைப்பில் முரளிக்கு எதுவும் பேச முடியவில்லை.

ஊர் வந்ததும் இருவரும் இறங்கிக் கொண்டனர். தெரு முனையிலேயே கண்ணன், முரளியின் வருகையைத் திண் ணைக்குத் திண்ணை பிரகடனம் செய்தான். முரளி நினைத்தது ஒன்று, நடந்ததே வேறு.

''வா... முரளி.. வாப்பா...'' அம்மா வின் மெலிந்த குரல் முரளிக்கு நெஞ்சைப் பிசைந்தது. கண் மலர்ந்து, உரத்த குரலில் விளிப்பவள் உற்சாகக் குறைவாய்த் தெரிந் தாள்.

''உடம்பு சரியில்லையா, முரளி? எப்ப டியோ இருக்கியேப்பா?''

முரளிக்குத் தூக்கிவாரிப் போட்டது. தான் கேட்க நினைத்ததைத் தன்னிடமே அம்மா கேட்டு விட்டாளே!

குளித்துச் சாப்பிடுகிற வரை முரளி எதுவுமே சொல்லவில்லை. வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தான். திண்ணையில் சுக மாய்க் காற்று வருடியது. தெற்குப் பார்த்த வீடு. இதோ இந்தத் தாழ்வாரத்தில்தான் அம்மா மடியில் படுத்து மதனகாமராஜன் கதைகளைக் கேட்டிருக்கிறான்... சமைய லறை ஒட்டிய அரங்கில் அம்மா கையால் பழையதும், மாவடுவும் சாப்பிட்டிருக் கிறான். முற்றத்தில் காயும் அப்பளத்தைப் பாதி காய்வதற்குள் எடுத்துச் சுவைத்து... ஓ! பதினேழு வருஷங்களுக்கே இத்தனை நினைவுச் சுமை என்றால் நாற்பது வருஷங் களுக்கு....?

''முரளி...''

அம்மாவின் கனிவான குரல் அழைத் தது. நிமிர்ந்தாள். எதிர்த் திண்ணையில் தனது மெலிந்த தேகத்தை ஒடுக்கிக் கொண்டு அம்மா அமர்ந்து கொண்டாள்.

''அம்மா?'' முரளி எழுந்து சென்று அவளருகில் உட்கார்ந்தான். அம்மா ஏதோ பேசப் போகிறாள் என்பதற்காகக் காத்திருந்தான்.

சிலுசிலுவெனக் காற்று வீசியது.

அம்மா தயங்குகிறாற் போலிருந்தது.

முரளிக்குச் சொல்லி விடலாமா என்றிருந்தது. எல்லாவற்றையும் சொல்லி அம்மாவைச் சமாதானப்படுத்தி அழைத்துப் போனால் என்ன? பத்மனாபன் எச்சரித்து விட்டான். 'முரளி! அம்மாவிடம் நான் ஜாயிண்ட் கையெழுத்துப் போட்டு மாட்டிக் கொண்டதைச் சொல்லாதே, அவ மனசு தாங்காது...''

''முரளி?''

''சொல்லும்மா'' முரளி மெல்ல அவள் விரல்களைப் பற்றினான்.

''முரளி! இந்த வீட்ல நடந்த பல விஷயங்கள் எனக்கு இன்னமும் நெஞ்சில் பசுமையாய் இருக்குப்பா... திரும்பத் திரும்ப அதை நினைச்சி... நினைச்சி...'' விசும்பியவள் தொடர்ந்தாள். ''முரளி! நினைவிருக்கா? உங்கப்பா இந்தத் தாழ்வாரத்தில் கிடந்தது? நிஜமா உங்கப்பா செத்துப் போலைப்பா. சாந்தமான அந்த முகம் சாகிற போது கூட எத்தனை தேஜஸ்?''

பார்வையை எங்கோ ஓட்டி விட்டுப் பிறகு தொடர்ந்தாள்.

''நீயும், பத்துவும் கொட்டமடித்த முற்றம்... உன் சின்ன அத்தைகளுக்கு இதே கூடத்துலதான் ஜாம்ஜாம்னு கல்யாணம். சீமந்தம், பிள்ளைப்பேறு...''

''அம்மா!''

''முரளி! சமீபமாய் எனக்குப் பழைய நினைவுகள் தேனடையைச் சுத்தற தேனீக்கள் மாதிரி மனசை அடைக்கிறது. அழுத்தறது. பல சமயம் உலுக்கிப் போடறது. அப்ப ரொம்ப பயமாகிப் போயிடறது... நினைவுகள் இலேசா இருந்தாச் சுகமாயிருக்கும். கனமாயிட்டா பாரம் தாங்காம பதற்றமாயிடும். இனிமேலும் என்னால் தனியா இந்த வீட்ல இருக்க முடியாதுப்பா.. வாழ்ந்ததை நினைச்சிப் பெருமூச்சு விடறதை விட, வாழப் போறதை நினைச்சிச் சந்தோஷப்படற பக்குவம் வயசானவங்களுக்கு வரணும்... முரளி! இந்த வீட்டை வித்துடு.. நான் பத்து கூடவும், உன் கூடவும் கடைசி வரை இருக்கத் தீர்மானிச்சிட்டேன். ராதாவை நான் புரிஞ்சுகிட்டேன். என் பயம் வென்றதுல, பிடிவாதம் விலகிடுத்து... இனிமே நான் உங்க கூட இருக்கவே பிரியப்படறேன்...''

அம்மா பேசப் பேச முரளிக்கு பிரமிப்பாக இருந்தது.

பாட்டொன்று கேட்டேன்

கொஞ்சம் காதல், கொஞ்சம் சோகம், கொஞ்சம் மர்மம், கொஞ்சம் திகில், கொஞ்சம் நகைச்சுவை, கொஞ்சம் டுஷ்ஷும் டுஷ்ஷும் என்று ஜனரஞ்சகக் கலவை.

கதாநாயகி ஒரு பாடகி. எனவே பாடல்களுக்குப் பஞ்சம் இல்லை. அவை இனிமையாக இருப்பது கூடுதல் அம்சம்.

சிதாராதான் அந்தப் பாடகி. சற்றுப் பளுவான பாத்திரம். செய்யாத கொலையைச் செய்துவிட்டதாக நினைத்துக் கொண்டு, அதைச் சொல்லவும் முடியாமல் மறைக்கவும் முடியாமல் அவதிப்படும் கட்டங்களிலும் சரி,. அதற்கு முன்னர் வில்லன் ரஞ்சனின் அணுகல்களைத் தவிர்க்க வழிதேடித் தவித்து, அவருடைய கடத்தல் திட்டங்களைத் தெரிந்து கொண்டதும் பளிச்சென முடிவெடுத்துப் போலீஸுக்குத் தெரிவித்து, அவர்கள் வந்து ரஞ்சன் அண்ட் கோவைக் கைது செய்து கொண்டு போகும் போது, அப்பாவியாக விழிக்கும் போதும் சரி, பெறுவது பாராட்டு.





கதாநாயகன் ரகு (முன்னாள் ரகுமான்) அழகாக ஆடுகிறார். அணைத்துப் பாடுகிறார். அவ்வப்போது மருத்துவமும் செய்கிறார். அதிகம் வேலையில்லை. அலட்டாமல் செய்திருக்கிறார்.

வில்லன் ரஞ்சனிடம் தெரிவது வித்தியாசமான கேடித்தனம். கெஞ்சுவதும் மிஞ்சுவதும் சமயங்களில் கலகலவெனச் சிரிப்பதுவும் ..... கவனத்தில் கொள்ள வேண்டியவர்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள் இருவர். ஒருவர் நிழல்கள் ரவி. மற்றவர் ரேகா. அதிலும் பின்னவர் போலீஸ் அதிகாரியாக வந்து ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக ஏகப்பட்ட கராத்தே + குங்ஃபூ.

நிகழ்ச்சிகளின் தொகுப்பில் ஓரிரு குழப்பங்கள் தென்பட்டாலும் விறுவிறுப்பான பொழுது போக்கு அம்சங்களின் மத்தியில் அவை அடிபட்டுப் போகின்றன.

- சி. ஆர். கே.

ஸப்தபதி




விவாஹம் ஆறுவகை; அவற்றில் "ஆருஷ" வகை விவாஹத்தில் (வேத விதிப்படி மாதா பிதாக்களுடன் அக்னி சாக்ஷியாக நடத்தப்படுவது) மாங்கல்ய தாரணம் செய்வித்த பிறகு "ஸப்தபதி" என்று சொல்லப்படும் சம்ஸ்காரம் முடிவு பெற்ற பின்னரே விவாஹம் நிறைபெறுவதாக ஐதீகம்.

"ஸப்தபதி" என்பது மணப்பெண் வலது காலை அம்மியின் மேல் வைத்து மணமகன் இடது கையால் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு அடியாக மந்திரத்துடன் ஏழு அடி நகர்த்தி வைப்பதாகும். இதன் தத்துவம் யாதெனில் :

முதல் அடி - மழை முதலான கால நிலைகள் அனுகூலமாக இருப்பதற்காகவும், இரண்டாம் அடி - தானியங்களின் உற்பத்தி அதிகரித்து சுபீக்ஷம் நிலவுவதற்காகவும், மூன்றாம் அடி - விரதாதிகள் (சதுர்த்தி, சஷ்டி, ஏகாதசி, சோம வார, சனி வார முதலியன) அனுஷ்டிக்க அபிலாஷை ஏற்படவும், நான்காம் அடி - வியாதிகளின்றி ஆரோக்ய வாழ்வு அடைவதற்காகவும், ஐந்தாம் அடி - பசு முதலியவைகள் நிரம்பப் பாலை அளிப்பதற்காகவும், ஆறாம் அடி - ஆறு ருதுக்களின் அனுக்கிரஹம் பெறுவதற்காகவும், ஏழாம் அடி - சப்தரிஷிகளின் ஆசியை அடைவதற்காகவும்.

எட்டாம் அடி - சுவை மிகுந்த தித்திப்பு காரவகை பக்ஷணங்களை வாங்குவதற்குக் கடவுள் உங்களை அனுக்கிரஹிப் பதற்காகவும்.





சிவகாமியின் சபதம்

முப்பத்தோராம் அத்தியாயம்

புலிகேசி ஓட்டம்

மாமல்லரும் பரஞ்சோதியும் ஆயனரின் அரண்ய வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள், என்ன மனோநிலையில் வந்து சேர்ந்தார்கள் என்பதைச் சற்று கவனிப்போம்.

மணிமங்கலம் போர்க்களத்தில் மகேந்திர பல்லவரின் சிறு படை, அடியோடு நாசம் செய்யப்படவிருந்த தறுவாயில், மாமல்லரும் பரஞ்சோதியும் பாண்டியனைப் புறங்கண்ட குதிரைப் படையுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் போர் நிலைமை அடியோடு மாறி விட்டது. சளுக்க வீரர் பின்வாங்கி ஓட ஆரம்பித்தனர். அவர்களைத் தொடர்ந்து போய் அடியோடு அழித்து விட்டு வர மாமல்லர் எண்ணிய சமயத்தில், போர்க்களத்தின் ஒரு மூலையில் மகேந்திர பல்லவர் மரணக் காயப்பட்டுக் கிடப்பதாகச் செய்தி கிடைத்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விடத்துக்கு ஓடிப் பார்த்த போது, காயப்பட்ட மகேந்திரரைப் பக்கத்து மணிமங்கலம் கிராமத்திலிருந்த அரண்மனை விடுதிக்குத் தூக்கிக் கொண்டு போய்ச் சிகிச்சை செய்து வருவதாகத் தெரிந்தது. சிநேகிதர்கள் இருவரும் உடனே அவ்விடத்துக்குச் சென்றார்கள். சிறிது நேரம் சிகிச்சைகள் செய்த பிற்பாடு மகேந்திரர் கண் திறந்து பார்த்தார். புதல்வனைக் கண்டதும் முதலில் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. மறுகணத்திலே மகிழ்ச்சி பாவம் மாறி அளவற்ற வேதனையும் கவலையும் அந்த முகத்தில் பிரதிபலித்தன.

''மகனே! உனக்குப் பெரிய துரோகம் செய்து விட்டேன்! என்னை மன்னிப்பாயா?'' என்று அவருடைய உதடுகள் முணுமுணுத்தன.

''அப்பா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள்தான் சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்து விட்டோமே! சளுக்கர் சிதறி ஓடுகிறார்கள்!....'' என்று மாமல்லர் சொல்லும்போதே மகேந்திரர் நினைவை இழந்து விட்டார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர சக்கரவர்த்தியைப் பத்திரமாகக் காஞ்சி நகருக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்து விட்டுப் போர்க்களத்தின் நிலைமையை ஆராய்ந்தார்கள். மகேந்திர பல்லவருடன் காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்த சைனியத்தில் பெரும்பகுதி வீரர்கள் மணிமங்கலம் போர்க்களத்தில் வீரசுவர்க்கம் புகுந்து விட்டதாக அறிந்தார்கள். சேனாதிபதி கலிப்பகையாரும் அந்தப் போர்க்களத்திலேயே உயிர் துறந்த செய்தி தெரிய வந்தது. மேலே தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று மாமல்லரும் பரஞ்சோதியும் யோசனை செய்தார்கள். காஞ்சி நகரைச் சுற்றிலும் இன்னும் பல இடங்களில் சளுக்க வீரர்களின் சிறு படைகள் ஆங்காங்கே கிராமங்களில் புகுந்து ஜனங்களை ஹிம்சித்துக் கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல் தெரிய வந்திருந்தது. எனவே, அப்படிப்பட்ட கிராதக ராட்சதர்களை முதலில் ஒழித்துக் கிராமவாசிகளைக் காப்பாற்றுவதுதான் தங்களுடைய முதற் கடமை என்றும் காலாட் படையும் வந்து சேர்ந்த பிறகு புலிகேசியின் பெரும் படையைத் தொடர்ந்து போகலாம்

என்றும் தீர்மானித்தார்கள்.

அவ்விதமே மூன்று நாட்கள் சுற்றிச் சுற்றி வந்து காஞ்சிக்குக் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் சளுக்கர் படையே இல்லாமல் துவம்சம் செய்தார்கள். இதற்குள்ளாகக் காலாட் படையும் வந்து சேரவே மீண்டும் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள். காஞ்சிக்கு வடக்கே மூன்று காத தூரத்தில் சூரமாரம் என்னும் கிராமத்துக்கு அருகில் ஒரு பெரும் போர் நடந்தது. இங்கே சளுக்கர் படைக்குத் தலைமை வகித்தவன் தளபதி சசாங்கன். இந்தச் சண்டையில் தளபதி சசாங்கனும் சளுக்க வீரர்களில் பெரும் பகுதியினரும் மாண்டார்கள், மற்றவர்கள் பின்வாங்கிச் சிதறி ஓடினார்கள். பல்லவர் படை அவர்களைத் துரத்திக் கொண்டு வெள்ளாறு வரையில் சென்றது.

தளபதி சசாங்கனைப் பின்னால் நிறுத்தி விட்டுப் புலிகேசிச் சக்கரவர்த்தி முன்னதாகவே வெள்ளாற்றைக் கடந்து போய் விட்டதாக மாமல்லரும் பரஞ்சோதியும் அறிந்தார்கள். மாமல்லர் வெள்ளாற்றையும் கடந்து அப்பால் புலிகேசியைத் துரத்திக் கொண்டு போக விரும்பினார். கலிப்பகையின் மரணத்தினால் இப்போது பல்லவ சேனாதிபதியாகி விட்ட பரஞ்சோதியார் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

''பிரபு! சக்கரவர்த்தியை எந்த நிலைமையில் நாம் விட்டு விட்டு வந்தோம் என்பது தங்களுக்கு நினைவில்லையா? அவரை அப்படி விட்டுவிட்டு நாம் நெடுகிலும் போய்க் கொண்டேயிருப்பது நியாயமா? கலிப்பகையும் போர்க்களத்தில் காலமாகி விட்டார். நாம் இல்லாத சமயத்தில் சக்கரவர்த்திக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் பல்லவ ராஜ்யம் என்ன கதி ஆவது? சளுக்கர்களால் சூறையாடப்பட்டும் ஹிம்சிக்கப்பட்டும் தவித்துக் கொண்டிருக்கும் கிராமவாசிகளின் கதி என்ன? அவர்களுக்கு அன்னவஸ்திரம் அளித்துக் காப்பாற்றும் கடமையை யார் நிறைவேற்றுவார்கள்? மதுரைப் பாண்டியன் மீண்டும் பல்லவ ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? பிரபு! இதையெல்லாம் யோசித்துப் பார்த்து விட்டுச் சொல்லுங்கள்'' என்றார் பரஞ்சோதி.

மகேந்திரருடைய தேக நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டவுடனேயே மாமல்லருடைய மனவுறுதி தளர்ந்து விட்டது. சற்று நேரம் தலைகுனிந்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர், ''சேனாதிபதி! நீங்கள் சொல்லுவது உண்மைதான். அது மட்டுமல்ல, நாம் இப்போது நமது சைனியத்துடன் முன்னேறினால் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் இல்லை. போகும் வழியில் ஏற்கெனவே சளுக்க அரக்கர்கள் கிராமங்களைச் சூறையாடிக் கொண்டு போகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் நாமும் போனால் கிராமவாசிகள் எங்கிருந்து உணவு அளிப்பார்கள்? நாமும் சேர்ந்து அவர்களை ஹிம்சிப்பதாகவே முடியும். எல்லாவற்றுக்கும் காஞ்சிக்குத் திரும்பிச் சென்று தந்தையின் உடல்நிலை எப்படியிருக்கிறதென்று தெரிந்து கொள்வோம். தக்க ஏற்பாட்டுடன் பிறகு திரும்புவோம்'' என்றார்.

காஞ்சியை நோக்கித் திரும்பி வரும் போது ஆங்காங்கே கிராமங்களில் சளுக்க வீரர்கள் செய்துள்ள அக்கிரமங்கள் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. ஊர் ஊராக வீடுகளிலும் குடிசைகளிலும் வைக்கோற் போர்களிலும் அறுவடைக்கு ஆயத்தமாயிருந்த வயல்களிலும் சளுக்கர்கள் தீ வைத்திருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே சாம்பல் மயமாயிருந்தது. பல்லவ நாடே ஒரு பெரிய பயங்கர ஸ்மசான பூமியாக மாறி விட்டதாகத் தோன்றியது. இன்னும் சில கிராமங்களில் வீடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. ஆங்காங்கு ஜனங்களின் அழுகைக் குரல் எழுந்தது. மாமல்லரையும் பரஞ்சோதியையும் கண்டதும் ஜனங்கள் உரத்த சப்தமிட்டுப் புலம்பத் தொடங்கினார்கள். சளுக்க வீரர்கள் செய்த பயங்கர அட்டூழியங்களைப் பற்றி ஆங்காங்கே சொன்னார்கள். சிற்பிகள் கால் கை வெட்டப்பட்டது பற்றியும், இளம் பெண்கள் சிறைப் பிடித்துப் போகப் பட்டது பற்றியும், ஆடு மாடுகள் வதைக்கப் பட்டது பற்றியும் ஜனங்கள் சொன்னதைக் கேட்டபோது கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் மாமல்லரின் மார்பு வெடித்து விடும் போலிருந்தது. நாக்கு உலர்ந்து மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. பரஞ்சோதியிடம் தமது கோபத்தையும் ஆத்திரத்தையும் வெளியிட்டு நாலு வார்த்தை பேசுவதற்குக் கூட மாமல்லரால் முடியாமல் போய் விட்டது.

சிற்பிகள் பலருக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கேட்ட போது மாமல்லரின் இருதய அந்தரங்கத்தில், நல்லவேளை! ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டைக்குள் இருக்கிறார்களே! என்ற எண்ணம் ஓரளவு ஆறுதலையளித்தது. எனினும் சிற்பங்கள் அழிக்கப்பட்டதைப் பற்றி அறிந்த போது

அமரர் கல்கி

மாமல்லபுரத்து அற்புதச் சிற்பங்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ என்ற ஐயம் உதித்து மிக்க வேதனையளித்தது. அதை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக மாமல்லரும் பரஞ்சோதியும் அதிவிரைவாக மாமல்லபுரம் சென்றார்கள். அங்கே சிற்பங்களுக்கு அதிகச் சேதம் ஒன்றுமில்லையென்று தெரிந்து கொண்டு காஞ்சிக்குப் பயணமானார்கள். மாமல்லபுரத்திலிருந்து காஞ்சிக்குப் போகும் வழியில் ஆயனரின் அரண்ய வீடு இருந்ததல்லவா? அந்த வீட்டையும் பார்க்க வேண்டும், அதிலிருந்த தெய்வீக நடனச் சிலைகளுக்கு ஒன்றும் சேதமில்லையென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மாமல்லர் விரும்பினார். ஆயனரின் வீட்டு வழியாகப் போவது காஞ்சிக்குக் குறுக்கு வழியாகவும் இருந்ததல்லவா?

ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்ததும் கதவு திறந்திருப்பதைப் பார்த்தார்கள். உடனேயே இருவருக்கும் 'திக்' என்றது. வீட்டின் முன் பக்கத் தோற்றமே மனக் கலக்கத்தை உண்டாக்கிற்று. ஏதோ ஒரு மகத்தான விபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற உள் உணர்ச்சியுடன் வீட்டுக்குள்ளே பிரவேசித்தார்கள்.

உடைந்தும் சிதைந்தும் அலங்கோலமாய்க் கிடந்த சிலைகளைப் பார்த்த போது இருவருக்கும் தங்களுடைய நெஞ்சு எலும்புகள் உடைவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுடைய காலடிச் சப்தத்தைக் கேட்டதும் படுத்திருந்த ஆயனர் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

காஞ்சியில் பத்திரமாக இருப்பதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த ஆயனரை இங்கே கண்டதினால் ஏற்பட்ட




கல்கி


கல்கி

கல்கி

கையிலிருந்தால் பெருமை;
படித்துப் பார்த்தால் அருமை!



பொன்விழா ஆண்டு

1992

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL
SUN	5 12 19 26	2 9 16 23	1 8 15 22 29	5 12 19 26
MON	6 13 20 27	3 10 17 24	2 9 16 23 30	6 13 20 27
TUE	7 14 21 28	4 11 18 25	3 10 17 24 31	7 14 21 28
WED	1 8 15 22 29	5 12 19 26	4 11 18 25	1 8 15 22 29
THU	2 9 16 23 30	6 13 20 27	5 12 19 26	2 9 16 23 30
FRI	3 10 17 24 31	7 14 21 28	6 13 20 27	3 10 17 24
SAT	4 11 18 25	1 8 15 22 29	7 14 21 28	4 11 18 25

	MAY	JUNE	JULY	AUGUST
SUN	31 3 10 17 24	7 14 21 28	5 12 19 26	30 2 9 16 23
MON	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	31 3 10 17 24
TUE	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25
WED	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
THU	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
FRI	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
SAT	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29

	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
MON	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
TUE	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29
WED	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30
THU	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31
FRI	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
SAT	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26

படம்: ரவி

கல்கி

குடும்பத்தோடு
படித்து மகிழும் பத்திரிகை



பொன்விழா ஆண்டு

1992

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL
SUN	5 12 19 26	2 9 16 23	1 8 15 22 29	5 12 19 26
MON	6 13 20 27	3 10 17 24	2 9 16 23 30	6 13 20 27
TUE	7 14 21 28	4 11 18 25	3 10 17 24 31	7 14 21 28
WED	1 8 15 22 29	5 12 19 26	4 11 18 25	1 8 15 22 29
THU	2 9 16 23 30	6 13 20 27	5 12 19 26	2 9 16 23 30
FRI	3 10 17 24 31	7 14 21 28	6 13 20 27	3 10 17 24
SAT	4 11 18 25	1 8 15 22 29	7 14 21 28	4 11 18 25

	MAY	JUNE	JULY	AUGUST
SUN	31 3 10 17 24	7 14 21 28	5 12 19 26	30 2 9 16 23
MON	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	31 3 10 17 24
TUE	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25
WED	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
THU	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
FRI	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
SAT	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29

	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
MON	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
TUE	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29
WED	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30
THU	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31
FRI	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
SAT	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26

படம்: தம்பையா

கல்கி

ஒவ்வொரு பக்கமும் ரசனை;
ஒவ்வொரு வரியிலும் எளிமை!

பொன்விழா ஆண்டு

1992

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL
SUN	5 12 19 26	2 9 16 23	1 8 15 22 29	5 12 19 26
MON	6 13 20 27	3 10 17 24	2 9 16 23 30	6 13 20 27
TUE	7 14 21 28	4 11 18 25	3 10 17 24 31	7 14 21 28
WED	1 8 15 22 29	5 12 19 26	4 11 18 25	1 8 15 22 29
THU	2 9 16 23 30	6 13 20 27	5 12 19 26	2 9 16 23 30
FRI	3 10 17 24 31	7 14 21 28	6 13 20 27	3 10 17 24
SAT	4 11 18 25	1 8 15 22 29	7 14 21 28	4 11 18 25

	MAY	JUNE	JULY	AUGUST
SUN	31 3 10 17 24	7 14 21 28	5 12 19 26	30 2 9 16 23
MON	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	31 3 10 17 24
TUE	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25
WED	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
THU	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
FRI	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
SAT	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29

	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
MON	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
TUE	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29
WED	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30
THU	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31
FRI	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
SAT	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26

கல்கி

கதைகளில் இனிமை;
அரசியலில் நடுநிலை;
செய்திகளில் சமுதாயப் பார்வை!

பொன்விழா ஆண்டு

1992

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL
SUN	5 12 19 26	2 9 16 23	1 8 15 22 29	5 12 19 26
MON	6 13 20 27	3 10 17 24	2 9 16 23 30	6 13 20 27
TUE	7 14 21 28	4 11 18 25	3 10 17 24 31	7 14 21 28
WED	1 8 15 22 29	5 12 19 26	4 11 18 25	1 8 15 22 29
THU	2 9 16 23 30	6 13 20 27	5 12 19 26	2 9 16 23 30
FRI	3 10 17 24 31	7 14 21 28	6 13 20 27	3 10 17 24
SAT	4 11 18 25	1 8 15 22 29	7 14 21 28	4 11 18 25

	MAY	JUNE	JULY	AUGUST
SUN	31 3 10 17 24	7 14 21 28	5 12 19 26	30 2 9 16 23
MON	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	31 3 10 17 24
TUE	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25
WED	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
THU	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
FRI	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
SAT	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29


	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
MON	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
TUE	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29
WED	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30
THU	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31
FRI	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
SAT	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26

ஓவியம் : கோபுலு

கல்கி

50





வியப்பு ஒருபுறமிருக்க, பயங்கரத்தால் வெளிறிய அவருடைய முகமும் வெறி கொண்ட அவருடைய பார்வையும் அவர்களுக்கு விவரிக்க முடியாத பீதியை உண்டாக்கின. ''என் சிவகாமி எங்கே?'' என்று ஆயனச் சிற்பியார் கேட்டதும், மாமல்லருக்கு மலை பெயர்ந்து தலையில் விழுந்து விட்டது போலிருந்தது.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

இரத்தம் கசிந்தது

மாமல்லர் 'கீழே விழுந்து விடுவாரே என்ற பயத்தினால் பரஞ்சோதி அவருடைய கரத்தைப் பிடித்துக் கொண்டார். இருவரும் பேச நாவெழாமல் ஆயனரைப் பார்த்தபடியே நின்றார்கள்.

மீண்டும் ஆயனர், ''பல்லவ குமாரா! சிவகாமி எங்கே? என் செல்வக் கண்மணி எங்கே? ஆயனச் சிற்பியின் அருமைக் குமாரி எங்கே? மகேந்திர பல்லவரின் கவிகார புத்திரி எங்கே? பரத கண்டத்திலேயே இணையற்ற நடன கலாராணி எங்கே?'' என்று வெறிகொண்ட குரலில் கேட்டுக் கொண்டே போனார்.

மாமல்லருடைய உள்ளமானது பெரும் புயல் அடிக்கும் போது கடல் கொந்தளிப்பது போல் கொந்தளித்தது. ஆயினும்





❑ மார்கரெட் தாட்சர் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த போது, லண்டனில் இந்திய ஹைகமிஷனர் அலுவலகத்தில் இந்திரா காந்தியின் சிலையைத் திறந்து வைக்க வந்திருந்தார். அப்போதைய ஹை கமிஷனர் ரசகோத்ரா "இந்திராவின் அமைச்சரவையில் அவர் ஒருவர்தான் ஆண் மகன் என்று சொல்வதுண்டு" என்று கூறி, அதைப் பிரதமர் எப்படி ரசிக்கிறார் எனக் காணத் திரும்பினார். ஆனால் தாட்சர் சீரியஸாக, "அப்படியானால் ஒரு ஆண்தான் தைரியசாலியாக, உறுதியானவராக இருக்க முடியும்; ஒரு பெண் அப்படி இருப்பது அதிசயம் என்கிறீர்களா?" என்றார்.

எதிர்பாராத இந்தப் பதிலைக் கேட்டு இந்தியப் பாணியில் 'ஜோக்'கடித்த ஹை கமிஷனர் ஒரு கணம் ஆடிப் போய் விட்டார்.

- அ. ஷண்முகசுந்தரம்

சிவகாமிக்கு என்ன நேர்ந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலினால் பல்லைக் கடித்து மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, பசையற்ற வறண்ட குரலில், "ஐயா! தயவுசெய்து மனத்தை நிதானப் படுத்திக் கொள்ளுங்கள். சிவகாமி எங்கே என்று நானல்லவா தங்களைக் கேட்க வேண்டும்? சிவகாமிக்கு என்ன நேர்ந்தது? சொல்லுங்கள்," என்று கேட்டார்.

ஆயனருடைய வெறி அடங்கியது. அவருடைய உணர்ச்சி வேறு உருவங் கொண்டது. கண்ணில் நீர் பெருகிற்று. "ஆமாம், பிரபு! ஆமாம்! என்னைத்தான் தாங்கள் கேட்க வேண்டும். சிவகாமியை இந்தப் பாவியிடந்தான் தாங்கள் ஒப்புவித்திருந்தீர்கள். நான்தான் என் கண்மணியைப் பறி கொடுத்து விட்டேன். ஐயோ! என் மகளே! பெற்ற தகப்பனே உனக்குச் சத்துருவானேனே!" என்று கதறியவண்ணம் தலையைக் குப்புற வைத்துக் கொண்டு விம்மினார்.

ஆயனரின் ஒவ்வொரு வார்த்தையும் நரசிம்மவர்மரின் இருதயத்தை வாளால் அறுப்பது போல் இருந்தது. சிவகாமி இறந்து போய் விட்டாள் என்றே அவர் தீர்மானித்துக் கொண்டார்.

பொங்கி வந்த துயரத்துக்கும், ஆத்திரத்துக்கும் இடையே சிவகாமி எப்படி இறந்தாள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. ஒருவேளை சளுக்கர்களால் அவளுடைய மரணம் நேர்ந்திருக்குமென்ற எண்ணம் மின்னலைப் போல் உதயமாகி அவருடைய உடம்பையும் உள்ளத்தையும் பிளந்தது.

மீண்டும் ஒரு பெரு முயற்சி செய்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். அதிகாரத் தொனியுடைய கடினமான குரலில், "ஆயனரே! மறுமொழி சொல்லி விட்டு அப்புறம் அழும். சிவகாமி எப்படி இறந்தாள்? எப்போது இறந்தாள்?" என்று கர்ஜித்தார்.

"ஆஹா! என் கண்மணி இறந்து விட்டாளா?" என்று அலறிக் கொண்டு, படுத்திருந்த ஆயனர் எழுந்து நிற்க முயன்றார். அவர் கால் தடுமாறியது. பயங்கரமாக வீறிட்டுக் கொண்டு தொப்பென்று தரையில் விழுந்தார்.

"இறந்து விட்டாளா?" என்ற கேள்வியினால், சிவகாமி இறந்து விடவில்லை என்ற உண்மை மாமல்லரின் மனத்தில் பட்டது. ஆயனர் அப்படி நிற்க முயன்று விழுந்த போது, அவருடைய காலில் ஊனம் என்னும் விவரமும் மாமல்லருக்குத் தெரிந்தது. இதனால் அவர் கல்லாகச் செய்து கொண்டிருந்த மனம் கனிந்தது. "ஐயா! தங்களுக்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஆயனரின் அருகில் வந்து உட்கார்ந்தார்.

"ஐயா! தங்கள் கால் முறிந்திருக்கிறதே? இது எப்படி நேர்ந்தது?" என்று இரக்கத்துடன் வினவினார்.

"மலையிலிருந்து விழுந்து கால் முறிந்தது. என் கால் முறிந்தால் முறியட்டும். சிவகாமி இறந்து விட்டதாகச் சொன்னீர்களே! அது உண்மைதானா?" என்று ஆயனர் கேட்டார். "ஐயா! சிவகாமியைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. போர்க்களத்திலிருந்து நேரே வருகிறேன். நீங்களும் சிவகாமியும் காஞ்சியில் சௌக்கியமாயிருப்பதாக எண்ணியிருந்தேன். நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? சிவகாமியை எப்போது பிரிந்தீர்கள்? அவள் இறந்து போய் விடவில்லையல்லவா?" என்று மிகவும் அமைதியான குரலில் பேசினார் மாமல்லர்.

இதற்கு மாறாக, அலறும் குரலில், "ஐயோ! சிவகாமி இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!" என்றார் ஆயனர்.

"ஐயா! சிவகாமிக்கு என்னதான் நேர்ந்தது?"

"ஐயோ! எப்படி அதைச் சொல்வேன்? எல்லாம் இந்தப் பாவியினால் வந்த வினைதான்! பிரபு! சிவகாமியைச் சளுக்கர்கள் சிறைப்பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்!"

"என்ன? என்ன?" என்று மாமல்லர் கேட்ட தொனியில் உலகத்திலேயே கண்டும் கேட்டுமிராத விபரீதம் நடந்து விட்ட

தென்று அவர் எண்ணியது புலனாயிற்று.

''ஆம், பிரபு! சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். தாங்கள் சளுக்கர்களைத் தொடர்ந்து போனது பற்றிக் கேள்விப்பட்ட போது, சிவகாமியை விடுவித்துக் கொண்டு வருவீர்களென்று நம்பியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள்! ஆனால் உங்கள் பேரில் என்ன தப்பு? எல்லாம் இந்த பாவியினால் வந்ததுதான். சித்திரம், சிற்பம் என்று பைத்தியம் பிடித்து அலைந்தேன். என் உயிர்ச் சித்திரத்தை, ஜீவ சிற்பத்தைப் பறிகொடுத்தேன்!.... ஐயோ! என் மகளுக்கு நானே யமன் ஆனேனே!''

இவ்வாறெல்லாம் ஆயனர் புலம்பியது மாமல்லரின் காதில் ஏறவே இல்லை. சிவகாமியைச் சளுக்கர் சிறைப்பிடித்துச் சென்றார்கள் என்னும் செய்தி ஒன்றுதான் அவர் மனத்தில் பதிந்திருந்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, மிக மெலிந்த குரலில், ''சிற்பியாரே! இதெல்லாம் எப்படி நடந்தது? காஞ்சியிலிருந்து நீங்கள் ஏன் கிளம்பினீர்கள்? சிவகாமி எப்படிச் சிறைப்பட்டாள்? உங்கள் கால் எப்படி ஒடிந்தது? அடியிலிருந்து எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!'' என்றார்.

ஆயனரும் அவ்விதமே விவரமாகச் சொன்னார். தட்டுத் தடுமாறி இடையிடையே விம்மிக் கொண்டு சொன்னார்.

மாமல்லர் கேட்டுக் கொண்டிருந்தார். அச் சமயம் உறையிலிருந்து எடுத்த கத்தியை அவர் கையில் வைத்துக் கொண்டிருந்தார். கத்தியின் கூரிய விளிம்பை அவர் இடக்கை விரல்கள் தடவிக் கொண்டிருந்தன. அவ்வாறு தடவிய போது விரல்களில் சில கீறல்கள் ஏற்பட்டன. அந்தக் கீறல்களில் கசிந்த இரத்தம் சொட்டுச் சொட்டாகத் தரையில் சொட்டிக் குட்டையாகத் தேங்கியது.

(தொடரும்)

அருள்வாக்கு



எத்தனை ஏழைக் குடும்பமானாலும் சோற்றுச் செலவை விட ஜாஸ்தியாகக் காபி அல்லவா இழுக்கிறது? அகத்தில் சாப்பிடுவதோடு, கண்ணில் படுகிற ஹோட்டலில் புகுந்தும் மூன்று வேளை நாலு வேளை என்று குடிக்கப் பண்ணுகிறதே! எழுந்தவுடனேயே, பல் தேய்க்காமலே கூட பெட்-காபி இல்லாவிட்டால் அந்தக் காபிப் பொடி வண்டலாலேயே பல் தேய்த்து விட்டு அதை உள்ளேயும் தள்ளுவது என்பதாக, 'இதில்லாமல் ஜீவனில்லை' என்கிற அளவுக்கு இதற்கு நம் புத்திக்கு மேல் ஆதிக்யம் கொடுத்திருப்பது தப்புத்தானே? இந்த ஆதிக்யத்தினால்தான் இக்கால ஸந்நியாஸிகளுக்குத் தண்ட, கமண்டலம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; ஆனால் 'ஸ்டவ்' இருந்தாக வேண்டுமென்று ஆகியிருப்பது? நெருப்புக்கிட்டேயே போகப்படாது, சமைக்கவே கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கும் ஸந்நியாசிகள் கூட, பிராம்ம முஹூர்த்தத்தில் எழுந்து தியானம் செய்வதானால் அதற்கு முந்தி காபி இல்லாமல் முடியவில்லை என்று தாங்களே 'ஸ்டவ்'வில் போட்டுக் குடிக்கிறதாக அல்லவா பார்க்கிறோம்? இதுதான் இன்றைக்கு நடக்கிற ஸ்வயம்பாக நியமம்! இப்படி ஒரு வழக்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பது தப்பு என்பதால்தான் நான் காபியை பலமாகவே கண்டிப்பது. காபியை நிறுத்தி விட்டு அந்தப் பாலை ஏழைக் குழந்தைகளுக்கோ, பலஹீனருக்கோ விநியோகம் பண்ணுவதென்று வைத்துக் கொண்டால் பெரிய புண்யமாகும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உசிர்

சூழல் எரிச்சலூட்டியது. ஒட்டுச் சாய்ப்பான வீடு. மதிய வெயில். வெக்கையான இறுக்கம். மூச்சு முட்டுகிறது. ச்சே!

நாளைக்கு 'அறிவொளி' கூட்டம். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மீட்டிங். ஹாலில் - அறிவொளி முதன்மைப் பயிற்சியாளர் முகாம். அந்த முகாமில் நான் 'பெண் கல்வி' குறித்துச் சிறப்புரையாற்ற வேண்டும்.

நாலு புஸ்தகங்களை மேய்ந்து, சில வாக்கியங்களைக் கடைவாயில் ஒதுக்கி, அசை போடாமலேயே மைக்கில் வாந்தியெடுப்பது எனக்கு எப்பவுமே பிடிக்காது. மனசின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். சொந்த அனுபவங்களாக இருக்க வேண்டும். நமது கருத்துகளுக்கு நடப்பு வாழ்க்கையிலேயே நிரூபணங்கள் காட்ட வேண்டும். அதுதான் என் பாணி.

சம்பவங்களைத் தேர்வு செய்து குறிக்கணும்; வரிசைப்படுத்தணும்; அதற்கு நிறைய யோசிக்கணும்; நூல் பிசகாமல் யோசிக்கணும்.

முடியவில்லை. சூழல் விட மறுக்கிறது. வேர்வையும் கசகசப்புமாய், வெக்கையும் மூச்சுத் திணறலுமாய்... மனசு தப்பித்து ஓட விரும்புகிறது.

வீட்டு முன்னால் குடிநீர்த் தேக்கத் தொட்டி. தண்ணீர் திறந்து விட்டார்கள். ஊரே சுதாரித்துக் கொண்ட மாதிரி பேயிரைச்சல். பானைகளின் மோதல் கூச்சல். ஓடிப் பாய்கிற பெண்கள். 'நா முந்தி, நீ முந்தி' என்று போட்டி போடுகிற காட்டுக் கத்தல். சந்தைக் காடாகக் கலவரப்படுகிற வீட்டு முற்றம். என்னை உருட்டிப் பந்தாடுகிற 'கசமுசா' கூப்பாடு.

'ச்சே... இந்த வீட்லே மனுசன் நிம்மதியா யோசிக்கவே முடியாது. நரகச் சூழல்'.

சலித்துப் போய் பேனாவை நழுவ விட்டேன். எரிச்சல் மண்டுகிற மனசோடு சிகரெட்டை பற்றவைத்தேன். கடுகடுப்பில் இடுங்கிக் கொண்ட கண்கள். முற்றத்தில்...

ஏதோ ஒரு பெண். இடுப்பில் ஒரு பானை. வலது கையில் தொங்கும் ஓர் அலுமினியக் குடம். நீர்ச் சுமை தாங்காமல், விநோத வளைவாக நெளிந்த நிலையில் 'தக், தக்'கென்று அடியெடுத்து வைக்கும் பாதங்கள். சாயம் போன சந்தனக் கலர்ச் சேலை. நீரில் நனைந்து முழங்காலோடு ஒட்டிக் கிடக்கிறது.

யாரிவள்? அட, நம்ம பார்வதி!

நல்ல சிவப்பு. கனிந்த பழம் காய்கிறபோது கறுத்துப் போவதில்லையா? அப்படித்தான், பார்வதியும்! அருள் கெட்டுக் கறுத்துப் போனாள். முகத்தில் எந்நேரமும் ஒரு பயபீதி, நிரந்தர இருட்டாக விழுந்து விட்டது. கண்களில் எப்பவும் ஒரு மருட்சி.

நேற்றுப் பிள்ளை. அதற்குள், வாழ்க்கையை வாழாமலேயே வாழ்ந்து கழித்து விட்டாள்.

பக்கத்து ஊரில்தான் வாழ்க்கைப் பட்டாள். கோயிலில் வைத்துத்தான் கல்யாணம். நான் கூடப் போயிருந்தேன். அவள் நுழைந்த வீடும் ரொம்ப வறுமைப்பட்டது.

அந்த மாப்பிள்ளைப் பயலைப் பார்த்த போது, எனக்குப் பிடிக்கவில்லை. ஒன்றுக் கும் அற்ற பயல் என்று நான் நினைத்தது... பொய்யாகிப் போய் விடவில்லை.

குடிகாரன், உப்புக் கல்லுக்குப் பெறாத சோம்பேறி.

பாவம் பார்வதி. மாடாக உழைத்து உடம்பு புண்ணானாள். அவனுக்கு வாய்க்கும் கொட்ட வேண்டும். குடிக்கக் காசும் தர வேண்டும். சுடர் சுமக்கும் மெழுகுவர்த்தியாய்... அவள்.

தினசரி அவனுக்கு அடிதான். மிதிதான். சண்டைதான். சச்சரவுதான். கலைந்த தலையோடும், கன்றிப் போன முகத்தோடும் அடிக்கொரு தடவை ஊருக்கு வந்து விடுவாள், கோபித்துக் கொண்டு.

பத்து நாள் கழித்து அந்தப் பயல் வருவான். கெஞ்சிக் கூத்தாடி அழைத்துக் கொண்டு போவான். மறுபடியும் அதே கதைதான். அடி, குடி, சண்டை, சச்சரவுகள். நரகமாய் அவளை அழுத்துகிற தாம்பத்யம்.

பாவம் பார்வதி! அரண்டு அரண்டு ஊமையாகிப் போனாள். அஞ்சு வருஷம் இப்படியே கழிந்து விட்டது. கள்ளி முளைத்த காடாய்ச் சீரழிந்து போய் விட்டது, வாழ்க்கை.

வாய் செத்துப் போன பெண், துடியாய் நாலு வார்த்தை கூடப் பேச மாட்டாள். பயந்து பயந்து... அந்தப் பயத்திற்குள்ளேயே குரல் புதைந்து போய் விட்ட மாதிரி, எந் நேரமும் மௌனம்தான். இறுக்கம்தான். விரக்தியின் விளிம்பான உறைவு.

அந்தப் பயல் கூட இவளை வாய்க்கு வாய் ''ஊமைக் கழுதை, ஊமைக் கழுதை'' என்றுதான் வைவானாம்.


கண்ணீரும் கம்பலையுமாய், கலைந்து காய்ந்த தலையுமாய் அவள் ஊருக்குள் வரும்போதெல்லாம்... ஏனோ என் மனத்தில் ஒரு நடுக்கம். ஒரு பகீர் உணர்வு.

தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா. அந்த வருஷம்தான் ஆசிரியராக நுழைந்திருந்தேன். 'கலை விழா' முழுவதும் என் பொறுப்பு. கலை நிகழ்ச்சிகள் நிறைய. ஊரே திரண்டு நின்றது. 'ஜே ஜே' என்று கூட்டம்.

கடைசி நிகழ்ச்சியாகப் பார்வதி வந்தாள். ஐந்தாம் வகுப்பு மாணவி. ஒரு சினிமாப் பாட்டுதான். இயற்கை வர்ணனைப் பாட்டு. மேடையில் மாறி மாறிக் கண் சிமிட்டுகிற கலர் விளக்குகள். வண்ணத் திரைகள். வர்ண ஜால உடையில் ஜெகஜோதியாக வந்து ஆடிக் கொண்டே பாடுகிற சிறுமி பார்வதி.

பாடுகிற போது அசைகிற சின்ன உதடுகளும், சின்னச் சின்ன நடன அசைவுகளும், பறவைகளைப் போன்ற பாவனைகளும்... சூழலையே மறக்கடித்து, ஒரு மாய உலகத்தையே சிருஷ்டித்து, கனவு நிலையில் சகலரையும் மூழ்கடித்து...

ஊர் ஜனம் அசந்து போயிற்று. ரொம்ப நாளைக்கு இவளைப் பற்றியே ஊரில் பேசிப் பேசி வாயாறினார்கள். அப்படி பாடி, ஆடி மொத்த ஜனத்தையே பிரமிக்கச் செய்த அந்தச் சிறுமி பார்வதி... படிப்பிலும் கெட்டிக்காரியாகவே இருந்தாள். நாலாவது ரேங்க். படிப்பில் பார்வதியுடன்



போட்டி போட்டு, சரிமல்லுக்கு நிற்பாள், ரேணுகா. ஒரு இம்மியளவாவது தோற்ப வள் ரேணுகாதான்.

போன மாதம். 'அறிவொளி'யில் கருத்தாளர் பயிற்சி முகாம். கலெக்டர் ஆபீஸின் மீட்டிங் ஹாலில் நடந்தது. நான் அழைக்கப்பட்டிருந்தேன். உதவித் தாசில் தார் என்று ஒரு பெண்ணை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

'பரிச்சயமான முகமாக இருக்கிறதே' என்று மனசுக்குள் ஒரு குரல். ஞாபக அல மாரியை விடாமல் சுரண்டினேன். ஒன்றும் தட்டுப்படவில்லை. அந்தக் கூட்டப் பர பரப்பில் ஒன்றும் கேட்கவும் முடிய வில்லை.

அந்தப் பெண் என்னை ஒரு மரியாதை யோடு பார்த்தாள். உள்ளுக்குள் குழப்பம்.

லஞ்ச் டயம். நான் வெளியே வராந்தா வில் நின்று கொண்டிருந்தேன். என்னை நோக்கி அந்தப் பெண்.

''வணக்கம் சார்.''

மரியாதையான புன்னகையோடு அவள். நான் திகைத்துப் போய் சும்மா விஷ் பண்ணி வைத்தேன்.

''என்னைத் தெரியலியா சார்?''

அவளது மெல்லிசான சிரிப்பு. மரி யாதையான இடைவெளியோடு நின்றாள். அசட்டுத்தனமாய் நெளிந்தேன்.

''தெரியவும் செய்யுது. தெரியாமலும் இருக்கு. ஸாரி, தெளிவாத் தெரியலே.''

''நாந்தான் சார், ரேணுகா. அஞ்சாங் கிளாஸ்லேயும், ஏழாங் கிளாஸ்லேயும் உங்ககிட்டே படிச்சேன், சார்.''

குப்பென்று பீறிட்ட நினைவுகள். பல வருஷங்களுக்கு முன்பாக என்னை உருட்டித் தள்ளுகிற நினைவலைகள்.

எனக்குள் இனம்புரியாத பரவசம். விம்முகிற பூரிப்பு. பெருமிதம்.

என்னிடம் படித்த ஒரு சிறுமி, இன் றைக்கு கௌரவமிக்க அதிகாரி. உயர்ரகப் பணி. இன்றும் என்னிடம் மரியாதை காட்டுகிற கண்ணியம். நான் சிலிர்த்துப் போனேன்.

என் ஆசிரியத் தொழில் மீது, இன்று தான் புனிதமான மரியாதையே ஏற்படு கிறது.

இது, வெறும் சம்பளத் தொழிலல்ல. வயிற்றுப் பாட்டு மாரடிப்பல்ல. சமூக சிருஷ்டி. ஞான சிருஷ்டி. களிமண்ணில் அழகுச் சிலை படைக்கிற பிரம்மப் பணி.

''ரேணுகாவா...? அடையாளமே தெரி யலியே!''

என்னுள் பரவசம். குழப்பம். உள்ளும் புறமுமாய்த் தடுமாறினேன். இனிமையான தவிப்பு.

யூனிஃபார்ம் டிரஸில் சிறுமி ரேணு காவை நினைவுபடுத்திப் பார்த்தேன். ம்ஹூம், முடியவில்லை. கம்பீரமான உதவித் தாசில்தார் நினைவின் வழிகளைப் பிரம்மாண்டமாய் மறித்துக் கொண்டாள்.

பார்வதியை நினைத்தால்... சட்டென்று மனம் பூராவும் நிரம்பிக் கொள்கிற சோகம். அவலமான பரிதாபம். அவளும் இப்படி ஜொலித்திருக்க வேண்டியவளல்லவா...! இதே மாதிரி, இயல்பாக வளர்ந்து, கனிந் திருக்க வேண்டியவளல்லவா...

அடடா... பூப் பருவத்திலேயே உதிர்ந்து, ஒரு நார்ப் பயலிடம் சிக்கி, ஏதோ ஒரு பிணத்தின் மாலையாக விழுந்து, சுடுகாட்டில் வீசியெறியப்பட்டு, கால்களில் மிதிபட்டு, காய்ந்து, உலர்ந்து, பொடிப் பொடியாகி...

அப்போது நான் ஏழாங் கிளாஸுக்குப் பொறுப்பு. வெள்ளியன்றே ஹோம்வொர்க் கொடுத்திருந்தேன்.

திங்கட்கிழமை நான் வகுப்பில் நுழைந் ததும் 'ஹோம்வொர்க்'கைக் கேட்டேன். ஏறக்குறைய எல்லோரும் முடித்திருந்தனர். ரேணுகாவின் நோட்டில் தப்புத் தப்பாய் இருந்தது. பார்வதியின் நோட். கேள்வி களும், பதில்களும் குண்டு குண்டாக - தெளிவாக - எழுதியிருந்தாள். அடித்தல் திருத்தலே கிடையாது. ஆனால், படம் இல்லை. வரைவதற்கான முயற்சியே தெரி யவில்லை.

என்ன இது? அலட்சியமா?

இதே தப்பை வேறு பிள்ளைகள் செய் திருந்தால்... பரவாயில்லை. இவள் செய்ய லாமா? படிப்பில் கெட்டிக்காரியான பார் வதியிடம் இந்த அலட்சியம் இருக்க லாமா? இதை அனுமதிக்கலாமா?

எனக்குள் கோபம் குமுறி வந்தது.

''ஏன், படம் வரையலை?''

மௌனம். பதிலற்ற மௌனம்.

''மறந்து போய்க் கார் சாவியால ப்ரேரானைத் திறக்க முயற்சி செய்துட்டேன்!''
''சாவி மாட்டிக்கிட்டுதா?''
''ப்ரோ ஸ்டார்ட் ஆயிட்டுது!''
- பம்மல் கிருஷ்ணன்



ஒருவர் : ஆபீஸ் வேலைக்கு ஆள் தேவைன்னு விளம்பரம் போடலாம்தான். அதுக்காக இப்படியா...?

இன்னொருவர் : எப்படி...?

ஒருவர் : தூக்கத்தில் குறட்டை விடும் பழக்கம் இல்லாதவர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்னு போட்டிருக்கே!

- டி. அருள்ராஜ்



பொருத்தமற்ற இறுக்கம். டாண் டாண் என்று பேசுகிறவளா, இப்படி?

இந்த இறுக்கம், என்னை மேலும் அவ மதிப்பது போல உணர்ந்தேன். உள்ளுக்குள் உஷ்ணம்.

''நான் கேக்குறேன்லே? ஏன் படம் போடலே?''

அதே மௌனம்.

''கையை நீட்டு!'' கடுமையாகிப் போன என் குரல், எனக்கே அந்நியமாக - வேற்றுக் குரலாக-

மேஜையிலிருந்த குச்சி என் கைக்கு வந்தது. சுளீர், சுளீர், சுளீர். மூன்று மின்னல். மூன்று இடிகளாக அந்தப் பூவின் உள்ளங்கையில்.

எல்லாப் பிள்ளைகளும் அவளைப் பரிதாபமாய் பார்க்க, அவள் கண்களில் ஈரத் துளி. சின்ன உதடு நடுங்கி விம்மியது.

''போ... அங்கே மண்டி போடு.''

வெயிலில் தகித்த மணலை என் கை காட்டியது.

அவள் மண்டி போட்டாள். வெயிலில் ஒற்றையாய் - வெட்ட வெளியில்... கண்ணீர் சிந்தும் ஓவியமாக, சிறுமி பார்வதி.

வெளியில் போவோர், வருவோர் முகங்களிலெல்லாம் வெளிப்படையான ஏளனத் தொனி...

எல்லாவற்றையும் ஒரு சுற்று நடுக்கத்துடன் பார்த்து விட்டு, வெட்டுண்ட தலையாகத் தொங்கப் போட்டவள்தான், அப்புறம் நிமிரவேயில்லை.

அவமானத்தில் புழுங்கி, வெந்து, உள்ளுக்குள்ளேயே செத்துப் போனாளோ... பள்ளி வட்டத்தைத் தாண்டிய அந்நியர்களின் பரிகாசத்துக்குரிய ஜந்துவாகி விட்டோமே என்று நொந்து போனாளோ...

எனக்குள் ஒரு முள். உறுத்தல். கொஞ்சம் அத்துமீறி விட்டேனோ... குற்றம் செய்து விட்டேனோ...

நான் பயந்தது சரியாகி விட்டது.

மறுநாளிலிருந்து பார்வதி பள்ளிக்கு வரவேயில்லை. பதைத்துப் போய் நானே வீடு தேடி விசாரித்தேன். தாய் அப்புத் தாய்தான் எதிர்கொண்டாள்.

''நானும் எம்புட்டோ சொல்லிப் பார்த்துட்டேன்யா. ஒரேயடியா பிடிவாதமாச் சாதிக்கிறா. என்ன காரணம்னு வாயைத் திறந்தும் சொல்ல மாட்டேங்கிறா. 'போகலே, போகலே'ன்னு ஒரே பதில் தான். நா என்ன செய்ய முடியும்யா?''

ரேணுகா மாதிரி பூத்து - காய்த்து - கனிந்து - இயல்பாக வளர்ந்து பரிணாமம் பெற்றிருக்க வேண்டிய பார்வதி. படிப்பைப் பாதியில் முடித்துக் கொண்டாள்.

குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு, நரக வாழ்க்கையில் வெந்து, சுபாவம் மாறி, ஊமைக் கறுப்பாகி...

இந்தச் சீரழிவில் என் பங்கும் உண்டல்லவா!

ஒரு பெண்ணின் கல்விப் பாதையை - அறிந்தோ, அறியாமலோ - பிடுங்கிக் கொண்ட நான் - வாழ்க்கையில் அவள் சீரழிவதற்குக் காரணமான நான் - 'பெண் கல்வி' பற்றிப் பேசலாமா? பேசுவதற்கு யோக்யதை உண்டா? பேசுவதற்கு இயலுமா? பேசினால்... மனச்சாட்சி என்னை மதிக்குமா? காறித் துப்பாதா? குற்ற உணர்வில் மனம் பதறியது.

போன வாரம்தான், ஊர்ப் பஞ்சாயத்தில் அவள் திருமண உறவு ரத்தாகி, வாழாவெட்டியானாள்.

சரி... நாளை நான் கூட்டத்திற்குப் போகணுமா? போகிற தகுதி இருக்கிறதா? இருக்கிறது!

பெண் கல்வியை ஊக்குவித்து நான் பேசுவதே கூட... என் தவறுக்கான பரிகாரம்தானே!

இன்று நான் பேசப் போவதே.. ரேணுகாவையும் - பார்வதியையும் பற்றித்தான். ஆனால், ஒரு விஷயம்.

பார்வதி போன்ற பூக்கள் உதிர்வுக்கு அறிந்தோ, அறியாமலோ - காரணமாக இருந்து விட்ட நிஜத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதுதான், என் உரையின் முன்னுரை.

அதில் உறுதியாக இருந்தேன்.

9

அவனுடைய கை மிருதுவாக லேசான கதகதப்புடன் இருந்தது. மிக நெருக்கமான உணர்வை ஏற்படுத்திற்று. இருவருடைய எண்ணங்களும் சங்கமித்தது போல. அவனைப் பார்க்கும் போதும் அவன் பேச்சைக் கேட்கும்போதும் அவளுள் பிரவாகமாக எழுவது வெறும் கருணை உணர்வு இல்லை என்று அவள் உணர்ந்தாள். இது சினேகிதம். ஆத்மார்த்தமான சினேகிதம். இந்தியாவுக்கு வந்த பிறகு முதல் முறையாக ஏற்பட்டிருப்பது. இப்படி இவன் கையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது, இவனது 'ஞானக்கண்' பார்வையைக் கண்டு பிரமிக்கும் போது, இவன் ஆதியும் அந்தமுமில்லாத காலத்தின் பிரதிநிதி என்று அவளுக்கு விசித்திரமாகத் தோன்றிற்று. நேற்று, இன்று, நாளை என்ற வித்தியாசம் தெரியாத உலகத்தில் இருப்பவனுக்கு, அந்தமில்லை. அந்தகன் என்று இவனைச் சொல்வது எத்தனை பெரிய பொய்!

வெகு நேர மௌனத்திற்குப் பிறகு ஞாபகம் வந்தவனாய், ''ரொம்பக் கஷ்டப்பட்டேன்'' என்றான் புன்னகையுடன். ''அதாவது மத்தவங்களுக்கு எப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கும்னு புரியாததாலே. அவங்க பேசற பேச்சிலேந்துதான் நான் உள் அர்த்தங்களைப் புரிஞ்சுக்க முடியும். த்வனியிலேந்து துக்கமா, சந்தோஷமா, கோபமான்னு இந்தக் காதை மட்டும் வெச்சு கிரகிக்கணும். காது கூர்மையாகிறதுக்கு ரொம்ப நாளாச்சு!''

இவன் பேசுவதெல்லாம் அவளுள் ஏற்படுத்திய நெகிழ்ச்சியை மறைக்க, அவள் விளையாட்டாக அவனுடைய இரண்டு காதுகளையும் தொட்டு அசைத்தாள்.

''அப்ப உனக்கு இருக்கறது ஞானக் கண் இல்லே. ஞானக் காது'' என்று அவள் சிரித்த போது, அவனும் கூடச் சிரித்தான்.

''என்ன கஷ்டப்பட்டே சொல்லு'' என்றாள், அவள் அவன் கையைப் பற்றியபடி.

அவன் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலும் மெல்லிய புன்னகையுடன், ''எங்க அம்மாவும் அப்பாவும் சட்டபூர்வமாய்ப் பிரிஞ்சவங்க'' என்றான்.

''கேள்விப்பட்டிருக்கேன்'' என்றாள் அவள் மெள்ள.

''அவங்க பிரிஞ்சதுக்கு நான்தான் காரணம்னு எனக்கு ரொம்ப நாள் கழிச்சுத்தான் புரிஞ்சுது. இப்பவும் அம்மா அந்தக் காரணத்தை ஒப்புக்க மாட்டாங்க. அப்பாவுக்கு வேற ஒரு பெண்ணோடு உறவு ஏற்பட்டதனாலேதான் பிரிஞ்சோம்பாங்க. ஆனா உண்மையில நான்தான் காரணம்னு எனக்குத் தெரியும். அது தெரியறதுக்கு முந்தி எனக்கு அப்பா மேல கோபம் வரும், அம்மாவுக்கு அப்பாவோட சினேகிதமாப் பேசத் தெரியல்லேன்னு கோபம் வரும்.''

''நீதான் காரணம்னு எப்படிச் சொல்றே?''

''தங்கள் குழந்தை நார்மல் இல்லேங்கற எண்ணம் ரெண்டு பேருக்குமே ரொம்பப்



வாஸந்தி

காதலெனும் சோலையில்

பெரிய மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கும்னு எனக்குத் தெரியுது. பிறந்ததிலேர்ந்து நான் இப்படியே இருக்கறதனாலே எனக்கு இதுதான் நார்மல். அதனாலேதான் அவங்க ஏன் சண்டை போடறாங்கன்னு புரியல்லே. என்னாலே ஏற்பட்ட ஏமாற்றத்தினாலே, ரெண்டு பேரும் ஒருத்தர் மேல மற்றொருத்தர் தப்புச் சொன்னாங்க. காரணங்களைத் தேடிப் பிடிச்சுச் சண்டை போட்டாங்க. அப்பல்லாம் நா 'ஒ'ன்னு கத்துவேன். சாப்பிடாம அழுவேன். எனக்கு அஞ்சு வயசுதான் அப்ப. கடைசியிலே அம்மா விவாகரத்து வாங்கிக்கிட்டாங்கன்னு எனக்கு மெள்ளத்தான் தெரிஞ்சுது. 'தனி வீட்டுக்குப் போறோம்'னு இந்த வீட்டுக்குக் கூட்டிட்டு வந்ததிலேர்ந்து அம்மா நிம்மதியா இருக்கற மாதிரி இருக்கு. அப்பா வேற ஒரு பொம்பளை சினேகிதத்தை நாடிப் போனதும் தன்னுடைய ஏமாற்றத்தை மறக்கத்தான்னு எனக்குப் பிறகு புரிஞ்சுது.''

மீராவுக்குக் கண்ணில் நீர் நிறைந்திருந்தது. அவன் ஒரு மூன்றாம் மனிதனைப் போல எட்ட நின்று தன்னையே பார்ப்பது நெகிழ்ச்சி ஏற்படுத்தியது.

ஹரி திடீர் என்று சிரித்தான். ''எனக்குக் கண் இல்லேங்கறது எனக்குப் பெரிய குறையா இல்லேன்னாலும், நா மத்தவங்களுக்குப் பெரிய நியூசென்ஸ் என்கிறதும் எனக்கு மெள்ளத்தான் புரிஞ்சுது. ஆனா அம்மா ஒரு க்ரேட் லேடி. எனக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் வராம பார்த்துக்கிட்டாங்க. நீ எனக்குச் சுமையில்லே. இப்பத்தான் நா சந்தோஷமா இருக்கேன்னு திருப்பித் திருப்பிச் சொல்றது மட்டுமில்லே, என் வேலையை நானே கவனிச்சுக்கும்படி செஞ்சது அவங்கதான். அவங்க இல்லேன்னாலும் இப்ப என்னாலே சமாளிக்க முடியும்.''



ஹரியின் முகத்தில் ஒரு நிறைவான மந்தகாசம் தெரிந்தது. அவள் கையைக் குலுக்கியபடி, ''இந்த மாதிரி பெண்களை அமெரிக்காவிலே பார்த்திருக்கியா?'' என்றான்.

அவளுக்குச் சட்டென்று சொல்லத் தெரியவில்லை. அவளுக்குத் தெரிந்திருந்த நண்பர்களின் வீடுகளில் இப்படிப்பட்ட சூழலை அவள் சந்தித்ததில்லை. மைதிலி தன் வாழ்க்கையையே இவனுக்காக அர்ப்பணித்து விட்டது போல் இருந்தது.

''நா பார்த்ததில்லே'' என்றாள் அவள் மெல்ல. ''நா பார்க்காததாலே அங்க இருக்க மாட்டாங்கன்னு அர்த்தமில்லே.''

ஹரி ஒன்றும் சொல்லாமல் சூன்யத்தைப் பார்த்துப் புன்னகை செய்தான். இவன் வேறு எதையோ நினைத்துப் புன்னகை செய்கிறான் என்று தோன்றிற்று.

''நா எவ்வளவோ தடவை சொல்லியாச்சு'' என்று அவன் தொடர்ந்தான். ''என்னைக் குருடங்க இல்லம் எதிலேயாவது சேர்த்துடு, நீ யாரையாவது கல்யாணம் செய்துக்கன்னு. தனக்கு அப்படிப்

பட்ட உறவு தேவைப்படலேங்கறாங்க. இந்த மாதிரி ஒரு மனோபாவத்தை நீ அங்கே பார்க்க முடியாது. இங்கே நூத்துக்குத் தொண்ணூறு பெண்கள் அப்படித்தான் இருப்பாங்க. இருக்கறது மட்டுமில்லே, சமூகமும் அவங்ககிட்டேந்து இதைத்தான் எதிர்பார்க்கும்!''

இவன் எப்படி இதையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறான் என்று அவள் வியந்தாள். மைதிலிக்கும் இவன் சுமையாகத் தோன்றியிருந்தால், இவனுடைய நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

''என்ன பேசாமே இருக்கே?''

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''இனிமே நீதான் என் குருன்னு கால்லே விழலாமான்னு பார்க்கறேன்.''

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''குரு ஸ்தானத்திலே இருக்கறவன் வழி காட்டறவன். குருட்டுப் பயலை குருவா ஏத்துக்கறது பெரிய ஜோக்தான்.''

''இனிமே குருட்டுப் பயல் என்கிற வார்த்தையைச் சொன்னா நா இங்கே வர மாட்டேன்!''

அவன் உணர்ச்சிவசப்பட்டவன் போல் மௌனமானான். ''இல்லே சொல்ல மாட்டேன்'' என்றான் மெள்ள. ''உனக்கு ரொம்பச் சீக்கிரம் கோபம் வருது. உங்கப்பாக்கிட்டக் கூட இப்படித்தான் வந்திருக்கும்.''

''என் கோபத்துக்குக் காரணமில்லேன்னு நினைக்கிறியா?''

''இல்லேன்னு சொல்லல்லே. நீ ஒரு பிரச்னையைக் குறுகிய கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது. எல்லாத்தையும் ஒருத்தர் சொல்லல்லேன்னு ஆத்திரப்படக் கூடாது.''

''புரியுது குரு!'' என்று அவள் சிரித்தாள். ''நேத்து இருந்த கோபம் எனக்கு இப்ப இல்லே.''

''குட்! அவர் பேச வரும் போது முறைக்காதே'' என்று அவன் அவள் காதைத் தேடித் திருகினான்.

''மாட்டேன்'' என்று அவள் தோப்புக் கரணம் போட்டாள்.

வீட்டிற்குக் கிளம்பும் போது உண்மையிலேயே மனசு லேசாகியிருந்தது. 'எப்ப என்னை குருன்னு ஏத்துக்கிட்டியோ, அடிக்கடி வா. உன் அஞ்ஞானத்தைப் போக்கறேன்' என்ற ஹரி சொன்னதை நினைத்துச் சிரிப்பு வந்தது. இவனுடைய ஹாஸ்ய உணர்வுக்குக் காரணமே மைதிலிதான் என்றால் பள்ளித் தோழிகள் நம்பக் கூட மாட்டார்கள். தன்னுடைய சிரிப்பையும் மைதிலி இவனுக்கு அர்ப்பணம் செய்திருப்பாள் என்று தோன்றிற்று.

வீட்டை அடைந்ததும் அவள் நேராகத் தந்தையைத் தேடிக் கொண்டு சென்றாள். தோட்டத்தில் மல்லிகைப் பாத்தியைக் கொத்திக் கொண்டிருந்தவரின் எதிரில் நின்று ''ஹாய் டாட்'' என்றாள். அவர் தலை நிமிர்ந்து ''ஹாய்'' என்று சிரித்தார். மெட்ராஸ் வெயிலில் முகம் சிவந்து நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. தோட்ட வேலைக்கு இங்கு ஆள் இருந்தும் ஞாயிற்றுக் கிழமைகளில் இவர் சில அமெரிக்க வழக்கங்களை அனுசரிப்பது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

''வெளியிலே போனியா என்ன?'' என்றார் இயல்பாக.

''ஆமாம். சொல்லிட்டுப் போனேனே, அதாவது ஒரு ஜெனரல் அனௌன்ஸ்மென்ட் கொடுத்துட்டுப் போனேன்'' என்று அவள் சிரித்தாள்.

''கோபத்தோட!''

''இப்ப எனக்குக் கோபமில்லேன்னு சொல்லத்தான் வந்தேன்.''

அப்பா அவளைச் சடக்கென்று நிமிர்ந்து பார்த்தார். பிறகு மெல்ல எழுந்து அவளது தோளை ஒரு கையால் அணைத்து அழுத்தினார்.

''நீ ஒரு நல்ல பெண்ணுன்னு எனக்குத் தெரியும்.''

அவள் அவர் மூக்கைச் செல்லமாக நிமிண்டி, ''நீங்களும் ஒன்னும் மோசமில்லே'' என்று சிரித்தாள். ''எங்கிட்ட எல்லா விஷயத்தையும் சொல்லாமப் போனாலும்!''

சட்டென்று அவர் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு, ''ஒரு நாளைக்குச் சாவகாசமாப் பேசுவோம்'' என்றார். ''அவசரமில்லே. உன் பரீட்சையிலே நீ முழு கவனத்தையும் திருப்பணும். அதுக்கப்புறம் மேல் படிப்புக்கு அமெரிக்கா போகணும்னு நினைச்சியானா எனக்கு எதுவும் ஆட்சேபம் இல்லேம்மா.''

இது தாற்காலிக சமாதானத்துக்காக இவர் சொல்வதாகத் தோன்றவில்லை. தன்னால் நிறைவேற்ற முடியாத எதையும் அப்பா சொன்னதில்லை. நேற்று இரவெல்லாம் அவளது கோபத்தை நினைத்துப் பார்த்து இப்படிப்பட்ட முடிவிற்கு இவர் வந்திருக்கலாம் என்று தோன்றிற்று.

''ஓ தாங்க்யூ டாட்!'' என்று அவர் கையைப் பிடித்து, ''நேத்து நா கோபமாய்ப் பேசினதுக்காக ஸாரி'' என்றாள்.

''நீ கோபப்பட்டதிலே தப்பே இல்லே'' என்று சிரித்து, அப்பா மீண்டும் மண்ணைக் கிளற உட்கார்ந்தார். ''உன் இடத்திலே நா இருந்திருந்தா எனக்கும் கோபம் வந்திருக்கும்.''

வீட்டிற்குள்ளிருந்து மஹேஷின் குரல் கேட்டது. ''மீரா! போன்!''

''ஸீ யூ டாட்!'' என்றபடி அவள் உள்ளே ஓடினாள். நேற்றைய மனநிலை முழுவதும் மாறி பழைய உற்சாகம் அவளைத்



தொற்றிக் கொள்ள, காத்திருந்த ரிசீவரில் ''ஹலோ'' என்றாள் மூச்சிரைக்க.

''மீராவா?'' என்றது குரல். ''நா மீனாட்சியுடைய அம்மா பேசறேன்மா, மிஸஸ் செல்லப்பன்.''

''ஓ? ஹலோ ஆன்ட்டி!'' என்றாள் மீரா வியப்புடன்.

''மீரா, உனக்குத் தொந்திரவு இல்லேன்னா இன்னிக்கு எங்க வீட்டுக்கு வர முடியுமா, உன்னோடு கொஞ்சம் பேச ணும்'' என்றாள் மிஸஸ் செல்லப்பன்.

''எதைப் பத்தி ஆன்ட்டி?'' என்றாள் மீரா குழப்பத்துடன்.

''நீ நேரிலே வாயேன், பேசலாம். நா கார் அனுப்பறேன். அரைமணி நேரம் டைம் கொடு போதும்.''

தன்னை விட வயதில் மூத்த ஒரு பெண் மணி கிட்டத்தட்டக் கெஞ்சும் குரலில் அப்படிப் பேசுவது கூச்சத்தை ஏற்படுத் திற்று.

''கார் எதுக்கு, உங்க அட்ரெஸ் சொல் லுங்க, சைக்கிள்லே வரேன்.''

''வேண்டாம்மா. வண்டி அனுப்பறது ஒண்ணும் கஷ்டமில்லே. மூணு மணிக்கு அனுப்பட்டுமா?''

தன் கைக் கடிகாரத்தைப் பார்த்து, ''ஓ. கே. தாங்க்யூ ஆன்ட்டி!'' என்றாள்.

''உனக்கு நான்தான்மா தாங்க்ஸ் சொல லணும்'' என்று மிஸஸ் செல்லப்பன் போனைத் துண்டித்த போது, மீராவின் குழப்பம் அதிகமாயிற்று.

அம்மாவுக்கும் மகளுக்கும் இடையே ஏன்னவோ தகராறு ஆகியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ஒரு வெளி ஆள், அவளை விட வயதில் சின்னவள் வந்து சமரசம் செய்யும் அளவுக்கு மிஸஸ் செல்லப்பன் பலவீனமானவளா? மீனாட்சி என்ன புதிய இல்லுமுல்லு செய்தாளோ என்று எரிச்சல் ஏற்பட்டது. அல்லது அன்று அவளுக்காகத்தான் பொய் சொல்லி மழுப் பியதை அந்தம்மாள் கண்டுபிடித்து, 'ஏன் மறைச்சே' என்று கேள்வி கேட்கலாம். மீராவுக்கு வெலவெலத்துக் குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் கூசிப் போயிற்று. 'உங்க மகதான் என்னை அப்படிச் சொல்ல வெச்சா' என்று சொல்வதும் நாகரிகமாக இருக்காது. என்னைக் காட்டிக் குடுத்தியா என்பாள் மீனாட்சி. இனிமேல் மிஸஸ் செல்லப்பனிடமிருந்து எப்படித் தப்பிப் பது?

அம்மாவிடம் சென்று தன் கவலை யைத் தெரிவித்த போது, அம்மாவும் கவ லைப்பட்டாள் மிஸஸ் செல்லப்பனுக்காக. ''நீ தப்பிக்கிறது முக்கியமில்லே, மீனாட்சி யைப் பத்தி உனக்கு என்ன விஷயம் தெரி யுமோ அதை அந்தம்மாகிட்ட சொல்றது நல்லது'' என்றாள்.

''எனக்கு நிஜமாவே ஒண்ணும் தெரி யாது, அவ ஒரு அசடு என்கிறதைத் தவிர.''

''அவ உங்கிட்ட எதுவும் சொன்னதில் லையா?'' என்றாள் அம்மா நம்பாமல்.

''சொல்ல வருவா. நா காதிலே போட் டுண்டதில்லே. பாய் ஃப்ரெண்டுகளைப் பத்திப் பேசுவா. பாய் ஃப்ரெண்ட் இருந்தா என்ன தப்பு? அவ பொய் சொல்லி இரக சியமா நடந்துக்கறதுதான் முட்டாள்தனம். அவளுக்கு வேற எதிலேயும் சிரத்தையும் இல்லே. அதனாலே எனக்கும் அவளுக்கும் பொதுவான விஷயங்களே இல்லே. நா இன்னிக்கு வரேன்னு அந்த ஆன்ட்டிகிட்ட ஒப்புத்துக்கிட்டது தப்பு.''

''விஷயம் இல்லாம கார் அனுப்பி ஒருத்தி உன்னை வரச் சொல்வாளா?'' என்ற அம்மாவின் கேள்வி குழப்பத்தை அதிகரித் தது.

மூன்று மணிக்குச் சரியாக வந்து நின்ற காரில் ஏறி மீனாட்சியின் வீட்டை அடைந்த போது மிஸஸ் செல்லப்பன் தனியாக அமர்ந்திருந்தாள். ''மீனாட்சி வெளியிலே போயிருக்கா'' என்று சிரித்து, கூல்ட்ரிங்க் கொண்டு வந்து கொடுத்து உபசரித்துக் குசலம் விசாரித்து மீராவின் பொறுமை நழுவும் சமயத்தில், ''அந்த மைதிலி ஜய ராமன் எப்படிப்பட்டவங்கன்னு சொல்லு'' என்றாள்.

ஒரு வினாடி அவளுடைய குரலி லிருந்த படபடப்பைக் கண்டு திகைத்து, 'சாட்! மீனாட்சியை விட இவள் மோசம்' என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

(தொடரும்)

''பக்கத்து வீட்டு கோபால்ராமைப் பாருங்க. ஏதோ கான்ட்ராக்ட் பிஸினஸாம். வீட்ல எல்லாமே ஆடம்பரமா இருக்கு.''

ஆசைக் கிளிஞகள்



வாழ்க்கை என்றால் அதில் முன்னேற்றம் வேண்டும். அந்த முன்னேற்றத்தின் மூலம் வசதியும் சொகுசும் பெருக வேண்டும். பிரபாவதி இப்படித்தான் நினைத்தாள்.

ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிய கணவனுக்குக் காப்பி போட்டுக் கொடுத்தவள், அவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். கவலையோடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

''பாவம். தினமும் நீங்க வேர்வை வழியக் களைச்சுப் போயி வர்றதைப் பார்க்கும் போது மனசுக்குச் சங்கடமா இருக்கு. ஒரு ஸ்கூட்டர் வாங்கிக்கிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்?''

''வாங்கிறலாம் பிரபா. நேரம் வரட்டும்.''

''ரொம்ப நாளா இதையே தான் சொல்லிக்கிட்டிருக்கீங்க. நமக்குக் கல்யாணம் ஆயி நாலு வருஷம் ஆயிடுச்சு. ஒண்ணுமே பிரயோஜனம் இல்லை.''

அவன் காப்பியைப் பருகியபடி அமைதியாய்ப் பார்த்தான்.

''ஏன் பிரபா அப்படிச் சொல்ற? உனக்கு என்ன குறை வைச்சேன். பூ வாங்கித் தர்றதில்லையா புடைவை வாங்கித் தர்றதில்லையா? ஏதாச்சும் குறை வைச்சிருக்கேனா?''

அவளது தோளை இறுகப் பிடித்து அழுத்தினான். அவள் உதறிக் கொண்டு பொய்க் கோபத்துடன் பார்த்தாள்.

''சும்மா இருங்க. எதாச்சும் கேட்டா இப்படி நைஸ் பண்ணி மழுப்பிட வேண்டியது. நம்ம குழந்தைக்கு அடுத்த தை மாசத்தோட மூணு வருஷம் முடியப்போவுது. அவனை நல்ல ஸ்கூல்ல சேர்க்கணும்.''

''சேர்த்திடுவோம். அதைக் கூட நான் செய்யலேன்னா எப்படி?''

''அதில்லைங்க. நாம வாழ்க்கையில முன்னேறணும் இல்லையா?''

''முன்னேறிக்கிட்டுத்தானே இருக்கோம். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கும் போது, எல்.டி.ஸி.யா இருந்தேன். இப்ப யு.டி.ஸியா மாறியிருக்கேன். இது முன்னேற்றம் இல்லையா?''

''இதெல்லாம் என்னங்க பெரிய முன்னேற்றம். சம்பளத்துல ஐம்பதோ நூறோதான் அதிகமாக் கிடைக்கும். பக்கத்து வீட்டு கோபால்ராமைப் பாருங்க. ஏதோ காண்ட்ராக்ட் பிஸினஸாம். வீட்ல எல்லாமே ஆடம்பரமா இருக்கு.''

''பிரபா நீ ஒண்ணு புரிஞ்சுக்கணும். அன்பான வாழ்க்கையில இருக்கிற ஆனந்தம் வேற எதிலியுமே இருக்காது.''

அவள் அதிருப்தியாய் முகத்தைச் சுழித்தாள்.

''நீங்க ஏன்தான் இப்படியெல்லாம் பேசறீங்களோ தெரியலை.''

அவள் எழுந்து சென்றதும் சுரேந்தர் சிந்தித்துப் பார்த்தான். பிரபாவதி நீண்ட நாளாகவே ஏன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஒரு வேளை அவளது ஆசை நியாயமானதுதானோ? மற்றவர்களைப் போல தன் கணவனும் முன்னேற வேண்டும் என்று நினைக்கிறாளோ?

குழந்தையுடன் சரிசமமாய் விளையாடிக் கொண்டிருந்தவன், மனைவி வந்ததும் கவனம் கலைந்தான். பிரபாவதி கையில் அன்றைய தினசரி இருந்தது. அதில் வெளியாகியிருந்த ஒரு குறிப்பிட்ட விளம்பரத்தை ஆவலாய்க் காட்டினாள்.

''இந்த 'ஆபர்சூனிடி' காலத்தைப் பாருங்களேன். எதுக்கோ டிஸ்ட்ரிபியூட்டர் தேவையாம். நீங்க ஏன் இதுக்கு முயற்சி செய்யக் கூடாது?''



மதுமனோ



''மன்னரைப் புகழ்ந்து நான் பாடிய பாடல்கள் அவருக்குப் பிடிக்கவில்லை அமைச்சரே!''

''ஏன்? ஏதாவது சொற்குற்றம், பொருள் குற்றம் இருந்ததா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவருக்குப் புதுக்கவிதைகள்தான் பிடிக்குமாம்!''

அவன் சீரியஸாய் அந்த விளம்பரத்தைப் பார்த்தான். புதிதாய் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒரு காஸ்மாடிக்ஸ் நிறுவனம் அப்படி கேட்டிருந்தது.

''இதுக்கு டிஸ்ட்ரிபியூஷன் எடுக்கிறதுன்னா ரிஸ்கான விஷயம் பிரபா. புது கம்பெனியா இருக்கு. புராடக்ட் வேற எந்த அளவுக்கு மார்கெட்ல மூவ் ஆகும்னு சொல்ல முடியாது. அதுவும் ஒரு லட்ச ரூபாய் டெபாஸிட் கட்டணுமாம். இதெல்லாம் ஆகிற காரியமா?''

''மனசு வைச்சா எல்லாம் நடக்கும். நம்பிக்கையா இறங்கணும்.''

''அது சரி பணத்துக்கு வழி?''

''என்னுடைய நகையெல்லாம் வீட்ல தூங்கிக்கிட்டுத்தானே இருக்கு. இந்த வீட்டையும் அடகு வைக்கலாம்.''

அவன் சில விநாடிகள் மௌனித்தான். பிறகு நிமிர்ந்தான். ''இந்த கம்பெனி தயாரிக்கிற அத்தனையும் பெண்களுக்கான ஐட்டங்கள். அவனவன் எதைப் பத்தியெல்லாமோ கவலைப் பட்டுக்கிட்டிருக்கும் போது இதை யார் வாங்கு வாங்கன்னு தோணுது.''

''உங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான். இந்தக் காலத்துல எந்த விலைவாசி ஏறினாலும் இதை மட்டும் பெண்கள் வாங்காம இருக்கமாட்டாங்க. நானும் ஒரு பெண் என்பதால சொல்றேன்.''

சுரேந்தர் விடுவிடுவென்று காரியத்தில் இறங்கினான். மறுநாளே பம்பாய்க்குப் பயணமானான். கம்பெனி நிர்வாகியைச் சந்தித்து, அப்போதே ஒரு இருபதாயிரம் ரூபாயைக் கொடுத்து அக்ரிமெண்ட் எழுதிக் கொண்டான்.

அடுத்த வாரமே சரக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சுரேந்தர் தன் வீட்டின் ஸ்டோர் ரூமை சிறிது காலத்திற்குக் கோடவுனாய் மாற்றினான்.

ஆரம்பத்தில் வியாபாரம் டல்லடித்தது. ஆனால் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்ததும் வாடிக்கையாளர் ஒவ்வொருவராய்த் தேடி வந்தார்கள். சீக்கிரத்திலேயே வியாபாரம் பெருகியது. அதன் பிறகு வியாபார ஸ்தலத்தை வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டி வந்தது.

சுரேந்தர் ஐந்து ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டான். எண்ணி இரண்டே வருடங்களில் அவனது வியாபாரம் பல மடங்கு பெருகியது. கூடவே அவனது அந்தஸ்தும் வசதியும் பெருகியது.

ஆடம்பரமாய் ஒரு வீட்டைக் கட்டினான். வீட்டிற்கு ஒரு காரும் அலுவலகத்திற்கு ஒரு காரும் வாங்கினான்: வீட்டு வேலைக்கும் இரண்டு ஆள் வைத்தான். பிரபாவிற்கு இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தினமும் வீடியோவில் இரண்டு சினிமா பார்த்து வந்தாள்.

ஆனால் இவையெல்லாம் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல மனத்தில் ஏதோ வெறுமை உண்டாயிற்று. சுரேந்தர் நிச்சயம் முன்புபோல் இல்லை என்பதை மட்டும் அவளால் உணர முடிந்தது.

அவன் அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது மாலை ஆறு மணிக்கே வீடு திரும்பி விடுவான். குழந்தையுடனும் தன்னுடனும் கொஞ்சி விட்டு, அவள் சமைத்த உணவை ரசித்துச் சாப்பிடுவான். அதெல்லாம் இப்போது மாறி விட்டது. அவன் வீடு திரும்பவே இரவு பத்து அல்லது பதினோரு மணி ஆகிவிடுகிறது. ஒப்புக்கு அவளுடன் ஓரிரு வார்த்தைகள் பேசி விட்டு, ஏதேதோ பைல்களை எடுத்துப் புரட்ட ஆரம்பித்து விடுகிறான். பிறகு தொலை பேசியை எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்து விடுகிறான். விடிகாலை ஐந்து மணிக்கு அவசர அவசரமாய் எழுந்து எங்கோ புறப்பட்டு விடுகிறான். அவளது வாழ்க்கையே ஏதோ மாயாஜாலம் போல இருந்தது.

மதியம் மூன்றுமணி ஆகியும் சாப்பிடப் பிரியமின்றி கூடத்தில் அப்படியும், இப்படியும் உலவிக் கொண்டிருந்தாள். குழந்தை கரடி பொம்மையுடன் உள்ளே விளையாடிக் கொண்டிருந்தது.

பிரபாவதி கண்ணாடியின் முன் நின்று தன் உருவத்தை பார்த்துக் கொண்டாள். சரியான தூக்கமின்றி, உணவின்றி உடல் மெலிந்து போயிருந்தது.

இப்படி எத்தனை நாளுக்கு இந்த வறண்ட வாழ்க்கையைச் சகித்துக் கொண்

டிருக்க முடியும்? இந்த வாழ்க்கையில்தான் என்ன அர்த்தம் இருக்கிறது.

தன்னையும் அறியாமல் அவள் கண்கள் கலங்கின. கூடத்திற்கு வந்து காலண்டரைப் பார்த்தாள். சுரேந்தர் பிஸினஸ் டூர் விஷயமாக வெளியூர் சென்று பத்து நாட்களுக்கு மேல் ஆகியிருந்தன.

ஒரு வாரத்தில் திரும்பி வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனவன் இன்னும் ஏன் வரவில்லை என்று கவலையாக இருந்தது. இருப்புக் கொள்ளாமல் தொலை பேசி ரிஸீவரை எடுத்து ஆபீஸுக்கு போன் செய்தாள். ஒரு சேல்ஸ் அஸிஸ்டெண்ட் பதிலளித்தான்.

''சாரோட புரோகிராம் எல்லாம் எனக்கு டிடெய்லா தெரியாதும்மா. அவரோட என்கேஜ்மெண்ட் எல்லாம் இங்கே சந்தியா அம்மாதான் கவனிச்சுக்கிட்டிருக்காங்க. அவங்களும் ஐயாவோட டூர் போயிருக்காங்க. இப்ப அநேகமா அவங்க கோயம்புத்தூர்ல இருக்கலாம். எதுக்கும் நீங்க போன் பண்ணிப் பாருங்கம்மா.''

அவளுக்கு மனசு படபடத்தது. வியர்த்தது. நடுக்கமாகக் கூட இருந்தது.

சந்தியா என்னும் பெண்ணுடன் தன் கணவர் இவ்வளவு நெருக்கமாய் இருப்பதை இப்போதுதான் கேள்விப்படுகிறாள். அவசர அவசரமாய் அந்த சேல்ஸ் அஸிஸ்டெண்ட் கொடுத்த எண்ணுக்குப் போன் செய்தாள்.

''ஹலோ குமரி என்டர்பிரைஸஸ் தானே?''

''ஆமா.''

''அங்கே மிஸ்டர் சுரேந்தர் வந்திருக்காங்களா? நான் அவரோட ஒய்ப் பேசறேன்.''

''இருக்கார் மேடம். கொஞ்சம் லைன்ல இருங்க.'' சற்று நேர இடைவெளிக்குப் பிறகு குரல் வந்தது.

''ஹலோ சுரேந்தர் ஹியர்.''

''நான் பிரபா பேசறேங்க. பத்து நாள் ஆகியும் நீங்க வராம இருக்கிறது எனக்கு பயமா இருக்குங்க.''

''பிஸினஸ்னா அப்படித்தான் இருக்கும். எந்த நேரத்துல வேலை முடியும்னு சொல்ல முடியாது. சரி என்ன விஷயம்?''

''சீக்கிரமா வீட்டுக்கு வாங்க ப்ளீஸ்! நீங்க இல்லாம என்னால இங்கே இருக்க முடியலை. ஒவ்வொரு நேரமும் வெறுப்பா இருக்கு.''

''அதுக்காக பிஸினஸை முடிக்காம வந்துட முடியுமா? அநாவசியமா இது வரைக்கும் போன் பண்ணித் தொல்லை கொடுக்கறியே.''

''ஏங்க இப்படி கோபப்படறீங்க?''

''இத பார் பிரபா! பிஸினஸ் பார்ட்டி எனக்காகக் காத்துக்கிட்டிருக்கு. கண்டதைப் பேசி நேரத்தை வீணடிக்காதே!''

''நீங்க ரொம்ப மாறிட்டீங்க. முன்னே மாதிரி இல்லை.''

''ஆமா. நான் மாறிட்டேன். அதுக்கு இப்ப என்ன செய்யச் சொல்ற?''

''உங்களை யார் அப்படி மாத்தினதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்.''


''போனை வைச்சுடறேன்.''

''ப்ளீஸ் ஒரு நிமிஷம்! நீங்க முன்னால ஆபீஸ்ல சாதாரண கிளார்க்கா வேலை செஞ்சிக்கிட்டிருந்தப்போ என்னையும் குழந்தையையும் அன்பா ஆசையாக் கவனிச்சுக்கிட்டிருந்தீங்க. ஆனா இப்ப நீங்க அடியோட மாறிட்டீங்க. நான் இங்கே செத்தேனா பிழைச்சேனான்னு கூடக் கண்டுக்க மாட்டேன்றீங்க. குழந்தையக் கூட பார்க்கணும்னு உங்களுக்குத் தோணலை. எனக்கு இந்த வாழ்க்கையே வெறுத்துப் போச்சுங்க. தயவு செய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. எனக்கு இந்த ஆடம்பர வாழ்க்கை வேண்டாம். எனக்கு நீங்கதான் வேணும். தினமும் நீங்க அன்பா வாங்கிக்கிட்டு வர்ற ஒரு முழ மல்லிகைப்பூவே போதும். சரின்னு சொல்லுங்க. ப்ளீஸ்!''

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிரபாவதி கேவிக் கேவி அழுதாள்.





குளிர் நெருப்பைக் கட்டிப்பட்டேன்!

தேன்முட்டும் பூக்களினால் தேர்நெய்து வந்தவளே;
வான்சொட்டும் பனிபோல விரல்தொட்ட இளையவளே;
நான்மட்டும் படிப்பதற்கு நயனத்தில் கதையெழுது!
ஏன்தொட்டால் துவளுகிறாய்; இதழ்களிலே கவியெழுது!

தோட்டத்துப் பூக்களெல்லாம் தேவதைக்கு மாலைதர;
பாட்டுக்குள் கற்பனைகள் பைங்கிளிக்குப் போதைதர;
தீட்டுகிற ஓவியங்கள் தூயவளின் பார்வைபட;
கூட்டுக்குள் குடியேற, கோகிலமே... என்றுவர?

சித்திரமே நமக்காகச் சொர்க்கம்பார் மண்ணுக்குள்;
முத்தத்தின் அமுதருந்தி மோனசுகம் நெஞ்சுக்குள்;
கத்திமுனைக் கூர்மையடி கன்னிகையுன் கண்ணுக்குள்
வித்தைகளைத் தொடங்குகிறேன் வாலிபமே எண்ணிக்கொள்!

கணைதொடுத்துக் கணைதொடுத்துக் காமனுக்கும் கைவலிக்கும்;
அணையுடைத்து அணையுடைத்து ஆசைமனம் அலையடிக்கும்;
துணைகிடைத்த மோகத்தில் தோகையவள் உயிர்துடிக்கும்!
இணைபடைத்த மஞ்சத்தில் இளமைக்குப் பரிசளிக்கும்!

இதழ்விரிந்த தாமரையின் இளநெஞ்சில் வண்டாகி
கதைபயின்ற போதையிலே கலைஞானம் உண்டாகி
எதைநுகர்ந்த வேளையிலும் இனியவளின் நினைவாகி
விதிமறந்து மயங்கிடுவேன் வஞ்சியுடன் விளையாடி!


- மரபின்மைந்தன்.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான 'சரி' யான கலோரிகளைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."


இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21,
புது தில்லி-110019





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

க்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப் பால்தான் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்-
கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.



30

வாஷிங்டன் வைரம்

ரிச்சர்ட் மூர் எஃப்.பி.ஐ. ஆபீஸை விட்டு வெளியே வந்ததும் கிழக்கே நடக்க ஆரம்பித்தான். அடுத்த 'பிளாக்' வந்ததும் அங்கே சிக்னலைத் தாண்ட நின்று கொண்டிருந்த கறுப்பு அமெரிக்கனை அடையாளம் கண்டு கொண்டான்.

வேகமாக ஓடி அந்தக் கறுப்பு அமெரிக்கனைப் பெயர் சொல்லி நிறுத்தினான்.

பின்னாலேயே வந்த இ ர ண் டு எஃப்.பி.ஐ. ஏஜண்டுகள் மூரை இப்போது விலங்கிட்டு அழைத்துப் போனார்கள்.

அந்தக் கறுப்பு அமெரிக்கன்... வேறு யார்? அரசாங்க சாட்சியாக மாறிய ரிச்சர்ட் மூரின் பழைய கூ ட் ட ா ளி யே த ா ன். எஃப்.பி.ஐ.யின் திட்டப்படி ரிச்சர்ட் மூர் ஆதாரத்துடன் கைது செய்யப்பட்டான்!

அந்தக் கறுப்பு அமெரிக்கனை அந்த இடத்தில் நிற்கும்படி செய்த ஏற்பாடு ராபர்ட்டின் வேலைத் திறமையா அல்லது ரிச்சர்டின் போதாத காலமா?

இரயிலில் வைரமூர்த்தி, ரங்கதுரை இருவரும் ஏறும் போது மணி 10:56. அவர்கள் ஏறிய அடுத்த பெட்டியில் ஏறினான் அவர்களைப் பின்தொடர்ந்த ஆள்.

உள்ளே வந்தவர்கள் காலியாக இருந்த இரண்டு அடுத்தடுத்த 'சீட்'டுகளில் உட்கார்ந்து கொண்டனர்.

அப்பாடா! இதுவரை எஃப்.பி.ஐ. தொல்லை இல்லை. பிலடெல்பியா 12:30க்குள் போயிடலாம். அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று வைரமூர்த்தி நினைத்தார். தன் பைக்குள் ஒருமுறை அந்த போலி வைரமாலை இருக்கிறதா என்று தொட்டுப்

பார்த்துக் கொண்டார். ரங்கதுரைக்கு இன்னும் காட்டவில்லை. எதற்குக் காட்ட வேண்டும்? உண்மையான 'ஹோப்' வைரமாயிருந்தால், ரங்கதுரைக்கு வேலை இருந்திருக்கும். கூட்டாளி என்பதற்காக அவனுக்கு எல்லாவற்றிலுமே பங்கு உண்டா என்ன? இந்தியா போவதற்குள் எந்த ஏர்போர்ட்டிலாவது இவனை... என்று தீவிரமாகத் திட்டம் போட ஆரம்பித்தார் வைரமூர்த்தி.

'ஆல் அபோர்ட்' என்று ஒருவன் கத்தியதும், தானும் கத்திக் கொண்டே இரயில் நகர்ந்தது. சில விநாடிகளில் வேகம் அதிகரித்தது.

வண்டியின் தாலாட்டிலும் அசதியிலும் கண் உறங்கினார் வைரமூர்த்தி. இதுதான் சமயம் என்று ரங்கதுரை பலகாரம் விற்குமிடம் போய் இரண்டு பீர் வாங்கி வந்து குடிக்க ஆரம்பித்தான்.

'மெட்ரோ லைனர்' என்று சொல்லப்பட்ட அந்த விரைவு வண்டி வில்மிங்டன் வந்த போது நேரம் பிற்பகல் 12:14.

எஃப்.பி.ஐ. ஏஜண்டுகள் மூன்று பேர் கையில் பெட்டிகளுடன் இரயிலில் ஏறினார்கள். ஒவ்வொரு பெட்டியாகத் தேடாமல், மூவரும் ஒரே பெட்டியில் உட்கார்ந்தார்கள். வண்டி புறப்பட்ட பிறகு ஆளுக்குச் சில பெட்டிகளாகத் தேடலாம் என்பது திட்டம். வண்டிக்குள் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை நடக்கலாம்.

வண்டி மீண்டும் புறப்பட்டது. அந்தக் குலுக்கலில் கண் விழித்தார் வைரமூர்த்தி. பீர் குடித்த மயக்கத்தில் இருந்த ரங்கதுரை கண்களை அகலமாய் விரித்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''ஏண்டா ரங்கா பீர் குடிக்கிற நேரமாடா இது?'' என்றார் வைரமூர்த்தி.

''எப்ப குடிச்சால் நல்லது வைரம்?'' இந்தக் குரலுக்குரியவன் ரங்கதுரை இல்லை என்பது வைரமூர்த்திக்கு அதிர்ச்சி தந்தது.

வைரமூர்த்திக்கு வலதுபுறம் இருந்த இடத்தில் ஒரு கறுப்பு இந்தியன் இருந்தான். அவன் முகத்தில் நீண்ட வடு இல்லை. ஆனால் அவன் குரலை எங்கேயோ கேட்டது போல இருந்தது.

வைரமூர்த்திக்கு வியர்வை பெருக ஆரம்பித்தது.

''நீ யார்?'' என்று கடுமையாகக் கேட்டார்.

''ஜகன்னாதனின் ஆவி'' என்று சிரித்தான் அவன்.

ரங்கதுரை பாதி மயக்கத்தில் உளற ஆரம்பித்தான்.

''டேய் வைரம்... பாத்தியா அந்த 'ஹோப்' வைரத்தைத் திருடலாம்னு திட்டம் போட்டதுக்கே ஆவி வந்துடுச்சி... உண்மையானது கிடைச்சிருந்தா இன்னும் நிறைய ஆவிகள் வந்திருக்குமேடா பாவி'', என்றான்.

''சீ... சும்மா கிடடா ரங்கா'' என்று அவன் வாயை அடைக்க முற்பட்டார் வைரமூர்த்தி.

இந்திய ஆள் சட்டென்று ''அப்படின்னா, 'ஹோப்' வைரம் உன் கைக்குக் கிடைக்கலையா?'' என்றான்.

பிறகு கடகடவென்று சிரித்தான்.

''வைரம்... ஆவி ஏன் சிரிக்குது?'' என்றான் ரங்கதுரை.

''அடப் பைத்தியங்களா... என்னை இன்னுமா தெரியலே?'' என்றான் அந்த ஆள்.

''நீ ஜகன்னாதன்னு எனக்குத் தெரிஞ்சுட்டது... ஆனா...ஆனா...''

''அங்கேதான் நீ இந்த ஜக்கியை சரியா எடை போடலே'' மீண்டும் ஜகன்னாதன் சிரித்தான்.

கலிபோர்னியாவில் ஹாலிவுட் படங்களுக்கு முகமூடி தயாரிக்கும் கம்பெனியில் தனக்காக அவன் செய்து கொண்டிருந்த முகமூடியைக் கழற்றினான். அவன் முகத்திலிருந்த நீண்ட வடு குரூரமாகத் தோன்றியது.

ரங்கதுரை நடுங்கினான்.

ஜகன்னாதன் தன் முகமூடியை மீண்டும் போட்டுக் கொண்டான். கோட்டுப் பையிலிருந்து கைத் துப்பாக்கியை நாசூக்காக எடுத்தான். அதில் 'ஸைலன்ஸர்' பொருத்தப்பட்டிருந்தது.

முதலில் வைரத்தைத் தீர்க்கலாம் என்று மெல்ல எழுந்தான். வைரத்திடம் பேசுவது போலக் குனிந்தான். வைரத்தின் நெற்றிக்கு நேராகக் குறி வைத்தான். அடுத்த விநாடி...

''அதைக் கீழே போடு... இல்லையென்றால் உன் தலை சுக்கு நூறாகும்'' என்ற கர்ச்சனை பின்னாலிருந்து கேட்டது.

அங்கு மூன்று எஃப்.பி.ஐ. ஏஜண்டுகள் ஆளுக்கு ஒரு பிஸ்டலுடன் நின்றிருந்தனர்.

31

மணி 12:32. பிலடெல்பியா இரயில் நிலையம். முன்னால் ஒரு ஏஜண்ட். இடையே வைரமூர்த்தி, ஜகன்னாதன், ரங்கதுரை மூவரும் கைவிலங்குடன் நடந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் இரண்டு ஏஜண்டுகள். இவர்களை வரவேற்க பிலடெல்பியாவில் ஏஜண்டுகள். ரங்கதுரைக்கு பீர் குடித்த மயக்கம் இன்னும் தீரவில்லை

யாதலால் 'நல்ல வரவேற்பு வைரம்' என்று சொல்லித் திருப்திப்பட்டான்.

''இதைவிட இன்னும் வரவேற்பு பலமா நடக்கும் நாள் வெகு தொலை விலில்லை'' என்றான் ஜகன்னாதன்.

கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தயங்கியே இருக்கக் கூடாது. 'பட்பட்'டென்று இரண்டு பேரையும் சுட்டுத் தள்ளியிருக்க வேண்டும் என்று ஜகன்னாதன் தன்னைத் திட்டிக் கொண்டான்.

மூன்று இந்திய குற்றவாளிகள் பிடிபட்டனர் என்று ராபர்ட் வார்னருக்கு செய்தி உடனடியாக வந்தது. அதே நேரத்தில் ரிச்சர்ட் மூர் மீண்டும் கைதாகி உள்ளே கொண்டு வரப்பட்டான். அவனை சாட்சியத்தோடு பிடிக்க உதவிய கறுப்பு அமெரிக்கனும் வந்து நின்றான்.

இது கொண்டாட வேண்டிய நேரமாயிற்றே! எவ்வளவு கச்சிதமாகக் குற்றவாளிகளைப் பிடித்தாயிற்று! 'ஹோப்' வைரத்தையும் காப்பாற்றியாயிற்று!!

இன்று மாலை வேலை முடிந்ததும் கேர்ல் ஃபிரெண்ட் மோனிகாவுக்குப் போன் செய்து சனிக்கிழமை 'டேட்' ஏற்பாடு செய்தால் அதுவே பெரிய கொண்டாட்டமாகும் என்று ராபர்ட் எண்ணினான்.

ரிச்சர்ட் மூர் மீண்டும் காவலில் வைக்கப்பட்டான். ராபர்ட் வார்னர் முக்கிய வேலையாக வெளியே புறப்பட்டான். போகுமுன் டாக்சி டிரைவர் ஸாமுடன் போனில் தொடர்பு கொண்டு உடனே வரும்படி சொன்னான்.

ஸாம் வண்டியில் ராபர்ட் நேராக ரகுராமனின் அபார்ட்மெண்ட் போனான். கதவைத் தட்டிய சில விநாடிகளில் வைத்தியநாதன் கதவைத் திறந்தார்.

வெளியே வெள்ளை அமெரிக்கன் ஒருவன் நிற்பதைப் பார்த்துக் கதவைப் படாரென்று சாத்தினார்.

கதவு மீண்டும் தட்டப்பட்டது.

''நான்தாங்க சம்பந்தன் பேசறேன். கதவைத் திறங்க மிஸ்டர் வைத்தியநாதன்'' என்று தமிழ்க் குரலுக்கு வைத்தியநாதன் மறுக்கவில்லை.

''நீ எங்கப்பா வந்தே, இது யார்?''

''உள்ளே வந்து பேசலாமா?'' என்றான் ராபர்ட் வார்னர்.

சுருக்கமாக நடந்ததைச் சொன்னார்கள். கடைசியில்தான் ரகுராமனைப் பற்றி உண்மை வெளியே வந்தது. ரகுராமன் கத்திக் குத்துப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்பதைக் கேட்டு பூர்ணம் துடித்து விட்டாள். ஆனால் அவன் உயிருக்கு எந்த வித பயமுமில்லை என்பதை அறிந்து கொஞ்சம் கவலை குறைந்தது. அவனை உடனே பார்க்க வேண்டுமென்று சொல்லி அவள் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தாள்.

''பூர்ணம் அம்மா... ரகுராமனை இன்னும் இரண்டு மணி நேரத்துல பாக்கலாம்... இப்ப நாம செய்ய வேண்டிய இன்னொரு முக்கிய வேலை இருக்கு...'' என்றான் சம்பந்தன்.

''என்ன வேலை?'' வைத்தியநாதன் கவலையுடன் கேட்டார்.

''நிர்மலாவைக் கண்டுபிடிக்கணும்... நாங்க நினைக்கிற இடத்துல அவ இன்னும் இருந்தா அது சுலபமான காரியம்... இல்லேன்னா...'' என்று ராபர்ட் இழுத்தான்.

''அந்த குழந்தை எங்கே போனா? எப்படி இருக்கா?'' என்று பூர்ணம் ஆரம்பித்தாள்.

''நாம வண்டியிலே போய்க்கிட்டே அதைப் பற்றிப் பேசுவோமா?'' என்று சம்பந்தன் சொன்னான்.

எல்லோரும் உடனே புறப்பட்டார்கள். வைரமூர்த்தியின் குடியிருப்பை நோக்கி விரைந்தனர்.

இன்னொரு நாள் அந்த அறையிலேயே தங்கினால் பைத்தியமே பிடித்து விடும் என்று நினைத்தாள் நிர்மலா.

ஆனால்... படுக்கையிலேயே கிடக்கும் அந்த மனிதரை நினைத்த போது அவளுடைய பரிதாப குணம் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது.

படுக்கையிலேயே கிடந்தாலும் அந்த மனிதர் சுத்தமான சூழ்நிலையிலிருந்தது நிர்மலாவுக்கு வியப்பைத் தந்தது. அவர்கள் இருந்த அறையிலேயே சிறிய பாத்ரூம் இருந்தது. அவளுக்குத் தேவையான வசதிகளை வைரமூர்த்தி செய்திருந்தார். அவளை இன்னும் உயிருடன் வைத்திருப்பதை நினைத்தால் அவளுக்கு ஒரு பக்கம் வியப்பாகவும் மறுபக்கம் சந்தேகமாகவும் இருந்தது.

ஓரிரு முறை அந்த மனிதன் அருகில் போய்ப் பார்த்தாள். தாடி நிறைய வளர்ந்திருந்தது. உடல் மிகவும் நலிந்து இருந்தது. குழி விழுந்த கண்கள். தலைமயிர் நரைத்திருந்தது. அவரால் பேச முடியுமா என்பது கூடத் தெரியவில்லை.

''சார்... சார்..'' என்று அவள் தினமும் பலமுறை கூப்பிட்டுப் பார்த்தாள்.

''ம்... ம்...'' என்றுதான் பதில் வந்ததே தவிர, அவரால் வேறு எதுவும் பேச முடியவில்லை.

அந்த அறையில் சோபா, கட்டில், சிறிய விளக்கு வைக்கப்பட்டிருந்த ஸ்டூல்

தவிர வேறு எந்த சாமான்களும் இல்லை. தினமும் காலையில் அவள் எழுந்திருக்கு முன் சுத்தமான உடைகள் அவளுக்காகக் காத்திருக்கும். சிற்றுண்டியும் அவ்வாறே. பகலில் சாப்பிட சில பழங்கள். இரவு கொஞ்சம் உணவை அவளுக்கு எடுத்துக் கொண்டு வைரமூர்த்தி வருவார். எதுவும் பேசாமல், படுக்கையிலிருந்த மனிதரைப் பார்த்து விட்டுப் பேசாமல் திரும்புவார்.

'இதுபோல் எத்தனை நாட்களோ...' என்று அவதிப்பட்டுக் கொண்டிருந்த நிர்மலா வாசற்கதவை யாரோ பலமாகத் தட்டுவது கேட்டுத் திடுக்கிட்டாள்.

நிச்சயம் வைரமூர்த்தியாக இருக்க முடியாது! அவர் சாவி போட்டுத் திறந்து கொண்டு வருவாரே? தட்ட அவசியம் இல்லையே!

ரகுராமன் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போக வந்து விட்டார்... ரகுராமன்தான்!!!

''ரகு... நான் உள்ளே இருக்கேன்... இங்கேதான் இருக்கேன். ரகு.. ரகு...'' என்று கத்தினாள். அவள் கூச்சல் யார் காதில் விழுந்ததோ இல்லையோ, கதவு உடைத்துத் திறக்கப்பட்ட சப்தம் கேட்டது.

காலடிச் சப்தங்கள் கேட்டன. மூன்று பேராவது இருப்பார்கள் என்று நினைத்தாள். ரகுராமன் இருந்தால் 'நிர்மலா' என்று இத்தனை நேரம் கதறியிருக்க மாட்டானா? 'ரகு நிச்சயம் வரவில்லை' என்ற எண்ணம் ஏமாற்றத்தையும் சற்று பயத்தையும் ஏற்படுத்தியது.

பூட்டப்பட்ட அறைக் கதவு திறக்கப் பட்டது.

அறைக்குள் வெளிச்சம் பரவியது. நிர்மலா எதையும் சந்திக்கத் தயாரானாள்.

அவள் கண்ணைத் திறந்த போது எதிரே வைத்தியநாதன், பூர்ணம் மற்றும் இருவர் இருந்தனர்.

''பூர்ணம் மாமீ...'' என்று ஓடிப் போய் கட்டிக் கொண்டாள்.

''இனி உனக்கு எதுவும் கெட்டது நடக்காதம்மா... வா போகலாம்'' என்று வைத்தியநாதன் சொன்னார். ராபர்ட் வார்னரையும் 'ஸாம்' எனப்படும் சம்பந்தனையும் அறிமுகப்படுத்தினார்.

''போகலாமா?'' என்று ராபர்ட் கேட்டான்.

''நம்முடன் அந்த மனிதரையும் அழைத்துப் போக வேண்டாமா?'' என்றாள் நிர்மலா.

நிர்மலாவைத் தவிர மற்றவர்கள் வியப்பில் மூழ்கினர். வைரமூர்த்தியின் விளையாட்டுக்கு எல்லையே இல்லையா? யார் அந்த மனிதன்?

(தொடரும்)

தேவிலால் புதிய கட்சி ஆரம்பிக்கிறாராமே?

● கே. பி. சாரதி, வேலூர்.

? கர்நாடகமும், பஞ்சாப், காஷ்மீர் போல மாறுமாமே?

! கடைசியில் எல்லாம் ருஷ்யா போலாகி விடாமல் இருந்தால் சரி!

● டி. சீனிவாசன், சென்னை - 79.

? அசாருதீன் 3000 ரன்களை எடுத்துப் புதிய சாதனை படைத்து விட்டாரே?

! தனி நபர் சாதனைகள் அவ்வப்போது நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆடுகின்ற நாட்கள் நீடிக்க நீடிக்க சாதனைக் கான வாய்ப்புக்களும் அதிகம். ஆனால் இதே தனி நபர்கள் ஒரு டீமாக அமைந்து சாதனை புரிய முடியவில்லையே! மேற்கிந்திய அணியை வென்றதற்கு மூக்கின் மேல் வைத்த விரல் ஆஸியிடம் தோற்றதற்குப் பற்களுக்கிடையில் கடிபடுகிறதே!

● என். சுரேஷ், சேலம்.

? இயல் - இசை - நாடக மன்றத்தின் தலைவராக குன்னக்குடி நியமனம் பற்றி...?

! அவர் வயலின் வாசிப்பில் காணப்படும் சுறுசுறுப்பு அந்த அமைப்பிலும் இடம் பெறட்டும்!

● ப. இராம்தாஸ், சேலம்.

? சீனப் பிரதமரின் இந்தியப் பயணத் தால் இனிவரும் ஆண்டுகளில் இந்தியா - சீனா வர்த்தகம் மேம்படுமா?

! வர்த்தக மேம்பாடு பற்றித்தான் அதிகமாகப் பேசப்பட்டது என்று ப. சிதம்பரம் கூறியிருக்கிறார். ஆனால் சீனர் களுடன் வியாபாரமும் ஜாக்கிரதையாகவே செய்ய வேண்டும். எல்லைப் பிரச்னையில் ஏற்பட்ட ஏமாற்றம் இதிலும் ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?

● மு. மதிவாணன், அரூர்.

? 'தமிழக மக்களுக்குச் சத்துணவு என்றால் எம். ஜி. ஆர். நினைவு வருவது போல இனி காவிரி நதி நீர் என்றாலே ஜெயலலிதா நினைவு வரும்' என்று அமைச்சர் கிருஷ்ண சாமி கூறியிருக் கிறாரே?

! ஜெயலலிதா நினைவு மட்டுமா வரும்? கர்நாடகாவிலிருந்து செத்துப் பிழைத்து அகதிகளாகத் தப்பி ஓடி வந்துள்ள ஆயிரக் கணக்கான அகதிகள் நினைவும் வருமே!

● ஆர். அப்துல் சலாம், மன்னார்புரம்.

? 'நாட்டு ஒற்றுமைக்கு ஹிந்தி அவசியம்' என்று உள்துறை அமைச்சர் சவான் பேசியிருப்பது எதைக் காட்டுகிறது?

! ஹிந்தி ஏகாதிபத்தியம் மீண்டும் தலை யெடுக்கிறது என்பதைத்தான்.

● ஜி. செல்வராஜன், வெங்கலம்.

? வலம்புரிஜான் எழுதவிருந்த 'ஜெ'யின் வரலாற்றை எழுதக் கூடாது என்று முதல்வர் வழக்குத் தொடுத்தது சரியா?



✦ புதிய கட்சி



✦ மீண்டும் ஹிந்தி

! மேலோட்டமாகப் பார்க்கும் போது இது எழுத்து சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகத் தோன்றும். ஆனால் ஒருவர் ஜீவியந்தராக இருக்கும் போது அவரது முன் அனுமதியின்றி ஒருவர் தம் போக்கில் அவரது வாழ்க்கை வரலாற்றினை எழுதுவது சரி என்று தோன்றவில்லை. மெய்யான வாழ்க்கை வரலாறு என்பது மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு தக்க ஆதாரங் களுடன் எழுதப்பட வேண்டும். ஆதாரங் களைக் காட்ட முடியாத வரலாறு கற்பனை கலந்த நாவல் போலாகி விடும். அதனைத் தடுக்க, பாதிக்கப்பட இருப்பவருக்கு உரிமை உண்டு.

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? புத்தாண்டு பிறக்கப் போகிறது, அரசியல்வாதிகளுக்குத் தாங்கள் கூறும் அட்வைஸ்?

! நடந்து முடிந்த ஆண்டைத் திரும்பிப் பாருங்கள். அதில் நடந்த தவறுகள்

மீண்டும் நிகழாதிருக்க உறுதி கொள்ளுங்கள். - இது அரசியல்வாதிகளுக்கு மட்டுமென்ன, உங்களுக்கும் எனக்கும் கூடப் பொருந்தும்!

● எம். பழனிசாமி, கோவை.

? தமிழக போலீஸ், சாம்பியன் பட்டத்தை எப்போதும் தக்கவைத்துக் கொள்ள எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?

! நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்? விளையாட்டுத்துறை சாம்பியனையா, அல்லது 'ஜெ'யின் கட்அவுட் போஸ்டர் வண்ண விளக்கு சாம்பியனாக காவல் துறை விளங்கியதையா?

● எஸ். பிரியா, பாளையங்கோட்டை.

? 'தடா சட்டம் மூலம் தி. மு. க. விற்குப் புத்துணர்ச்சி ஊட்டியதற்காக 'ஜெ'க்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் போடலாம்' என்கிறாரே, ஸ்டாலின்?

! சாமர்த்தியமான பேச்சுத்தான். ஆனால் வாக்கு சாதுர்யம் மட்டும் போதாது. தி.மு.க. சோர்ந்து போயிருந்தது என்பதை ஒத்துக் கொண்டவராகிறார். ஏன் சோர்வு? யோசிக்க வேண்டும். சில பல கொள்கைகளில் மாற்றங்கள் வேண்டும். அவற்றைத் தயக்கமின்றி பகிரங்கமாக அறிவிக்கவும் வேண்டும். தவறு என்று தெரிந்த பிறகும் உடும்புப்பிடியாக உளுத்துப் போன கொள்கைகளைப் பிடித்துக் கொண்டிருப்பதை விட அவற்றை உதிர்த்து விட்டு முன்னேறுவதே சிறந்தது.


'ஜெ'க்கு நன்றி!


◆ எழுதவிருந்த வரலாறு


◆ 3000 ரன்கள்


◆ புதிய பதவி


◆ தலைவலி!


◆ அந்த நினைவு வருமே!

● கே. ரமேஷ்பாபு, சேலம்.

? டீவி நிகழ்ச்சிகளின் தரம் தயாரிப்பாளர்களைப் பொறுத்து அமைவதா, அல்லது...?

! ரசிகர்களைப் பொறுத்தும் அமைவது தான். எதை ஒளிபரப்பினாலும் பார்க்கிறார்கள் என்றால் தரம் தாழ்ந்துதான் போகும். நம் தேசத்தில் கலை அம்சங்களைப் பொறுத்தமட்டில் தரமானதும் நல்லனவும் விலை போவது குறைவாகத்தானே இருக்கிறது!

● நிவேதிதா, திருச்சி.

? இந்த வாரம் (15.12.91 இதழ்) தடங்கல் ஏற்பட்டதற்கு வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லையே?

! இதோ, வருத்தம் தெரிவிக்காததற்கும் சேர்த்து வருத்தம் தெரிவித்து விடுகிறேன்.

● குணசீலன், விஜயமங்கலம்.

? 'விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யவில்லை, ஆசிதான் வழங்கினோம்' என்று கூறுகிறாரே துரைமுருகன்?

! ஒரு கட்சி என்றால் சிலர் அதில் தலைவலியாகத் திகழ்வார்கள். சிலர் உற்சாக டானிக்காக விளங்குவார்கள். துரைமுருகன் முந்தைய ரகம்.

● ஆர். ராதிகா, அருப்புக்கோட்டை.

? பிறந்த பயனை அடைந்து விட்டோம் என்று என்றாவது நினைத்த துண்டா?

! செய்யும் தொழிலில் ஈடுபாடு இருந்தால், அதுவே தெய்வம் என்று கருதினால் ஒவ்வொரு நாளும் பிறந்த பயன் அடைந்ததாக உணரலாம். இல்லையெனில் ஒரு குழந்தை பிறக்கக் காத்திருக்கலாம். குழந்தை தோளுயரத்துக்கு வளர்ந்து விட்டால் பேரன், பேத்தி பிறக்கக் காத்திருக்கலாம்.

● கே. பாலமுருகன், சித்தாத்தூர். ❑

? விவசாயிகள் நலன் காக்கவும் தொழிலாளர் முன்னேற்றத்துக்கும் தேவிலால் புதிய கட்சி ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளாராமே?

! பின்னே, சுயநலத்துக்காகவும் தனது மகன்கள், மருமகள்கள் முன்னேற்றத்துக்காகவும் ஆரம்பிக்கப் போவதாகவா ஒரு தலைவர் சொல்வார்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. பாலமுருகன்,
சித்தாத்தூர் (அஞ்சல்)
திருக்கோவிலூர் (வட்டம்)
605 701.

திரும்பிப் பார்க்கிறேன் - 13

சென்ஸார் சாஸ்திரி போட்ட முட்டுக்கட்டை!



சசிகபூர்



பாலாஜி

காஷ்மீரின் தால் ஏரியில் டூரிஸ்டுகள் பலரும் ''வாட்டர் ஸ்கீயிங்'' செய்வதைப் பார்த்ததும், 'தேன் நிலவு' படத்திலும் அப்படி ஒரு காட்சி, அதுவும் பாடல் காட்சியாக வைக்கலாமே' என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

வைஜயந்திமாலா அந்தக் காட்சியில் தோன்றினால் வரவேற்பு நன்றாகத்தான் இருக்கும். ஆனால் 30 - 40 அடி ஆழமுள்ள ஏரியில் அவரை ஓர் ஆபத்தான விளையாட்டில் ஈடுபடுத்துவதா? ஏற்கெனவே நடந்த ஒரு விபத்து போதாதா?

''டூப் போடவா?'' என்று கேட்ட போது,

''வேண்டாம் ஸார் நானே செய்கிறேன்'' என்றார் வைஜயந்தி.

நான் தயாராக வைத்திருந்த அடுத்த கேள்வியைப் போட்டேன். அப்போதுதான் அந்த அதிர்ச்சியும் எனக்கு ஏற்பட்டது!

வைஜயந்திமாலாவுக்கு நீச்சல் தெரியாது!

டூப்பும் போடக் கூடாது; இவருக்கோ நீச்சல் தெரியாது; ஏரியின் ஆழம் 40 அடி! ஏற்கெனவே நடந்த விபத்தின் நினைவு பசுமை; ஷூட்டிங்குக்கு கால்ஷீட்டில் பாக்கி இருக்கும் நாட்களோ மிகவும் குறைவு. என்ன செய்ய? யோசித்தேன். ஒரு முடிவுக்கு வந்து, ''சரி முதலில் நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள்'' என்றேன்.

டூப் போடாமல் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒருபுறம் இருந்தாலும் வைஜயந்திக்கு உள்ளூர கொஞ்சம் பயம் இருப்பதையும் என்னால் உணர முடிந்தது. நம்பியாரை அணுகினேன். அவர் மகள் நன்றாக நீந்துவாள். அவளை முதலில் 'வாட்டர் ஸ்கீயிங்' கற்றுக் கொள்ளச் செய்தோம். அதைப் பார்த்து வைஜயந்திக்குப் பயம் தெளிந்தது. நீச்சல் கற்றுக் கொண்டார். பிறகு வாட்டர் ஸ்கீயிங்கும் செய்தார்.

இந்தவிதமாய்த்தான் 'ஓகோ எந்தன் பேபி' என்ற பாடல் காட்சி படமாகியது. வாட்டர் ஸ்கீயிங்குக்குப் பயன்படுத்தப் பட்ட படகு தவிர, படம் எடுக்க காமிரா யூனிட்டுக்கு இன்னொரு விசைப் படகு. அதைத் தொடர்ந்து, பாதுகாப்புக்காக முதலுதவிப் பெட்டியுடன் ஒரு டாக்டரும், லைஃப் பாய் எனப்படும் மிதப்பு உபகரணங்களுடன் நீச்சல் தெரிந்தவர்களும் ஏறியிருந்த மற்றொரு விசைப்படகு! ஒவ்வொரு ஷாட்டின் போதும் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டுதான் ஆரம்பிப்போம்! எந்தவித விபத்தும் இன்றி 38 ஷாட்டுகள் எடுத்தோம்.

'நஸ்ரானா' படத்தில் ராஜ்கபூரை நான் இயக்கிய போது, அவர், 'ஆர். கே. ஸ்டுடியோவுக்காக ஒரு படத்தை இயக்கித் தர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார் என்பதை ஏற்கெனவே சொன்னேன். பேச்சு வாக்கில் சொன்னதை காரியசாத்தியமாக்க அவர் முயற்சி செய்தது காஷ்மீரில்தான்.

காஷ்மீருக்கு அவர் வந்தது எதற்காகத் தெரியுமா? தமது 'சங்கம்' படத்தில் வைஜயந்தி மாலாவை நடிக்க வைத்து விட வேண்டும் என்பதற்காகத்தான்! வைஜயந்தி பிடி கொடுத்துப் பேசவில்லை. எப்படியும் அவர் ஒப்புதலைப் பெற்று விடுவது என்ற நோக்கத்தில் ராஜ்கபூர் காஷ்மீரிலேயே ''காம்ப்'' போட்டு விட்டார்! தினமும் நாங்கள் சற்று நேரமாவது சந்தித்து ஜாலியாகப் பேசிக் கொண்டிருப்போம்.

அப்போதுதான் ஒரு நாள், நானே மறந்து போய் விட்ட அந்த விஷயத்தை ராஜ்கபூர் நினைவூட்டினார். ''ஆர். கே. ஸ்டுடியோவுக்கு நீங்கள் ஒரு படம் டைரக்ட் செய்து தர வேண்டுமே; ஏற்கெனவே பேசியிருக்கோமே...''

''ஓ, யெஸ்! தாராளமாய் டைரக்ட் செய்கிறேன்'' என்றேன்.

''நீங்கள் சென்னை திரும்பியதும் கதாசிரியரை அனுப்பி வைக்கிறேன். ஸ்டோரி டிஸ்கஷனை சீக்கிரம் முடித்து விடுங்கள். முடிந்த கையோடு ஷூட்டிங் ஆரம்பித்து விடலாம். சசிக்கு ஒரு நல்ல 'பிரேக்' வேண்டும்.''

எனக்கு ஷாக் அடித்தது. தம்பி சசி கபூருக்கு ஒரு நல்ல வாய்ப்பு அமைய வேண்டும் என்பதற்காகப் படம் எடுக்கிறார். அதை நான் டைரக்ட் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்! அதிக நேரம் யோசிக்கத் தேவையிருக்கவில்லை. உடனடியாக ''ஸாரி பிரதர்'' என்றேன்.

''ஏன்? ஏன்? சசி கூட நல்ல நடிகன்

தான்'' என்று ராஜ்கபூர் என்னைப் புரிந்து கொண்டவராகச் சமாதானம் சொன்னார்.

ஆனாலும் நான் மறுத்து விட்டேன். ''உங்கள் தம்பி நல்ல நடிகர்தான்; நீங்கள் தயாரிக்கும் படம்தான்; எல்லாம் சரி. ஆனால் ஆர். கே. ஸ்டுடியோ பானரில் ஸ்ரீதர் டைரக்ட் செய்ய வேண்டும் என்றால், அதில் ராஜ்கபூர்தான் நடிக்க வேண்டும். அப்போதுதான் எனக்குப் பூரிப்பும் சந்தோஷமும் ஏற்படும்'' என்று சொல்லி விட்டேன்.

தேன்நிலவு படத்தைத் திட்டமிட்ட படி முடித்துக் கொண்டு திரும்பினோம். சென்ஸாருக்குப் போயிற்று. தணிக்கை அதிகாரி சாஸ்திரி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

''இந்தப் படத்தின் கிளைமாக்ஸை நான் அனுமதிக்க முடியாது.''

காரணமும் சொன்னார் சாஸ்திரி :

''கிளைமாக்ஸில் காஷ்மீர மலைவாசிகளான கோஜர்களுக்கும் ஹீரோவுக்கும் இடையிலான மோதல் காட்சி வருகிறது. இது சிறப்பு அந்தஸ்து பெற்ற மாநிலமான காஷ்மீருக்கும் இந்தியாவின் இதர பகுதிகளுக்கும் இடையிலான சுமுக உறவைப் பாதிக்கும்.''

சாஸ்திரி உறுதியான மனிதர் என்பது எல்லாருக்கும் தெரியும். அவரிடம் வாதாடி வெற்றி பெற முடியாது. படத்தின் கிளைமாக்ஸை மாற்றியே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நான் ஆளானேன். 'நிறைய செலவு செய்து காஷ்மீரில் படமெடுத்துத் திரும்பிய பிறகு இப்படி ஆகி விட்டதே' என்று எனக்கும் பார்ட்னர்களுக்கும் ரொம்ப வருத்தம்.

'மறுபடி காஷ்மீர் போவதா? நடிகர்களின் கால்ஷீட் கிடைக்குமா? செலவு கொஞ்சமாகவா ஆகும்?' என்றெல்லாம் யோசித்தேன். 'அவுட்டோரிலேயே எடுக்கப்பட்ட படம்' என்ற புதுமையான முயற்சிக்கு மாறாக செட் போடவும் நான் விரும்பவில்லை. எனவே, காஷ்மீருடன் பெருமளவு ஒத்துப் போகிற இடமாக கொடைக்கானல் வட்டாரத்தில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, புதிய கிளைமாக்ஸைப் படம் பிடித்தோம்.

படம் சென்ஸார் ஆகி, திரையிடப் பட்டது. கிளைமாக்ஸ் சுத்தமாக அடி பட்டுப் போனதால் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. ஆனாலும் முதலுக்கு மோசமில்லாமல் தப்பினோம்!

ஒருநாள் நடிகரும் தயாரிப்பாளருமான பாலாஜி என்னைச் சந்தித்து, ''ஸ்ரீதர் நீங்க 'மதர் இந்தியா' படம் பார்த்திருக்கீங்களா?'' என்று கேட்டார்.

எதற்குக் கேட்கிறார் என்று புரியாவிட்டாலும் நான் ரசித்துப் பார்த்த படம் அது என்பதால், ''ஓ, பார்த்திருக்கேனே!'' என்று கூறி அந்தப் படத்தின் சிறப்பு இயல்புகளை விவரித்தேன்.

''அதைத் தமிழில் எடுப்பதற்காக உரிமை வாங்கி வைத்திருக்கிறேன். நீங்க தான் டைரக்ட் செய்யறீங்க!'' என்றார் பாலாஜி.

எனக்கு நம்பவே முடியவில்லை. ''என்ன சொல்றீங்க பாலாஜி?'' என்று கேட்டு முடிப்பதற்குள் பாலாஜி, ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தமது பாக்கெட்டிலிருந்து எடுத்து என் கரத்தைப் பற்றி அதில் வைத்துப் பொத்தினார். ''இது அட்வான்ஸ் இல்லை; அச்சாரம். நாம் ஒத்துழைக்கப் போகிறோம் என்பதன் அடையாளம்'' என்றார்.

''பிரதர், நான் ரசிகன் என்ற முறையில் அந்தப் படத்தைப் பார்த்துச் சிலாகித்தேன். ஆனால் டைரக்ட் செய்வது என்பது வேறு. மறுபடி படம் போட்டுப் பார்க்கலாம். பிரிண்ட் இருக்கிறதல்லவா?''

இருவரும் அருகருகே அமர்ந்து படம் பார்த்தோம். பார்க்கப் பார்க்க என் பிரமிப்பு அதிகரித்தது. 'இவ்வளவு பிரும்மாண்டமான படத்தை நாம் செய்ய முடியுமா?' என்ற பயம் கலந்த கவலை தோன்றியது. படம் முடிந்த போது சுத்தமாய் நம்பிக்கை போய் விட்டது. 'மெகபூப் ஆழமாய்ச் சிந்தித்துச் சிருஷ்டித்துள்ள திரைக் காவியம். இதைத் தமிழில் இதை விடச் சிறப்பாகச் செய்யாவிட்டாலும் இந்த அளவுக்கேனும் செய்து காட்ட வேண்டும். முடியுமா? அவசரப்பட்டு ஏதாவது செய்யப்போய் படம் தோல்வி அடைந்தால் நமக்கு இருக்கிற பேர் ரிப்பேராகி விடுமே?'

பாக்கெட்டில் நூறு ரூபாய் நோட்டு உறுத்தியது. அதைத் திரும்பவும் பாலாஜியிடமே தந்துவிட்டு, ''ஸாரி பிரதர்; ஆளை விடுங்க'' என்றேன். நான் ஒதுங்கி விட்டாலும் மதர் இந்தியா தமிழில் வெளிவரத் தான் செய்தது. படுதோல்வியும் அடைந்தது.

பாலாஜிக்காக ஹிந்தி படம் பார்த்த நான், அடுத்து சிவாஜிக்காக ஓர் ஆங்கிலப் படம் பார்த்தேன். அது குறித்து விவரமாக அடுத்த வாரம்!

டைரக்டர் ஸ்ரீதர்

கோட்டு வாத்தியமா சித்ர வீணையா?

◆ 'கோட்டு வாத்தியம்' என்பதை மாற்றி ஏன் 'சித்ர வீணை' என்று அழைக்க வேண்டும்? இந்தக் கேள்வி கல்கி இதழிலும் எழுப்பப் பட்டுள்ளதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது விளக்கம் தர ஒரு வாய்ப்பு. இந்தப் பெயர் மாற்றம் நீண்ட ஆலோ சனைக்குப் பிறகே சென்ற ஆண்டு மியூசிக் அகாடமி மாநாட்டில் வித்வான்களின் ஒப்புதலுடன் நிறைவேறியது. சித்ரவீணை என்பதே 2000 ஆண்டுகளாக இந்தக் கருவியின் பாரம்பரியப் பெயர். பரதமுனிவின் 'நாட்டிய சாஸ்திரம்' உட்பட பல பழமையான நூல்களில் இதற்கு ஆதாரம் உள்ளது. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த வாத்தியத்தின் மறு மலர்ச்சிக்குக் காரணமாயிருந்த ஸகாராமராயர் வைத்ததே 'கோட்டு வாத்தியம்' என்ற பெயர். 'கோட்டு வாத்தியம் என்றால் என்ன' என்று தென் இந்தியர் அல்லாதவருக்கு எளிதில் புரிவ தில்லை. ஆங்கிலத்தில் எழுதும் போது 'Goat' வாத்தியம் என்று கூட ஆகி விடுகிறது! 'சித்ர வீணை' என்றால் அயல்நாட்டவருக்குக் கூட எளிதில் புரிகிறது. 'கோடு அல்லது கோட்டி னால் வாசிக்கப்படுவது' என்ற காரணப் பெயர் நீடிக்கவும் இனி வழியில்லை. காரணமே மறைந்து வருகிறது! கோடு அல்லது குச்சி (கட்டை)க்குப் பதில் இப்போது Teflon கூடப் பயன்படுகிறது. எல்லாவற்றையும் விடுங்கள், 'கோட்டு வாத்தியம்' என்பதை விட 'சித்ர வீணை' என்பது ரஞ்சகமாக இருக்கிற தில்லையா?

சென்னை - 20, என். ரவிகிரன்.

வள்ளுவர் வழியில்

◆ தமிழக எதிர்க்கட்சிகள், சட்டமன்றத்தில் பலமின்றி இருக்கும் சூழ்நிலையில் கல்கி பொறுப்புணர்வும் செயல்திறனுமிக்க எதிர்க் கட்சியாகத் திகழ்வதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது. ''தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு'' என்ற வள்ளுவத்திற்கிணங்க 'தடா சட்டமும் தடலடி தர்பாரும்' அமைந்திருந்தது.

விருதுநகர், க. முருகேசன்.

அழகான பதில்கள்

◆ அனைத்துக் கேள்விகளுக்கும் எளிமையாக, அழகாக, ஆழமாகப் பதில் சொல்லியிருக்கிறார் எம். எஸ். வி!

சேலம் -5, என். சுரேஷ்.

வாதம் சரியல்ல!

◆ சினிமாப் பாட்டு தெளிவாகக் கேட்கா விட்டால் பாட்டுப் புத்தகத்தை வாங்கி வார்த் தைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்கிறார் எம். எஸ். வி. இது சப்பைக் கட்டு வாதம்! அப் படியானால், பின்னணிப் பாடகர்கள் பட்டாளம் எதற்கு? பாட்டை இசைக் கருவிகளில் இசைக்கச் செய்து விட்டுத் தியேட்டருக்குப் போகும் ரசிகர் களுக்குப் பாட்டுப் புத்தகம் ஒன்றையும் சப்ளை செய்து விட்டால் போதுமே!

ஈரோடு, சி. நாச்சிமுத்து.

பிரசாதம் கிடைத்தது!

◆ தேன் தமிழில் சுப்ரபாதம் வந்துதித்த வரலாற்றைப் படித்து மெய்சிலிர்த்தேன். ஸ்ரீ வேங்கடமலையான் அருளால் பார்த்தசாரதியின் பணியில் எம். எஸ். ஸின் இனிய குரலில் தமிழ்க் குடும்பங்களுக்குக் கிடைத்த பிரசாதம், 'திரு வேங்கடமுடையான் திருப்பள்ளி எழுச்சி'.

ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

பட்டம் தரலாம்!

◆ ''அபிநய அரசியல்'' அபாரம்! அற்புதம்! சரியான சமயத்தில் சரியான பாடல் தேர்வுகள்! குத்தலும் கேலியும் கலந்த கார்ட்டூன்களை வெளியிட்டதற்குக் 'குத்தல் திலகம்' என்று பட்டம் வழங்கலாம்!

சிறுமுகைப்புதூர், இந்துதாசன்.

பாராட்டத்தக்கது!

◆ நடனக் கலைஞருக்கு உயிர் ஊட்டும் தையல் கலைஞர்களின் பெருமைகளை வெளிப்படுத்திக் கட்டுரை வெளியிட்டு இருப்பது பாராட்டத் தக்கது.

ஈரோடு, ஈ. டி. விஜயகுமார்.

ஒரு வேண்டுகோள்!

◆ தமிழகத்திலுள்ள அனைத்து வகைக் கோயில் களையும் (கிராம தேவதைக் கோயில்கள் மற்றுமுள்ள பல கோயில்கள் உள்பட) பற்றிய முழு விவரங்களைச் சேகரித்துத் தொகுக்கும் மாபெரும் பணி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதி பதி, ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள் அவர்களின் அருளாணைப்படி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

எனவே அன்பர்கள், தங்கள் ஊரின் பெயர், மாவட்டம், தெளிவான அஞ்சல் முகவரி (பின் கோடுடன்) முதலியன குறிப்பிட்டு, ஊரிலுள்ள பெரிய, சிறிய அனைத்துக் கோயில்களின் பெயர்கள், மற்றும் சுருக்கமான விவரங்களை வெள்ளைத் தாளில் எழுதி, ''ஆலய ஆய்வு மையம்'', ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீமடம், காஞ்சிபுரம் - 631 502 என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக் கொள் கிறோம்.

காஞ்சிபுரம், நிர்வாகி,
ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் மடம்.



பி.ஜே.பி. வளர்ச்சியும் முஸ்லீம்கள் கவலையும்

பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சியைக் கண்டும், அது எழுப்பும் ஹிந்துத்துவ கோஷங்களைக் கேட்டும் மிகவும் பயந்து போயிருக்கிறது முஸ்லீம் சமூகம். தப்பித் தவறி பா. ஜ. க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால், தாங்கள் இரண்டாம் குடிமக்களாக ஆக்கப்படுவோம் என்கிற பீதியில் இருக்கிறார்கள் இந்தியாவில் வாழும் சுமார் 12 கோடி முஸ்லீம் மக்கள்.

''எல்லாக் குடிமக்களின் உயிருக்கும் உடமைக்கும் எனது அரசு பாதுகாப்பு அளிக்கும்'' என்று உ. பி. முதல்வர் கல்யாண்சிங் பதவியேற்ற போது வாக்குறுதி அளித்தார். ஆனால் நடந்தது என்ன? சமீபத்தில் வாரணாசி கலவரத்தில் கொல்லப்பட்டவர்கள் யார்? யாருடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டன? வாரணாசியில் கலவரம் செய்த ஆர். எஸ். எஸ். தொண்டர்களையும், பஜ்ரங்தள வீரர்களையும் (?) கைது செய்யாமல் கை கட்டி வேடிக்கை பார்த்ததே போலீஸ்! இதற்கு யார் பொறுப்பு?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார் மதுரையைச் சேர்ந்த முகமது யாகூப்.

கடந்த பிப்ரவரியில் இந்தூரில் (ம.பி.) பாம்பே பஜார் என்ற பகுதியை 'ஆக்ரமிப்புகளை அகற்றுகிறோம்' என்ற போர்வையில் தூள், தூளாக்கியது அங்குள்ள பா. ஜ. க. அரசு. இங்கு கடை வைத்திருந்தவர்கள் பெரும்பாலோர் முஸ்லீம்கள். எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் நடந்த இந்த அநியாயத்துக்குக் காரணம் யார்? ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் ஒரு கலவரத்தில் முஸ்லீம் பகுதிகளைத் தாக்கியதற்காகக் கைது செய்யப்பட்ட பா. ஜ. க. தொண்டர்கள் மீது வழக்கு எதுவும் போடாமல் விட்டது அந்த மாநில பா. ஜ. க. அரசு.

ஆனால் பி. ஜெ. பி.யினர், ''நாங்கள் முஸ்லீம்களுக்கு எதிரானவர்கள் அல்ல, எங்கள் கட்சியின் துணைத் தலைவர் சிக்கந்தர் பக்த் ஒரு முஸ்லீம்தான். இது தவிர உ. பி. அரசின் மந்திரி சபையிலும் ஒரு முஸ்லீம் பிரதிநிதி இருக்கிறார். மற்ற கட்சிகள் முஸ்லீம்களின் வோட்டைப் பெறுவதற்கு எங்களைப் பயன்படுத்துகிறார்கள்'' என்று பதில் சொல்கின்றனர். ''இந்த நாட்டின் மெஜாரிட்டி இன மக்கள் என்னென்ன சலுகைகள் பெற்று வாழ்கிறார்களோ அதைப் போலவே நீங்களும் வாழுங்கள். உங்களுக்கு எதற்கு தனிச் சலுகைகள், சட்டங்கள்' என்று தான் நாங்கள் கேட்கிறோம்'' என்கிறார்கள் பா. ஜ. க. வினர்.

ஆனால் முஸ்லீம்களின் கவலை நீடிக்கவே செய்கிறது. ''இன்று இந்து முன்னணி மேடைகளில் என்ன சொல்கிறார்கள்? 'முஸ்லீம்களே! உங்கள் நாடான பாகிஸ்தானுக்குப் போய் விடுங்கள்' என்கிறார்கள். இது எப்படி சாத்தியம்? நாங்கள் இந்நாட்டு மண்ணுடன் இரண்டறக் கலந்தவர்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் எங்கள் நிலை என்ன?'' என்று கேட்டார் நாகர்கோவிலைச் சேர்ந்த இஸ்மாயில்.

''பா. ஜ. க. ஆளும் மாநிலங்களில் சில பொறுப்பான பதவிகளுக்கு, தகுதிகள் இருந்தும் நியமிக்கப்படாமல் முஸ்லீம் அதிகாரிகளைப் பழிவாங்கி இருக்கிறார்கள். அதே போல் போலீஸ் நிர்வாகத்திலும் சில முக்கியமான பதவிகளில் முஸ்லீம் அதிகாரிகளை நியமிப்பதைத் தவிர்க்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் தக்க காரணம் இன்றி முஸ்லீம் தலைவர்கள் சிலரைச் சிறையில் போட்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் யாரிடம் சொல்லி முட்டிக் கொள்வது? இவர்கள் மத்தியில் ஆட்சிக்கு வந்தால் எங்களுக்கென்ன நியாயம் கிடைக்கும்'' என்று கேட்கிறார் டெல்லியில் வேலை பார்க்கும் தமிழகத்தைச் சேர்ந்த இலியாஸ் அகமது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி ஜனவரி 1, 1942

மூன்று இன்பங்கள்



தமிழின்பம் என்றும், சங்கீதானந்தம் என்றும், பக்திப் பேரின்பம் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். மேற் சொன்ன இன்பத்தையும் ஆனந்தத்தையும் பேரின்பத்தையும் ஓயாமல் அநுபவித்துத் திளைத்துக் கொண்டிருக்கும் பெரியார் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர். ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதாக நமது திருப்புகழ் மணி அவர்கள் தமிழையும் இசையையும் பக்தியையும் கலந்து பிறருக்கும் ஊட்டி வருகிறார். அவருடைய தமிழிசை பஜனையை பதினாயிரக் கணக்கான தமிழர்கள் கேட்டு ஆனந்தித்திருக்கிறார்கள்.

''கல்கி''யைத் ''தமிழர்களின் சொந்தப் பத்திரிகை'' என்று நாம் தெரியப்படுத்தியிருந்தோம். தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான்தான் ''கல்கி''க்கு மூலதனம் அளித்தவர் என்பதை இச்சமயம் வெளியிட விரும்புகிறோம். ''கல்கி'' பத்திரிகை ஆரம்பிக்கப் போகும் செய்தி அறிந்ததும் திருப்புகழ் மணி அவர்கள், பெருமான் முருகனின் ஆறுமுகங்களின் சின்னமாக ஆறு ரூபாய்களைத் தமது அன்புடனும் ஆசியுடனும் மூலதனத்தில் சேர்க்கும்படி அனுப்பி வைத்தார். அந்த ரூபாயைக் கொண்டு வாங்கிய மரத்தின் பேரில்தான் ''கல்கி''யை அச்சிடும் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டிருக்கிறது.

விபரீத வருஷம்

கடந்த 1941-ம் வருஷத்தைப் பற்றி நாம் நல்ல வார்த்தையாகச் சொல்லக் கூடியது ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதாவது, நல்ல வேளையில் 1941-ம் வருஷம் போய் விட்டது என்பதுதான்!

வருஷம் சென்று விட்டாலும் அதில் நடந்த விபரீத சம்பவங்களை நாம் வெகு காலத்துக்கு மறக்க முடியாது. சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில்தான் ஹிட்லரின் கீழ்த் திசைப் பாய்ச்சல் ஆரம்பமாயிற்று.

- தலையங்கத்தின் தொடக்கம்

சங்கீத விழாக்கள்

வருஷா வருஷம் மகாநாட்டின் திறப்பு விழா அன்று எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி ஜனங்கள் கூடியிருப்பது வழக்கம். இந்த வருஷத்தில் காலி நாற்காலிகள்தான் அதிகம் காணப்பட்டன. 'குரூப்' போட்டோ எடுத்த இடத்தில் மட்டும் வழக்கம் போல் கூட்டம் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது!

உலகத்தில் யுத்தக் கப்பல்கள் - வியாபாரக் கப்பல்களுக்கெல்லாம் எவ்வளவோ ஆபத்துகள் விளைந்து கொண்டிருந்தாலும், கர்நாடக சங்கீதக் கப்பலுக்கு மட்டும் எந்த வித அபாயமும் இல்லையென்பதற்கு அறிகுறியாக மகாநாட்டை சிரமப்பட்டுத் திறந்து வைத்த பிட்டாபுரம் மகாராஜாவுக்கு சங்கீத வித்வத் சபையார் ஒரு வெள்ளிக் கப்பலைப் பரிசளித்ததும் பாராட்டத்தக்கதாயிருந்தது.

- ஆடல் - பாடல் - கர்நாடகம்

சில சுறுசுறுப்புக் காரர்கள்

இவ்வளவு சுறு சுறுப்பாகப் படிப்பிலும் எழுத்திலும் ஈடுபட்டிருக்கிறாரே, சிநேகிதர்களுடன் பேசுவதற்கே அவருக்கு அவகாசம் இருக்காதோ என்று தோன்றலாம். அப்படியில்லை. அவருடைய வேலைத் திட்டத்தில் ''நண்பர்களுடன் அளவளாவுதல்'' என்று ஒரு 'ஐட்டம்' இருக்கும். அதற்கு இவ்வளவு நிமிஷம் என்று ஒதுக்கி வைத்திருப்பார். அந்த நேரம் வந்து விடப் போகிறதே என்று நண்பர்கள் பீதியுடன் முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

ஸ்ரீ அவிநாசிலிங்கம் சிநேகிதர்களுடன் அளவளாவுதல் என்றால், அவர்களுடைய முதுகுக்குக் கொஞ்சம் அபாயந்தான்.



முதுகிலே 'ஷொட்டு'க் கொடுக்காமல் அவரால் அளவளாவ முடியாது. கையிலே பத்திரிகை, புத்தகம் ஏதாவது இருந்தால், அவை மூலமாகவே, அளவளாவத் தொடங்கி விடுவார். புத்தகத்துக்குஞ் சேதம், முதுகுக்கும் அபாயந்தான்!


முதுகிலே 'ஷொட்'டுக் கொடுக்கிறவரைப் பற்றிச் சொல்லும் போது, தொடையில் தட்டிக் கொடுக்கிறவரைப் பற்றி ஞாபகம் வருகிறது. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சிறையில் சாத்வீக வாழ்க்கை நடத்தியவர்களில் ஒருவர்; காந்திஜியின் சிறந்த சீடர்;... ஆனாலும் அவர் பூரண அஹிம்சா தர்மி என்று சொல்வதற் கில்லை. பக்கத்திலுட்கார்ந் திருப்பவர்களின் தொடைக்கு அவரால் ரொம்ப ஹிம்சை உண்டு. அவருக்கு சந்தோஷமும் உற்சாகமும் எவ்வளவுக்கு அதிகமாகிறதோ, அவ்வளவுக்கு மேற்படி ஹிம்சையும் அதிகமாகி விடும். வால்மீகி ராமாயணம் கேட்பதற்குத் தவறாமல் அவர் வருவதுண்டு. அவர் வந்து எந்த இடத்தில் உட்காருகிறார் என்று பார்த்துக் கொண்டு, மற்றவர்கள் விலகி உட்காருவது வழக்கம். சில சமயம் அதிகம் பேர் வந்து விட்டால் இப்படி விலகி உட்கார சாத்தியப்படாது. அப்போது அவர் பக்கத்தில் யாருக்கு இடங்கிடைக்கிறதோ, அவர்கள் பாடு ஆபத்துத்தான். ஸ்ரீ வரதாச்சாரியின் இராமாயண பக்தி உச்ச ஸ்தாயிக்குப் போகும் சமயங்களில் ஸ்ரீ ரெட்டியாருக்கும் குதூகலம் பிறந்து விடும்.



அந்தக் குதூகலத்தில் மெய்மறந்து பக்கத்திலிருப்பவர்களின் தொடையில் பளீர் என்று அடித்து விடுவார். ஸ்ரீ ரெட்டியாரின் குதூகலத்தை நாலைந்து தடவை ருசி பார்த்த பிறகு ஸ்ரீ சந்தானம் ஒரு யுக்தி செய்தார். இராமாயணத்துக்கு வரும் போது கையில் ஒரு தலையணையையும் எடுத்துக் கொண்டு வந்து தொடை மீது வைத்துக் கொள்வார்! விழுகிற அறை தலையணை மீது விழட்டும் என்றுதான்.

– மூன்று மாதம் கடுங்காவல்

திரும்பி வந்தார்



தமிழகத்தில் பி.ஜே.பி.

தமிழகத்தில், ஜனசங்கம், மற்றும் அதன் தொடர்ச்சியான பா. ஜ. க.வை வளர்த்த பெருமை, ஜனா கிருஷ்ண மூர்த்திக்கும் விஜயராகவலுக்கும் உண்டு. ''இவர்களுக்கு ஒரு செல்வாக்கும் இங்கு கிடையாதே'' என்று சொல்லி வந்த மாற்றுக் கட்சிக்காரர்கள் கூட இப்போது கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சென்ற சட்டமன்றத் தேர்தலில், பத்துத் தொகுதிகளில், கணிசமான வோட்டுக்களை பி.ஜே.பி. வாங்கியிருக்கிறது.

இன்று பா. ஜ. க. வின் அகில இந்தியத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் ஜனா கிருஷ்ணமூர்த்தி மதுரையைச் சேர்ந்தவர். மற்ற பா. ஜ. க. தலைவர்களைப் போலவே இவரும் அடிப்படையில் ஆர். எஸ். எஸ்.தான். இவர் அப்பாவும் இந்த இயக்கத்தில் இருந்தவர். வழக்கறிஞர் பணி செய்து வந்தாலும், 1968-ல் தீனதயாள் உபாத்யாயாவின் மரணத்திற்குப் பின்னர், கட்சியில் தம்மை முழு நேர ஊழியராக இணைத்துக் கொண்டார். எமர்ஜென்ஸியின் போது, தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர். அப்போது பல்வேறு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக் கிடையே, ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். கடைசிவரை போலீஸ் கண்ணில் படவில்லை. சென்னை தி. நகர் சட்டமன்றத் தொகுதியில் இருமுறை போட்டியிட்டுத் தோல்வியடைந்த இவர், 1980-ல் பா. ஜ. க. ஆரம்பித்ததிலிருந்து அகில இந்திய அளவில் பொறுப்புகள் வகித்துக் கொண்டிருக்கிறார். அத்வானியின் அடியொட்டி நடப்பவர்.



● விஜயராகவலு

தமிழகத் தலைவராக இருக்கும் விஜய ராகவலு, பின்னி ஆலையில் தொழிலாளியாக இருந்தவர். அங்கு பாரதிய மஸ்தூர் சங்கம் என்ற தொழிற்சங்க அமைப்பை ஆரம்பித்தார். இவரது சொந்த ஊர் பாண்டிச்சேரி என்றாலும் சென்னையிலேயே செட்டிலாகி விட்டவர். 1949-ல் ஆர். எஸ். எஸ். தடைசெய்யப்பட்ட போது, இவர் கைதாகி, அடி, உதைகள் பட்டவர். இதுவரை தேர்தலில் நின்றதில்லை. எமர்ஜென்ஸியின் போது பாதிக்கப்பட்ட தொண்டர்களின் விடுதலைக்காக கோர்ட் வேலைகளைப் பார்த்தவர். மாவட்டத் தலைவர் பதவியிலிருந்து மாநிலத் தலைவராக உயர்ந்திருப்பவர். இது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி. பெரம்பூரில் பெரிய அளவில் பால் பண்ணை நடத்தி வருகிறார். ''இவர் தலைவராக வந்த பிறகு தமிழகத்தில் கட்சி வேகமாக வளர்ந்திருக்கிறது'' என்கிறார் பா.ஜ.க. அலுவலக செயலாளர் ராமகிருஷ்ணன்.



● ஜனா கிருஷ்ணமூர்த்தி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka